திராவிட முன்னேற்றக் கழக முதல்

மாநாடு-மலர்

Maximum light given.

போர்வாள்

மாநில மாநாட்டு மலர்

★

விலை அணா எட்டு

ஆசிரியர்கள் :
காஞ்சி மணிமொழியார் மா. இளஞ்செழியன் B. A (Hons)

வாள்	சென்னை 5—1—52	வீச்சுகள்
5		15, 16, 17, 18

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு

நடைபெற்ற நாட்கள்

1951 டிசம்பர் 13, 14, 15, 16

இடம் :

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம்

தலைவர் :

அறிஞர் அண்ணாதுரை

திறப்பாளர் :

கே. கே. நீலமேகம்

கண்காட்சித் திறப்பாளர் :

சி. பி. சிற்றரசு

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliar at Free Printers
147, Coral Merchant St., Madras. Joint-Editor M. Elancheliyan B. A. (Hons)

Best copy available.

புன்னகையும் பெருமூச்சும்

"இதுகளாவது மாநில மாநாட்டை நடத்துவதாவது!"

"மாநில மாநாடு என்றால் சாமான்யமா! ஏராளமாகப் பணம் வேண்டுமே! இதுகளிடம் ஏது அவ்வளவு பணம்?"

"இவர்களென்ன இலட்சாதிபதிகளா? பணம் படைத்த பெரியார்களா? சீமான்களா—பூமான்களா? கேவலம் அன்னக்காவடிகள்! இவர்கள் எப்படி ஒரு மாநில மாநாட்டை நடத்திவிட முடியும்?'

"அடுக்கு மொழியில் பேசுவார்கள்! அலங்கார நடையில் எழுதுவார்கள்! அவ்வளவுதான்! வேறென்ன தெரியும் இவர்களுக்கு? வெறும் பேச்சும் எழுத்தும் மாநாடாகிவிட முடியுமா? காரிய மாற்றும் திறமை வேண்டுமே! அது ஏது இவர்களிடம்?'

"சின்னஞ் சிறுசுகள், பிஞ்சிலே பழுத்ததுகள்! அனுபவம் அற்றதுகள்! மாகாண மாநாடா! நடத்தப்போகிறார்களா? வெறும் கனவு! வீண் பிரலாபம்!"

"நேற்றுவந்து இன்று பேச்சாளர் ஆனதுகள்! இதுகள் ஒரு மாகாண மாநாட்டை நடத்துவது என்றால் தோல்வியைத் தவிர வேறென்ன விளைவை இதுகள் காணமுடியும்?"

இடையூறுகளையெல்லாம் இடறித் தள்ளிவிட்டு, எதிர்ப்புகளை யெல்லாம் தூள்தூளாக்கிவிட்டு, ஆபத்துக்களை யெல்லாம் அழித்து ஒழித்துவிட்டு, அடக்குமுறை அம்புகளை யெல்லாம் முறிந்துவிழும்படி செய்துவிட்டு, ஆளவந்தார்களின் ஆர்ப்பாட்டங்களை யெல்லாம் அடங்கி ஒடுங்கும்படி செய்துவிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் வேகமாக வளர்ந்து, விரைவாக நடந்து, இரண்டாண்டுகளைக் கடந்து, மாநில மாநாட்டை நடத்த முயல்வது என்கிற முக்கியமான கட்டத்தில் வந்து நின்றபோது, நம்முடைய வளர்ச்சியைக் கண்டுபொறாமைப்பட்ட பொச்சரிப்புக்காரர்களும், நம்முடைய இயக்கத்தின் எழுச்சி தங்களுடைய ஆர்ப்பாட்டத்தின் வீழ்ச்சி என்பதைத் திட்டவட்டமாக உணர்ந்துகொண்ட எதிர்க்கட்சித் தோழர்களும் மேலேகண்ட விதமாக வெல்லாம்தான் தங்களுடைய மன எரிச்சலை வார்த்தை வடிவிலே ஊர் மக்களிடத்திலே நடமாட விட்டனர்.

இலட்சம் பேர் கொண்ட மாநாட்டு ஊர்வலத்தின் ஒரு சிறு பகுதி



திராவிடத் தாய்மார்களும் ஊர்வலத்தில் மட்டற்ற ஆர்வத்துடன் சென்றிடும் காட்சி!

மாநில மாநாடு நடக்கவே நடக்காது என்று அவசர ஆருடம் கணித்தார்கள்.

ஒருக்கால் அது நடந்தாலும், தோல் விச்சித்திரமாக அது காட்சி தருமே தவிர வெற்றிவிழாவாக அது ஒருபோதும் இராது என்று கண்களைச் சிமிட்டியபடி பேசினார்கள்.

மாநாடாவது! நடப்பதாவது! பார்ப்போமே அதையும்தாம்! என்று அர்த்தமற்ற அறைகூவல் விடுத்தார்கள்.

ஏசல்—கிண்டல்—கேலி—தூற்றல்—வசைமாரி—இந்த அம்புகளை ஓயாமல் விடுத்தபடி இருந்தால் ஓய்ந்துவிட மாட்டார்களா இந்த ஓய்வறியா உழைப்பாளிகள் என்று எண்ணிக் கொண்டு அந்தப் புண்ணிய காரியத்தையும் செய்து பார்த்தார்கள் சில புனித மூர்த்திகள்.

ஆனால், மாநில மாநாடு, இவ்வளவு கேலி கிண்டல்களையும் தாண்டிக் கொண்டு, இத்தனை ஏசல்கள் எதிர்ப்புகளையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு, வீர நடை நடந்து, இறுதியில், வெற்றி புரியை அடைந்துவிட்டது.

மாநாடு மகத்தான முறையில் நடைபெறாது என்று யார் யார் அவசர ஆருடம் கணித்தார்களோ, அவர்களே, பிறகு, மூக்கின்மீது விரல் வைத்தபடி ஆச்சரியத்தால் அசையாச் சிலைகளாகி விடுமளவு, மாநாடு, வெற்றிபெற்றிருக்கிறது

பொறாமைக்காரர்கள்,
விஷ எழுத்தாளர்கள்,
நச்சு நினைப்பினர்கள்,
முன்னாள் பாசத்தை மறந்துவிட்டவர்கள்,
கெடுதலை ஏடுகள் தீட்டுபவர்கள்,
திட்டுவதையே தொழிலாகக் கொண்டவர்கள்,

அத்தனை பேருடைய விஷமத் தாக்குதல்களும் விபரீதக் கிண்டல்களும் தூள்தூளாகிவிட்டன மாநாட்டுச் சேதிகள் அடுக்கடுக்காக வந்து அவர்கள் செவிகளில் வீழ்ந்தபோது!

மாநாட்டுச் சேதிகள் என்றால் அவை என்ன சாமான்யமானவையா? இல்லையே! சில்லறைக் காட்சிகள் பற்றிய சொல்லோவியங்களா? அல்லவே! ''அப்படியா—சரிதான் போ'' என்று சொல்லி ஒதுக்கிவிடக் கூடியவையா? கிடையாதே! மாநாடு பற்றிய சேதி ஒவ்வொன்றும் பொறாமைக்காரர்கள் உள்ளத்துக்கு ஒவ்வொரு இடிபோன்றது! ஆனால் அதே நேரத்தில், இலட்சியவாதிகளின் இதயத்துக்கோ ஒவ்வொரு கற்கண்டுக் கட்டி போன்றது. மாநாட்டு ஊர்வலமா—அப்பப்பா அது

மாபெரும் பந்தலை மகத்தான ஊர்வலம் வந்தடைகின்றது காணீர்! மக்கள் முகத்திலெல்லாம் வீரம் ததும்பும் காட்சியைப் பாரீர்!

ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் கழகக் கொடிகளை ஏந்திச் செல்கின்றனர் ஊர்வலத்தில்! என்ன ஆர்வம், எவ்வளவு உற்சாகம்!

பிரம்மாண்டமானது என்று எதிரிகளின் ஏடுகளே எழுதுகின்றன மாநாட்டுக் கொட்டகையா-பாண்டிய மன்னனின் அரண்மனை போன்றது என்று அதைப் பார்க்கவந்த தோழர்களெல்லாம் கூறிடலாயினர். மாநாட்டில் திரண்டிருந்த தோழர்களின் தொகையா—அடே அப்பா அது இரண்டு இலட்சத்திற்குக் குறையாதே என்று, நாமல்ல, சென்னை நகரமே பூரிப்புடன் கூறுகிறது. வந்திருந்த தோழர்களின் ஆர்வமா—அதைச் சொல்லவும் வேண்டுமா—ஒவ்வொரு தோழரும் ஒவ்வொரு நடமாடும் திராவிடமாக அல்லவா காட்சி தந்தனர். திராவிடத் தனியரசுப் பிரச்சினையிலே அவர்கள் காட்டிய உறுதியா—அந்தத் துறையிலே அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அண்ணாத்துரை அல்லவா?

ஆமாம், நண்பர்களே, நம் மாநில மாநாடு, அதன் வெவ்வேறுபட்ட துறைகள் அத்தனையிலேயும் முழு வெற்றியையே பெற்றிருக்கிறது என்பதை நாம் அழுத்தந் திருத்தமாகக் கூறமுடியும்.

வெள்ளம்போன்ற ஊர்வலம்! சிறிய நகரம் போன்ற பந்தல்! கடல்போன்ற மக்கட்கூட்டம்! அவர்கள் உள்ளத்தில் அருவிபோன்ற ஆர்வம்! முகத்தில் தமிழ்போன்ற புன்னகை! செய்கையில் வயிரம் போன்ற உறுதி! மேடை மீது படைத்தளபதிகள் போன்ற தலைவர்கள்! அவர்களிடையே, பேரறிஞர் பர்னாட்ஷா போன்ற—அல்ல—மாவீரர் மாசேதுங் போன்ற—அல்ல அல்ல—சோவியத் செஞ் சோதி ஸ்டாலின் போன்ற—அதுவுமல்ல-வேறு யாரோடும் ஒப்பு உவமை கூறமுடியாத திராவிடத்தின் திருவிளக்கு அண்ணா! ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளோ பகுத்தறிவுக் கருவூலங்கள்! செய்யப்பட்ட தீர்மானங்களோ இலட்சியக் காதலிக்கும் அனுபவக் காதலனுக்கும் பிறந்த சிங்கக் குழந்தைகள்! ஆம்! இதுதான் நம் மாநில மாநாடு!

இந்த மாநாடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கு எவ்வளவு பலமானது என்பதை எடுத்துக்காட்டிய எழிலோவியம். கழகம் உறுதியோடும் கட்டுப்பாட்டோடும் நடப்பதற்குத் தேவையான சட்டதிட்டங்க

நம் இலட்சிய கீதத்தைத் தலைப்பில் கொண்ட மாநில மாநாட்டின் அழகிய முகப்பு



மாநாட்டுத் தலைவர் அண்ணாவும், திறப்பாளர் நீலமேகமும், கோச்சில் அமர்ந்தபடி ஊர்வலத்தில் செல்லும் காட்சி.

ளைத் தீட்டித் தந்திருக்கிற மக்கள் மன்றம்! நம்முடைய நாட்டிலேயும் பொதுவாக உலகிலேயும் குமுறிக்கொண்டிருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளையும் இலட்சியத் தராசிலே ஏற்றி வைத்து, திராவிடத் தனியரசு என்கிற படிக்கற்களைக்கொண்டு, எடைபோட்டுப் பார்த்துத் தெளிவான முடிவைத் தந்திருக்கிற நீதிதேவன். திராவிடநாடு திராவிடருக்கே என்கிற உயர்ந்த இலட்சியத்தின்மீது ஆழ்ந்த பற்றுதல் கொண்டுள்ள அருமைத் திராவிடத் தோழர்கள் ஆயிரமாயிரவர் உள்ளத்திலேயும் புதியதோர் எழுச்சியையும் ஆர்வத்தையும் உருவாக்கியுள்ள உணர்ச்சித்தூதுவன். எதிர்காலத்திலே, கழகம் எப்படியெப்படிப் பணியாற்றி, என்னென்ன திட்டங்களை நிறைவேற்றி, எந்தெந்தத் துறையிலே எந்தெந்த வெற்றிகளை, என்ன என்ன முறையிலே பெறவேண்டும், என்பதை எழில்பட எடுத்துவிளக்கியுள்ள வருங்கால வழிகாட்டி.

இந்த மாநில மாநாடு, சுதந்தர சமதர்மத் திராவிடக் கூட்டாட்சி என்கிற, இனி நாம் எழுப்ப இருக்கிற, நாட்டு மக்கட்கெல்லாம் நல்வாழ்வை அளிக்கக் கூடிய இன்பமாளிகையின் கால்கோள் விழாவாகும்.

எனவேதான் இந்த மாநாட்டின் மாபெரும் வெற்றியைக் கண்டு, நாடு நலம் பெறவேண்டும் என்று எண்ணுகிற நல்லறிவாளர்கள் முகத்திலெல்லாம் புன்னகை ததும்புகிறது.

அதே காரணத்தால்தான், அதே நேரத்தில், சூதுமதிபடைத்த சுயநல பிம்பங்கள்—பொறாமைக் கண்கள் உடைய பொல்லாங்கு நெஞ்சங்கள்—அழுக்குமனம் படைத்த ஆதிக்கவாதிகள்—சமுதாயத்தைப் பின்நோக்கி இழுக்கும் பிற்போக்குச் சக்திகள் ஆகியோருக்கு, இந்த மாநாட்டைக் கண்டதும், தங்களுடைய சுயநலக் கோட்டை சடசடெனச்சரிகிறதே என்கிற நினைப்பின் அடிப்படையில் பெருமூச்சு ஏற்படுகிறது.

வாழ்க அந்தப் புன்னகை! வளர்க இந்தப் பெருமூச்சு!

வாழ்க திராவிடம்!

தலைவர் அண்ணாவுக்கு வரவேற்புத் தலைவர் என். வி. நடராசன் அன்புமாலை சூட்டும் அழகிய நிகழ்ச்சி



விஞ்ஞான வித்தகர் ஜி. டி. நாயுடு தென்னாட்டுப் பெர்னாட்ஷாவுடன் மாநாட்டின்போது பேசிக்கொண்டிருக்கிறார்.

ஆற்றல் வீரர்களின் அணிவகுப்பு!

சென்னை காணாத காட்சி

13—12—51 வியாழன் அன்று காலை 9 மணிக்கு, சென்னை இராயபுரத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையக் கட்டிடத்துக்கு அருகிலிருந்து புறப்பட்ட மாநில மாநாட்டு ஊர்வலம், மகத்தானதோர் சம்பவமாகும். அந்தக் காட்சியின் மாட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளரும் சக்திக்கு ஒரு சிறந்த சாட்சி என்பதை யார் மறுக்கமுடியும்?

குவிந்தது பார் மக்கள் பட்டாளம்!

காலை 9 மணிக்கு ஊர்வலம் தொடக்கமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், காலை 7 மணிமுதலாகவே, திராவிடத் தீரர்கள், குடும்பம் குடும்பமாகவும், அணி அணியாகவும், ஆயிரம் ஆயிரமாகவும், கழகக்கட்டிடத்தை நோக்கி, பட்டாளம் பட்டாளமாக வந்து குவியலாயினர். அவர்களிலே பெரும்பாலோர் கைகளிலே, கழகக் கொடிகள் கம்பீரமாகப் பறக்கலாயின. அவர்கள் அனைவர் உதடுகளிலேயும், திராவிட நாடு திராவிடருக்கே என்கிற இலட்சிய முழக்கம் இடிமுழக்கமென எழுந்திடலாயின. அவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும், இயக்க ஆர்வம் அலைமோதலாயிற்று. நேரம் ஆக ஆக கூட்டம் அளவில் பெருகிக்கொண்டேவந்து, ஊர்வலம் புறப்பட்ட நேரத்தில் 50,000 என்று தாராளமாக எவரும் மதிப்பிடக்கூடிய எண்ணிக்கையை அடைந்தது திரண்டு குழுமியிருந்த மக்கட் பட்டாளம்.

ஊர்வலர் அமைந்த விதம்

அழகாக ஒப்பனை செய்யப்பட்டிருந்த யானை. அதற்குப் பின்னே ஐந்து குதிரைகள் மீது இயக்க வீரர்கள் ஐவர் சேனைத் தலைவர்கள் போல கம்பீரத் தோற்றத்துடன் அமர்ந்து, ஊர்வலத்தை நடத்திச் செல்கின்றனர்! முதலிற் செல்லும் குதிரை வீரர், சேனைத் தளபதிபோல உடை அணிந்து, உறுதி ததும்பும் தோற்றத்துடன், நீண்டதோர் கழியில், கழகக் கொடியை ஏந்திச் செல்கிறார்! குதிரைகளைத் தொடர்ந்து வருகின்றனர் குவலயமே எதிர்த்து நின்றாலும் கொள்கையினின்றும் வழுவாத இலட்சியக் காளைகளாகிய மாநாட்டுப் பிரதிநிதிகள். சென்னை மாவட்டம், சேலம் மாவட்டம், நாஞ்சில் மாவட்டம், தஞ்சை மாவட்டம் என்று இந்த விதத்திலே ஒவ்வொரு மாவட்டக் கழகத்தின் பெயர் பொறித்த கொடி முதலிற் செல்ல, அந்தந்த மாவட்டக் கொடியைத் தொடர்ந்து, அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைக் கழகப் பிரதிநிதிகள் தத்தம்

அறிஞர் அண்ணா தலைமை வகிக்கிறார்!
தம்பிமார்களெல்லாம்
புடைசூழ்ந்து நிற்கின்றனர்!

மாநாட்டுப் பந்தலின் நுழைவு வாயில்!
அழகான காட்சி! அருமையான
இலட்சிய விளக்கம்!

கழகப் பெயர் பொறித்த கருஞ்சிவப்புக் கொடிகளைத் தாங்கிய வண்ணம் ஏறு நடை நடந்து செல்கின்றனர். இந்த அழகிய அணி வகுப்பை அடுத்து, சைகில் தொண்டர்கள் ஊர்வலம்! ஒவ்வொரு சைகில்மீதும் கழகக் கொடி! சைகில் ஊர்வலத்துக்குப் பின்னுல், மாதர் குலத்தவரின் மனஉறுதியைத் தெரிவிக்கும் வகையிலே அமைந்த சிறந்த ஊர்வலம்! அதனையும் அடுத்து, திறந்ததோர் காரிலே, மாநாட்டுத் தலைவர் அண்ணு, வெற்றி வேந்தர் போல, புன்னகை ததும்பும் முகத்துடனே, நின்றபடி செல்கிறுர். அந்த மாவீரரைக் கண்டு மனமெல்லாம் பூரித்த வண்ணம், ஐம்பதாயிரத்துக்குக் குறையாத திராவிடத் தீரர்கள், இலட்சிய நடை நடக்கின்றனர். திராவிடநாடு திராவிடருக்கே! அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை! இன்பத் திராவிடமே எமது இலட்சியம்! அறிஞர் அண்ணுதுரை நீடுழி வாழ்க என்பன போன்ற இலட்சியச் சொற்கள் விண்ணைப் பிளந்து செல்கின்றன! இது, ஊர்வலம்! இந்த ஊர்வலம் சரியாக ஒன்பது மணிக்குப் புறப்படலாயிற்று.

அசைந்தசைந்து செல்லும் அருமையான ஊர்வலம்!

ஊர்வலம், இராயபுரத்திலிருந்து புறப்பட்டு, பிராட்வே வழியாகச் சென்று, அண்ணுப் பிள்ளை தெருவுக்குள் புகுந்து, கொத்தவால்சாவடியைக் கடந்து, சௌகார் பேட்டையைத் தாண்டி, யானை கவுனியைவிட்டு அகன்று, சால்ட் கோட்டர்ஸ் வழியாக, எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் அமைந்துள்ள மாநாட்டுப் பந்தலை அடையும்போது மணி நடுப்பகல் ஒன்று. பந்தலை அடையும்போது, ஊர்வலத்தில் திரண்டிருந்த மக்களின் தொகை ஒரு இலட்சத்திற்குக் குறையாமல் இருக்கும். ஊர்வலத்தின் நீளம் இரண்டு மைல் இருக்கும். அது நடந்து வந்திருக்கிற பயணத்தின் தூரமோ ஏறத்தாழ ஐந்து மைல்.

ஊர்வலம் சென்றபோது..........!

இராயபுரத்தில் தொடக்கமாகிய ஊர்வலம், மூர் மார்க்கெட்டுக்குப் பின்னுல் உள்ள மைதானத்தை அடைகிற வரையில், இடையிலே, வழிநெடுக, வீதிகளின் இரு மருங்கிலும், ஏராளமான தோழர்கள், கையொலி செய்தும், வாழ்த்தொலி முழங்கியும் ஆரவாரம் செய்தனர்.

மாநாட்டுத் தலைவர் அண்ணுவுக்கு வழி நெடுக மலர்மாலைகளைச் சூட்டியபடி இருந்தனர் பொதுமக்கள். அவருடைய கார், பூந்தோட்டமாகிவிட்டது. அவரோ, மலர்மாலைக் கடலுக்குள்ளே மூழ்கிவிட்டார். சூட்டப்பட்ட மாலைகள், அவ்வளவு ஏராளம்!

தலைவர் அண்ணுவின் காரை அடுத்து, மாநாட்டுத் திறப்பாளர் நீலமேகம், வரவேற்புத் தலைவர் என். வி. நடராசன், விளம்பரச் செயலாளர் கருணுநிதி, கண்காட்சித் திறப்பாளர் சிற்றரசு, தோழியர் சத்தியவாணிமுத்து முதலானவர்கள் கார்களிலே வருவதைக் கண்ட மக்கள் மட்டிலா ஆர்வம் கொண்டு தங்கள் மன மகிழ்ச்சியை வாழ்த்தொலிகள் மூலம் தெரிவித்துக் கொள்ளலாயினர்.

தலைவர் அண்ணு வீரமுழக்கமிடுகிறுர்! அந்த முகத்திலே தான் என்ன கம்பீரம் என்ன உறுதி!

ஈ. வெ. கி. சம்பத் வல்லரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்பதுபற்றிப்பேசும் எழில்மிகு காட்சி.

மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவராகி மனேகரன், சொற்பொழிவாற்றுகின்ற சுவை மிக்க சம்பவம்.

மாநாட்டுச்செயலாளர்களாகிய மனோகரன், மணிமொழியார், பிரசாரக் குழு செயலாளர் நண்பர் நெடுஞ்செழியன், திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோரும், ஏனைய பல முன்னணி வீரர்களும் மாநாட்டு ஊர்வலத்தை ஒழுங்குபடுத்தியபடி, போக்கு வரத்துக்குச் சிறிதளவும் இடையூறு ஏற்படாதபடி, நற்பணி ஆற்றிக் கொண்டிருந்தனர்.

நீலநிற காற்சட்டையும், வெள்ளை நிறமேற் சட்டையும், கீழ்ப்பாதி சிகப்பும் மேற்பாதி கருப்பும் நிறமாகக் கொண்ட குல்லாயைத் தலையிலேயும் கொண்டிருந்த மாநாட்டுத் தொண்டர்களை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். ஊர்வலத்தைப் போக்குவரத்துக்கு இடையூறின்றி நடத்திச் செல்வதிலே அவர்கள் காட்டிய ஆர்வமும், ஆற்றிய பணியும் அவ்வளவு சிறப்பானது.

வெற்றியை அறிவிக்கும் விடிவெள்ளி!

ஊர்வலம் முடிந்ததும் நடைபெற இருக்கிற மாநாடு எவ்வளவு வெற்றிகரமானதாக இருக்கும் என்பதை முன்கூட்டியே அறிவிக்கிற விடிவெள்ளியாக இருந்தது ஊர்வலத்தின் மாட்சி.

அந்த ஊர்வலம், ஆற்றல் வீரர்களின் அணிவகுப்பு. ஆம்! எதிர்காலத்தில் நடைபெறவிருக்கிற பல அறப்போராட்டங்களுக்கான ஒத்திகை.

திராவிடர்
பொங்கல் வாழ்த்து

அழகிய திராவிட நாடு
அண்ணா படங்களுடன் 0—2—0

இன்னும் 20 ரகங்களில் பொங்கல் வாழ்த்து தயாராக இருக்கிறது
தேவைக்கு உடனே எழுதுக:—

பகுத்தறிவுப்பாசறை
147, பவழக்காரத் தெரு,
சென்னை, 1.

கண்காட்சித் திறப்பாளர்—கனல் தெறிக்கும் பேச்சாளர்—நண்பர் சி. பி. சிற்றரசு, தம் தோழர்கள் பலர் சூழ்ந்திருக்க, புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கும் எழில் மிக்க நிகழ்ச்சி.

மாநாட்டுச் செயலாளர்கள மணிமொழியாரும், மனோகரனும், சொற்போர் மன்னர்களாகிய இரா. நெடுஞ்செழியன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, காஞ்சி கல்யாணசுந்தரம், கே. ஏ. மதியழகன் ஆகியோருடன், மாநாட்டு மேடை நோக்கிச் செல்லும் மனோகரமான காட்சி.

அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை!

அறிஞர் அண்ணாவின் வீரமுழக்கம்

★

மாநில மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய தலைமைச் சொற்பொழிவின் விவரம் :—

வரவேற்புக் குழுவினருக்கும் மாநிலமெங்குமிருந்து வந்துள்ள பிரதிநிதிகளுக்கும், நண்பர்களுக்கும் வணக்கம் கூறுகின்றேன். திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநில மாநாட்டில் அன்பையும் விருப்பத்தையும் ஆர்வத்தையும் காட்டி இத்தகைய வெற்றி பொருந்திய ஒரு காட்சியை அளிக்கும் உங்களனைவருக்கும் நன்றி செலுத்துகின்றேன். இத்தகைய மாநாட்டைக் கூட்டிவைத்த வரவேற்புக் குழுத்தலைவர் தோழர் நடராசனுக்கும் துணையாக அமைந்திருக்கும் மாநில நண்பர்களுக்கும் வணக்கம் செலுத்துகிறேன். இங்குக் காணப்படும் இந்த மகத்தான எழிலுருவம் கண்டு பெருமைப்படுகிறேன்.

திராவிடத்தின் எதிர் காலம் பற்றி எவருக்காவது சந்தேகம் இருந்தால் 2 நாட்களாக இங்கே நடைபெறும் இந்த மாநாட்டையும், இந்த மாநாட்டில் காணப்படும் ஆர்வத்தையும், நல்ல நம்பிக்கையையும் காணும் நேரத்தில் அவர்களுக்கிருக்கும் சந்தேகம் தீர்ந்துவிடும்.

நீங்கள் என்னிடத்தில் வைத்துள்ள அன்பு எனக்கு நன்றாகத் தெரியும். "கடமையைச் செய்கிறோம் கட்டளையிடுங்கள்" என்று என்னைத் தலைமைப் பீடத்திற்கு அழைத்து வழிமொழிந்தவர்களுள் ஒருவர் கூறினார். நான் கட்டளையிடுபவனல்லன். கட்டளையிடும் பணி நம்முடையதன்று. அது முதலாளி மனப்பான்மையாகும். நான் வழிகாட்டவேண்டும் என்று கூறுகின்றீர்கள். நான் வழிகாட்டியுமல்லன். அது வைதீக மனப்பான்மையாகும். கட்டளையிடுவதோ வழிகாட்டுவதோ என் வேலையல்ல. நாம் நம் இலட்சியத்தை அடைய ஒரு பாதை அமைக்கிறோம். நம்முடைய வேலை பாதையமைப்பது தான். அந்தப் பாதையைச் செப்பமாக அமைக்கவே அன்புடன் உங்களை அழைக்கிறேன். நமக்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் சிதறுண்டு விடாமல் ஒன்றுபட்டு நம் இலட்சியத்தை அடைய நாம்

விளம்பரச் செயலாளர் மு. கருணாநிதி மேடைநோக்கிச் செல்லுகிறார் வீரமுழக்கம் புரிய. அவருக்கு இந்தப் பக்கம் நிற்பவர் காஞ்சி மணிமொழியார்! அந்தப் பக்கம் இருப்பவர் இரா. அரங்கண்ணல்!

பெண்கள் முன்னேற்றம் என்னும் பொருள் பற்றி அழகுறப் பேசி மக்களை விழிப்புறச் செய்ய, மேடை நோக்கிச் செல்கிறார் தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள்.

வகுக்கும் பாதையை வெற்றிப்பாதை யாக்க வேண்டுமென்றே அன்பு கொண்டு உங்களை அழைக்கிறேன்.

2. ஆண்டுகளுக்கு முன் நமக்கு ஏற்பட்ட நெருக்கடிமிக்க நேரத்திலே நான் சொன்ன வார்த்தைகளை நம்பி என்னிடத்தில்பாசம்-அன்பு—பற்றுவைத்து என்னோடு ஒத்துழைத்து, இன்று இவ்வளவு பெரிய வெற்றியை ஏற்படுத்திக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் என் நன்றியைச் செலுத்துகிறேன். இந்த நிலை கண்டு நான் பூரிப்படைகிறேன்.

இந்த நம்முடைய ஆர்வம் வீணாகப் போகாமல், ஏற்ற வகையில் எதிர்காலத் திட்டம் ஒன்றை அமைத்து அரசியலில் வெற்றி காண்போம். இந்தக் கூட்டு ஆர்வத்தை நாம் நல்ல வழியில் பயன்படுத்துவோம். நம்மிடம் கட்டளையில்லை. வழிகாட்டுவதில்லை. உலகத்தில் கட்டளையிடும் தலைவர்கள் தோன்றக்கூடாது.

நான் ஜனநாயகத்தில் அதிக நம்பிக்கை கொண்டவன். நான் உங்களனைவரிடமும் கருத்துக் கேட்கிறேன், என் கருத்துக்களைக் கூறுகிறேன். நாம் அனைவரும் கலந்து பேசுகிறோம். ஒரு நல்ல முடிவுக்கு வருகிறோம். நமக்கு முக்கியமாக வேண்டியது ஆற்றல்; எடுத்த பணியினைச் சிறப்புடன் முடிக்கும் ஆற்றல்; வெற்றி காண உழைக்கும் ஆற்றலே நமக்கு வேண்டியதாகும். நமக்குப் பொறுக்குந் தன்மையும் வேண்டும். எதையும் தாங்கும் இதயத்தை நாம் பெறுதல் வேண்டும்.

பொங்கல் புத்தாடை வாங்க ஏற்ற இடம்

நீடித்து உழைக்கும் கெட்டிச்சாயமுள்ள பட்டு நூல் சேலைகளையே விற்பவர்.

நம்பிக்கையும் நாணயமும் உள்ள விற்பனையாளர்.

நீண்ட நாட்களாகப் புகழ்பெற்றவர். ஒரு தடவை வியாபாரம் உண்மையை விளக்கிவைக்கும்.

சி. ஆ. இரத்தின முதலியார் & சன்ஸ்

80, திருப்பள்ளித் தெரு,
சென்னை 1.

மாநில மாநாட்டில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட "இளைஞன் குரல்" நாடகத்தில் சிறைக் கைதியாகத் தோன்றி, தோழர் மு. கருணாநிதி நம்மையெல்லாம் சிந்தனை உலகத்துக்கு அழைத்துச் செல்லும் உருக்கமான காட்சி.

மாநில மாநாட்டில், சந்திரோதயம், ஜமீன்மாளிகை ஆகிய இரண்டு நாடகங்களில் இணையற்ற முறையில் நடித்து, திரண்டு இருந்த இரண்டு இலட்சம் உள்ளங்களையும் மகிழ்வித்த நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி.

மாநாட்டில் அடிக்கடி தன் இனிய குரலாலே எழில் பட்டுப்பாடி இசை முழக்கம் புரிந்த நாகூர் அனிபா.

தி. மு. க. எத்தகைய சங்கிலித்தொடரிலிருந்து வந்த வளையம் என்பதை அனைவரும் உணர வேண்டும். இந்த வளையம் உறுதியும் பண்பாடும் மிகுந்ததென்பதை அறியவேண்டும்.

பார்ப்பனரல்லாத இயக்கமாகத் தொடங்கி இன்று திராவிட முன்னேற்றக் கழகமாக விளங்கும் இந்த மகத்தான இயக்கம் மறைந்த மாவீரர் சர் தியாகராயர் இட்ட பிச்சையேயாகும். அவருக்குப் பின் வந்த மறைந்த மாவீரர்கள் பலர் இவ் வியக்கத்தை தங்கள் உடல் பொருள் ஆவி கொண்டு வளர்த்தனர், அவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சர் தியாகராயர் திராவிட உணர்ச்சியைத் தட்டி எழுப்பினார். டாக்டர் நாயர் போன்ற தலைவர்கள் புயல் எழுப்பினர். இந்தியாவில் மட்டுமின்றி இங்கிலாந்து போன்ற மேடைகளிலும் திராவிட விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தார்கள். அதன் பிறகு, திராவிடப் பெரு மக்களின் ஒத்துழைப்பால் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இந்த மறு மலர்ச்சி நல்லதொரு பெரிய ஆர்வத்தைத் திராவிடப் பெரு மக்களிடையே உண்டாக்கி வைத்துவிட்டது. நாயர், பெரியார் ஆகியோர் இந்த நல்லார்வத்தைத் தந்திராவிடில் நாம் இந்நிலை அடைய முடியாது.

தோழர் ஜீவானந்தம் என்னுடைய நண்பர். அன்பும் ஆர்வமும் கொண்டவர். நம் இயக்கம் பெற்றெடுத்த பிள்ளை. அவர்மாட்டு நமக்குப் பேரன்பு உண்டு. ஆனால் தோழர் ஜீவானந்தமும் நானும் இன்று வேறு வேறு முகாம்களில் இருக்கிறோம்.

பெரியாரும் நானும் ஜீவானந்தமும் ஒரே இயக்கத்தில் கூடி நின்று நம் நாட்டிலே பணியாற்ற வேண்டும். அத்தகைய நாளை நான் எதிர்பார்க்கிறேன். எவர் வரினும், எவரோடு சேர்ந்து உழைப்பதாயினும், எந்நிலையிலும், எக்காரணம் கொண்டும் கொள்கைகளை நான் விட்டுக்கொடுக்க மாட்டேன். கொள்கை காரணமாகவே நாம் ஒரு தனிமுகாம் அமைத்திருக்கிறோம். இவ்வொரே முகாமில் ஒன்றுபட்டுழைக்க அனைவரையும் அழைக்கிறோம். இங்கே உள்ள அனைவரையும் ஒரே முகாமில் திரட்டி நாம் முழுப் பொறுப்பு எடுத்துக்கொண்டு உழைக்க அழைக்கிறேன். பொது உடைமை என்று கூறும் மயக்கு வார்த்தைகளைக் கண்டு மருளமாட்டேன். சமதர்மப் பேச்சுக்களைக் கண்டு அஞ்சிடமாட்டேன். பொது உடமை என்று கூறுவதைவிட, திராவிடப் பொது உடைமை என்று கூறட்டும் அதில் முதல் அங்கத்தினன் நான். திராவிடச் சமதர்ம முகாம் என்று கூறட்டும் அதில் முதல் அங்கத்தினன் நான். திராவிடப் புரட்சிக் கட்சி என்று கூறட்டும் அதில முதலவனாக இருப்பவன் நான். அப்படி இல்லையென்றால் பொது உடமை என்பதில் பொருளில்லை. நம் தனி முகாமுக்கு அனைவரும் வரட்டும். ஒன்றுபட்டு முழுப் பொறுப் பேற்று உழைக்கலாம். வேறு வேறு முகாம்கள் ஏற்படுத்திக்கொள்வது குறையவேண்டும். ஒரே திராவிடத் தனி முகாம் ஏற்படவேண்டும். இது

"கல் சுமந்த கசடர்" நாடகத்தில், சேரன் செங்குட்டுவனாகத் தோன்றி, வீரத் திராவிடரின் முன்னாள் பெருமையை நன்கெடுத்துக் காட்டுகிறார் நம் நண்பர் இரா. நெடுஞ்செழியன்.

"கல் சுமந்த கசடர்" நாடகத்தில் மற்றொரு மு
யமான காட்சி தமிழரை இழித்துப்பேசிய ஆரி
வேந்தர்கள் கனக—விசயர்கள் தம் கொட்
அடங்கி, ஆணவம் அழிந்து, தலைகுனிந்து செ
லும் கருத்துள்ள காட்சி

தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய நோக்கம்.

சர் தியாகராயருக்குப் பின் நம் இயக்கத்தை இன்றுள்ள இம் மகத்தான நிலைக்கு வளர்த்த அனைவருக்கும் நான் மறுபடியும் வணக்கம் செலுத்துகின்றேன். இந்த மாநாட்டினைச் சுற்றிப்பார்த்தால் மாநிலமெங்குமிருந்து வந்திருக்கும் கிளைக் கழகக் கொடிகள், கடல் கடந்த வெளிநாடுகளிலிருந்தெல்லாம் வந்திருக்கும் கிளைக் கழகங்களினுடைய கொடிகள்; எங்கும் அலங்கார விளக்குகள்; உங்கள் அழகான முகங்கள்; உங்கள் முகங்களில் தோன்றும் ஒளிதரும் கண்கள்; உங்கள் ஊக்கம்; உங்களிடையே எழும் வீரக்கனல்! எவ்வளவு மகத்தான மாநாடு! அவசர அரசியல் ஆருடக்காரர்களின் சோதிடம் பொய்த்தே போய்விட்டது. நெஞ்சிலே உரமும் நேர்மையிலே பற்றும் நமக்கிருக்கிறதென்பதை இந்த மாநாடு மெய்ப்பித்துவிட்டது. இங்குள்ளவர்களாகிய நீங்கள் திராவிடத்தின் திக்கெட்டிருந்தும் வந்திருக்கின்றீர்கள். உங்களுடைய உற்சாகம், கொள்கைப்பற்று, ஆர்வம், உணர்ச்சி முதலியவை அவசர அகராதிகளை அனுபவ அகராதியாக்கி வைத்துவிட்டது.

இங்கே நீங்கள் திக்கெட்டிலிருந்தும் வந்திருக்கின்றீர்கள் என்பதைக் காட்ட உங்கள் கொடிகள் பறக்கின்றன. குன்றவளம் பெற்ற தஞ்சையிலிருந்து வந்தவர்களுடைய கொடி பறக்கிறது; வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சேலம், கோயமுத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், நாஞ்சில் நாடு, கேரளம், கன்னடம், ஆந்திரம் எனத் திராவிடத்தின் அங்கங்கள் அனைத்தும் இங்குக் கம்பீரமாகக் கொடி பறக்கவிட்டிருப்பதைப் பார்க்கிறோம், இந்த மாநாட்டிலே கடல்கடந்து சென்றுள்ள திராவிடரும் பங்கு கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த மகத்தான சாதனையைக் கண்டு சிலர் மலைக்கின்றார்கள். சிலர் சந்தேகங் கொள்ளுகிறார்கள்; பலர் பூரிப்படைகின்றார்கள். இந்த எழிலுருவம் கண்டு, இந்த எழுச்சியைக் கண்டு, நம் இயக்கம் இத்தகைய வடிவு எடுத்திருப்பதைக் கண்டு நாம் பூரிப்படைகின்றோம்.

திராவிட முன்னேற்றக்கழகம் யாருக்கும் வைரியல்ல. கபடம் அற்றவருக்கும், நாட்டுப் பணியைக் கபடமில்லாமல் செய்ய விரும்புகிறவர்களுக்கும், மக்கட் பணியாற்ற விழைகின்றவர்களுக்கும் தி. மு. க. அரியதோர் முகாமாகும்; சிறந்த பாசறையாகும். இந்த அரியதோர் சாதனையில் கலந்து தொண்டாற்ற சேரவாரீர் என்று நண்பர் ஜீவா உட்பட மாற்றுக் கட்சிகளிலுள்ள திராவிடர் அனைவரையும் அழைக்கிறேன். பொது உடைமைவாதிகளை—உண்மை மக்கள்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், “நான் கண்ட ரஷ்யா” என்பதுபற்றி, தம் குழுவினருடன், வில்லுப்பாட்டு பாட்டு, மக்களை அறிவு வெள்ளத்தில் ஆழ்த்துகிறார்! அவர் முகத்தில்தான் என்ன பரவசம்! அந்தச் சொற்களில்தான் எவ்வளவு கருத்துச் சுவை!



“பெண்கள் போராட்டம்” நாடகத்தில் தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்கள், ஆலை முதலாளியாகத் தோன்றி ஆர்ப்பாட்டமாக நடித்து, நம் எல்லோரிடமிருந்தும் ‘சபாஷ்’ பட்டத்தைத் தட்டிப் பறிக்கும் காட்சி.

பணியாளர்களை அழைக்கிறேன். வாருங்கள், ஒன்றுபட்டு வேலை செய்யுங்கள். எங்களிடையிலே மிச்சம் மீதி முதலாளித்தனமிருந்தால் வந்து விரட்டுங்கள்.

நமக்கு ஓரே ஒரு எல்லை உண்டு. அது தொல்லை தராத எல்லை; நம் மூதாதையர்கள் இரத்தம் சிந்தி உருவாக்கிய எல்லை. அதுவே திராவிட எல்லை. இதில் 10 மைல் கூடினாலும் அல்லது 10 மைல் குறைந்தாலும் அதைப் பற்றிக் கவலையில்லை, ஆனால் நமக்கென்று ஓர் எல்லை இருக்க வேண்டும். A HomeLand for our Nation என்பதற்கொப்ப நமக்கென்று ஓர் எல்லை இருத்தல் வேண்டும். அதுவே திராவிடநாட்டு அமைப்பாகும். அது தான் நமது அடிப்படை இலட்சியமாகும். இந்த உயர்ந்த இலட்சியத்திலே நமக்கு நம்பிக்கை வளரவே, நாம் இங்கு இவ்வாறு திரண்டு கூடியிருக்கின்றோம். இந்தச் சமயத்திலே தேர்தல் பிரச்னை வந்து விட்டது. அதனையும் நாம் கவனிப்போம். ஆனால் நம் பாதையிலே தான் சென்று கொண்டிருப்போம். இடையில் வரும் இத்தகைய பிரச்னைகளைக் கவனிக்காமலிருக்க மாட்டோம். ஆனால் நம்பாதையிலிருந்து இவற்றுக்காக நழுவமாட்டோம். நமது உயிர்ப் பிரச்னையை மறக்கமாட்டோம். வெயிலிலும் பனியிலும் நாம் நம் பாதையில் முன்னேறிச் சென்று கொண்டேயிருப்போம். நம் பாதையில் ஓநாய்கள் வட்டமிடலாம்; நரிகள் ஊளையிடலாம்; பிணங்கள் விழுந்து கிடக்கலாம் இவைகளைச் கண்டெல்லாம் நாம் ஒரு போதும் அஞ்சமாட்டோம். இவையெல்லாம் நமக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டும் சாதனங்களேயாம். எனவே, நம் பாதையில் நாம் சென்று கொண்டேயிருப்போம். நம் பயணத்தை எதுவும் நிறுத்தாது நம் அடிப்படை வேலையை, நம் உயிர்ப் பிரச்னையை, திராவிட நாடு பெறுவதை நாம் எக்காரணங் கொண்டும் மறக்க மாட்டோம். திராவிட நாட்டைப் பெற்றே தீருவோம் என்ற உங்கள் உணர்ச்சி கண்டு நான் பூரிப்படைகிறேன்.

நான் கனதனவானல்ல. உயர்ந்த சாதிக்காரனுமல்ல. பணத்தாலே மயக்கக் கூடியவனுமல்ல, உங்களிலே பணத்தாலே உயர்ந்தவர்கள் பலர். இருகிறார்கள். அந்த அளவுகூட நான் பணக்காரனல்ல. தைரியத்தில் கூட உங்களைவிட நான் குறைந்தவனே. எனக்கு சொந்தத்தைரியம் மிகுதியாக உண்டு என்ற மனப்பான்மையுமில்லை. ஆனால் நான் உரிமை காரணமாகத் தம்பிகள் என்றழைக்கும் உங்களுடைய தைரியத்தை, ஆர்வத்தை, உணர்ச்சியை, ஊக்கத்தை, முயற்சியை, அறிவை, திறமையை நம்பியே இவ்வளவு பெரிய மகத்தான சாதனையில் ஈடுபட்டுள்ளேன். உங்கள் ஒத்துழைப்பால், கூட்டுறவால், தைரியத்தால், ஊக்கத்தால், உழைப்பால் நாம் வெற்றி பெற்றே தீருவோம். இது உறுதி.

அடுத்த மாநில மாநாடு கூடும் போது வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் தூதுக்குழு இங்கே உட்கார்ந்திருக்கும். உட்கார்ந்திருக்குமாறு செய்யலாம். ஆனால். நம்முள் எவருக்கும் அரசியல் சபலங்கள் ஏற்படக் கூடாது. அரசியல் சபலங்களை நாம் அடியோடு வெறுக்க வேண்டும். சட்டசபை என்பது ஓர் அலங்காரக் கொலுமண்டபம். சட்ட சபை உறுப்பினர் பதவிகள். இலாபகரமானவை. மந்திரிப் பதவிகள் மயக்கந்தருபவை. நாட்டை இழக்கச் செய்பவை. நாம் அவற்றைப் பற்றிய சபலங்களை அடியோடு ஒழிக்க வேண்டும்.

நாம் ஆலமரத் தடியில் கூடினாலும் ஆயிரக்கணக்கில் கூடுமாறு நம் இயக்கம் வளர்ந்து விட்டது. ஆனைமலையில் ஒரு கழகம், அதன் அடிவாரத்தில் ஒரு கழகம் என்று மூலை முடுக்குகளிலெல்லாம் கூட இன்று நம் கழகங்கள் தோன்றி விட்டன.

இன்று எங்கு நோக்கினும் திராவிட முன்னேற்றக் கழகங்கள் இருக்கின்றன. இந்தோசீனாவைச்சேர்ந்த வியட்நாமிலே நம் கழகம் இருக்கிறது. பர்மாவிலே நம் கழகம் இருக்கிறது. தோழர் சேனநாயகாவின் இலங்கையிலே நம் கழகம்

பு [illegible]. அருணாசலம் [illegible] அவர்கள் [illegible] மாநாட்டில் நடத்திக்காட்டிய, [illegible] சென்னை [illegible] கொள்ளும் மூன்று அரிய [illegible]

இருக்கிறது. இந்த வெளி நாடுகளில் இருக்கும் கழகங்கள் தம் பிரதிநிதிகளை மட்டும் அனுப்பியதோடு நின்று விடவில்லை; கொடிகளை அனுப்பி வைத்ததோடு அமர்ந்து விடவில்லை. நம் மாநாட்டுச் செலவுக்காகப் பணங்கூட அனுப்பினார்கள். இந்தோ-சீனா 50 ரூபாய்களை அனுப்பிவைத்திருக்கிறது. இந்த பிரதிநிதிகள் பின்னால், கொடிகளின் பின்னால் தங்களுடைய நம்பிக்கையையும் அனுப்பிவைத்திருக்கிறார்கள் அங்கெல்லாம் இருக்கும் திராவிடப் பெரு மக்கள். வெளி நாடுகளில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற அவர்களெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தான் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இன்பத்திராவிடம் எப்போ தேற்படும், அங்கே எப்போது போவோம் என்று கடல் கடந்த திராவிட மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். திராவிடத் தனியரசிலே தலை நிமிர்ந்து நுழையலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கிருக்கிறது. அந்த நம்பிக்கையை அவர்களுடைய கொடிகளும் ஆர்வமும் நமக்கு நன்கு புரிவிக்கின்றன. அவர்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய எண்ணம் வெற்றிபெற உழைப்போம் என்ற உறுதிப்பாட்டை அளிக்கிறேன்.

இதுவரை நம் இயக்கத்தின் வளர்ச்சியைக் குறிப்பிட்டேன். இந்த வளர்ச்சியையும் உணர்ச்சியையும் ஊக்கத்தையும் நிலைத்திருக்கும்படி செய்யக்கூடிய அரிய பெரியதோர் இயந்திரம் அமைத்துவிட்டோம். இந்த இயந்திரம் துருப்பிடித்து விடாதிருக்க, நன்றாக இயங்கி ஓடிக் கொண்டேயிருக்குமாறு செய்ய எண்ணெய் வேண்டும்; பசைவேண்டும்; கட்டிடம் வேண்டும்; நுண்ணறிவாளர் வேண்டும்; சரிவர நடத்திச் செல்ல வேண்டும். நம்மிடத்திலே கட்டிடம் இருக்கிறது. இயந்திரத்தையும் அமைத்து விட்டோம். நுண்ணறிவாளர்களும் இருக்கின்றனர். எண்ணெயும் பசையும் வேண்டும் சரிவர நடத்திச்செல்ல.

நம் இயக்கமாகிய இம்மாபெரும் இயந்திரம் சரிவர இயங்க வேண்டுமானால், அது துருப்பிடித்துப் போகாமலிருக்க வேண்டுமானால், மாதம் ஒன்றுக்கு ரூ 2000 செலவு செய்ய வேண்டும் என்பதைப் பூரிப்போடு ஆனால் பயத்தோடு கூறுகிறேன். இயக்கம் இவ்வளவு மகத்தானதாக வளர்ந்து விட்டதே என்பதற்காகப் பூரிப்பு. மாதா மாதம் இவ்வளவு பணம் வேண்டுமே என்பதற்காகப் பயம். நம் இயக்கம் மேலும் மேலும் வளரச் செய்ய இன்னும் பணம் தேவை. பணம் மட்டும் போதாது. நீங்கள் நல்ல ஆர்வமும் தரவேண்டும்.

திராவிட நாட்டுக் கோரிக்கையும் நம் ஊக்கமும் உணர்ச்சியும் மிகக்குறுகி அருகி விடும் என்று எதிர்பார்த்த திராவிட நாட்டு எதிர்ப்பாளர்கள் ஏமாந்தனர். அவர்களுடைய எதிர்ப்பும் மறுப்பும் குறைந்து விட்டது.

நாம் திராவிடநாட்டை வரலாற்று ஆதாரங்களைக் காட்டியே கேட்கின்றோம். பூகோளப் புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டிக் கேட்கின்றோம். இலக்கியச் சான்றுகளைக் காட்டிக்கேட்கின்றோம். நம் நாட்டைக்கேட்க நமக்குஉரிமை இருக்கிறது அதைப் பெற நமக்குத் திறமை இருக்கிறது. நாம் திராவிட நாட்டை அடையும் ஆற்றலையும் அறிவையும் பெற்றுள்ளோம்.

நாம் இங்குக் கூடியுள்ள இந்தத்திடலுக்கு என். ஐ. ஏ. என்பது பெயர். அதாவது வீர விளையாட்டுத் திடல் என்பது பெயராகும். பொருத்தமான பெயர்; பொருத்தமான இடம். இங்கேதான், அகில இந்திய முஸ்லிம் லீக் மாநாடு பாக்கிஸ்தான் பெறுவதற்கு முன்னர்க் கூடிற்று. இதே இடத்தில் நாம் கூடியிருக்கிறோம், மிகச் சிறந்த பொருத்தம்: மிக நல்லதோர் வாய்ப்பு. இங்குத் திரண்டுள்ள இந்த நல்லதோர் ஆர்வத்தைத் தேர்தல் சபலம் கெடுத்துவிடக்கூடாது. அரசியல் சுற்றுச் சூழல் சூழ்ச்சி செய்யக்கூடாது. இவையில்லா வகையில் நாம் முன்னேற வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கும் திராவிட நாட்டுப் பிரச்னையை இன்று மறுப்போர் தொகை மிகக் குறைந்து விட்டது, ஆதரிப்போர் தொகை மிகுதியாகிக் கொண்டே வருகிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் கூட்டத்

மாநில மாநாட்டில் நடத்தப்பட்ட ஜமீன் மாளிகை, சந்திரோதயம் ஆகிய நாடகங்களில் முக்கியமான சில கட்டங்கள்.

திலே நிதி அமைச்சர் கோபால ரெட்டி மாணவர்களிடையே பேசுகையில், 'மத்திய சர்க்கார் மாகாண சர்க்காரை ஒரு தோழனாகக்கூட நடத்தவில்லை!' என்று கூறினார். இது தேர்தல் காலத்துப் பேச்சோ என்று கூடச் சந்தேகப்பட்டேன். அவர் நிதியமைச்சர். ஆகவே அவரது உள்ளக் குமுறலை அவர் வெளியே கொட்டியிருக்கிறார் என்றே கருதுகிறேன், மத்திய சர்க்காரிடம் மாகாண சர்க்கார் தொல்லைப்படுகிறது என்பது அனைவருக்கும் நன்கு தெரியுமாறு நிதியமைச்சர் தம் உள்ளக் குமுறலை வெளியிட்டிருக்கிறார். அமைச்சரின் வார்த்தை பாராட்டப்படுவதற்குரியது என்று சொல்வதாக எண்ண வேண்டாம். நாட்டில் காங்கிரசுக்கு எதிர்ப்பு பெருகியிருப்பதால், திராவிடப் பண்பாட்டுக்கு வித்துக்களாயுள்ள, திராவிடவளம் நிறைந்த வீர இளைஞர்கள் நிறைந்துள்ள அந்தப் பல்கலைக் கழகத்திலே இவ்வாறு சமயத்துக்குத் தகுந்தவாறு பேசினாரோ என்று நாம் சந்தேகப்பட்டோம். எனினும் மத்திய அரசாங்க ஆதிக்க மனப்பான்மை மாகாண சர்க்காரை அலட்சியப்படுத்துவதாயிருக்கிறபடியால், அந்த மமதையாளர்கள் வார்த்தையில் நேர்மையில்லாதபடியால், நாணயக்குறைவு ஏற்பட்டிருக்கிறபடியால், அமைச்சருக்கு நெஞ்சக் குமுறல் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறேன். நிதியமைச்சர் கோபால ரெட்டி மத்திய அரசாங்கத்தின் இந்த எதேச்சாதிகாரத்தை முன் வைத்துத் தேர்தலில் போட்டியிட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.

தேர்தலிலே நாம் நம் திட்டத்தை ஏற்றுக் கொள்பவர்களைத்தான் ஆதரிப்போம் என்று கூறினோம். நம் திட்டத்தை ஆதரிப்பதென்றால் திராவிடநாடு பிரிவினை லட்சியத்தை ஒப்புக்கொண்டு பிளட்ஜில் கையொப்பமிடவேண்டும். என்று திட்டம் தீட்டினோம் மதுரையிலே! அதன்படி இதுவரையில் 150 தோழர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மனுப்போட்டிருக்கிறார்கள்.

திராவிட நாட்டுப் பிரிவினை ஒப்புக்கொள்ளப்படவேண்டும். திராவிட நாட்டுப் பிரச்னை சட்டசபைகளில் எடுத்துக்கூறப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டே இவர்கள் நம் பிளெட்ஜில் கையொப்பமிட வேண்டும். இப்படிக் கையொப்பமிடுபவர் பின்னால் வாக்குத்தவறி நடந்துகொண்டால் என்ன செய்வதென்று தோழர்கள் சந்தேகப்படுகிறார்கள். மனுச் செய்தவர்கள் மன்னிக்கவேண்டும். இவர்களுள் யாராவது இறந்து விட்டால் என்ன செய்வது? தி.மு.க பிளெட்ஜில் கையொப்ப மிடுவதாக மனுப் போட்டவர்களுக்குக் கவனிப்போம் என்று தானே கூறியிருக்கிறோம்! ஆதரிப்போம் என்று கூறவில்லையே. எனவே பிளட்ஜில் கையொப்பமிட்டவர்கள் நேர்மையாக நாணயமாக நடந்துகொள்வார்கள் என் நம்புவோம். நாம் ஏமாந்து விடாதபடி மனுப்போட்டவர்களை எடை போட்டு, சலித்தெடுத்து, மனிதர்களை உரைத்துப்பார்க்க முடியாதெனினும் அவர்கள் பண்புகளை உரை கல்லில் இட்டுப் பார்த்து ஒரு முடிவுக்கு வருவோம். இந்த அளவுக்குத்தான் நாம் தேர்தல் விவகாரத்தில் ஈடுபட முடியும்.

தீவிரக் கட்சிகள் அனைத்தும் நிச்சயம் ஒன்றுபட்டுமுற்போக்கு உணர்ச்சியை உண்டாக்கத்தான் வேண்டும். ஆனால் இது மார்ச்சுக்குப் பிறகுதான். இடையிலே நம் இலட்சியப் பொறுப்பை நாம் நிறை வேற்றிக்கொண்டே வருவோம்.

வெளிப்படையான நம்முடைய தேர்தல் கொள்கை மறுபடியும் காங்கிரசு ஆட்சிக்கு வராதபடி செய்யவேண்டும் என்பதேயாகும். எல்லா மாவட்டங்களிலும் காங்கிரசை எதிர்த்து ஆட்சிக்குவராதபடி செய்வதையே நம் தேர்தல் கொள்கையாகக் கொள்ள வேண்டும்.

(23-ம் பக்கம் பார்க்க)

கன்னியப்பர் நூல் நிலையம்

16, திருப்பள்ளித் தெரு,

சென்னை 1.

திராவிட முன்னேற்றக் கழகம் சம்பந்தமான எல்லா நூல்களும் சிறந்த நாவல்களும் இந்த நூல் நிலையத்தில் இடம்பெற்றிருக்கின்றன. கழகத் தோழர்கள் அனைவரும் இந்த நூல் நிலையத்தை நன்கு பயன்படுத்த வெளியூர்த் தோழர்களுக்கும் புத்தகங்கள் அனுப்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அங்கத்தினராகச் சேர விரும்புவோர் ஒவ்வொரு ஞாயிறன்றும் காலை 9 மணிமுதல் 12 மணிக்குள் மேற்கண்ட முகவரியில் என்னைச் சந்திக்கலாம்.

முன் பணம் ரூ.	3—0—0
மாதச் சந்தா	0—8—0
நுழைவுக் கட்டணம்	0—4—0

விவரங்களுக்கு எழுதுக :—

பழம் நீ,

அமைப்பாளர்.

கண்ணைக் கவர்ந்த காட்சிகள்

முகப்பு

மாநாட்டுப்பந்தலுக்கு முன் அமைந்திருந்த தலைவாயில் முகப்பு, காவியம் தீட்டுவோருக்கும் ஓவியம் வரைவோருக்கும் கிடைத்ததோர் ஒப்பற்ற விருந்து. மேற்பாதி கறுப்பும் கீழ்பாதி சிவப்புமாக அமைந்த திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை உழவர் சமுதாயத்தைச் சேர்ந்த திராவிட வீரன் ஒருவனும் வீராங்கனை ஒருத்தியும் உயர்த்திப் பிடித்து அலங்காரமாகப் பறக்கவிடுவதாகிய தோற்றத்தைக் கொண்டிருந்தது அந்த முகப்பு. அந்த முகப்புக்குள்ளே நுழைந்து இளங்காளைகளெல்லாம் பந்தலை அடைந்த போது, எதிர்காலத் திராவிடத் தனியரசுக்குரிய ஆட்சிமாளிகையின் தலைவாயிலைக்கடந்து செல்வதுபோன்ற பூரிப்பும் எக்காளமும் உண்டாயிற்று அவர்கட்கெல்லாம்.

அலுவலகம்

முகப்பைத் தாண்டி உள்ளே நுழைந்ததும், வடபுறம், மாநாட்டு அலுவலகம் அமைந்திருக்கும் காட்சியையும், தென்புறம், வரிசையாக, மாநாட்டு நுழைவுச் சீட்டுகள் விற்கும் இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த மாட்சியையும் மக்கள் கண்டு களித்தனர்.

பந்தல்

பந்தல், பிரம்மாண்டமானது. ஏறத்தாழ 2,37,700 சதுர அடி பரப்பளவு கொண்டது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தாராளமாக அமர்ந்து, அமைதியான முறையில், மாநாட்டு நிகழ்ச்சிகளிற் பங்குகொள்வதற்கான சிறந்த நிலையில் பந்தல் அமைக்கப் பட்டிருந்தது.

மின்விளக்குகள்

ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகள் பந்தலிற் பொருத்தப்பட்டு, ஒளிச்சுடர்களை வாரி வழங்கும்படி செய்யப்பட்டன. இரவு நேரத்தில், அந்த மாபெரும் பந்தலில், அந்த ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகள், பிரகாசமான ஒளியைப் பால்நிலவென வீசிக் கொண்டிருந்த காட்சி, வானவீதியிலே வீற்றிருக்கும் நட்சத்திரங்களின் இன்பக் காட்சியையே எல்லோர் உள்ளத்திலும் எழுப்புவ

மேடை

பல நிறத் தோற்றங்களுடன் கூடிய டியூப் விளக்குகள் நாலாபுறமும் ஒளிவீச, நீண்டு அகன்ற நல்ல தோற்றத்துடன், எடுப்பாகவும் உறுதியாகவும் அமைந்திருந்தது மேடை. பந்தலின் தென்கோடியில் அமைந்துள்ள அந்த மேடையில் ஆற்றப்படும் சொற்பொழிவுகளை மிக நீண்டிருக்கும் அந்தப் பந்தலின் வடகோடியில் அமர்ந்துள்ள மக்களும் தெள்ளத் தெளியக் கேட்டு மகிழும் வண்ணம் எண்ணற்ற ஒலிபெருக்கிகள் எங்கெங்கும் அமைக்கப்பட்டிருந்தன.

தெற்கு வடக்கு, கிழக்கு, மேற்கு!

பந்தலுக்குத் தெற்கே, மாநாட்டு அலுவலகம்! வடக்கே, பற்பல மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்கிப்பேசி மகிழ்வதற்காக, ஒவ்வொரு

தொண்டர் படைத் தலைவராக விளங்கி, ஓயாமல் பணி புரிந்த சென்னை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர், ஆற்றல் மிக்க அறப் போர் வீரர் தோழர் கே. எம். கண்ணபிரான்.

மாவட்டத்திற்கென்று தனித்தனியாக ஒவ்வொரு கொட்டகை! பந்தலுக்கு மேற்கே, டிக்கட் விற்குமிடங்கள். கிழக்கேயோ, ஓவியக் கண்காட்சி அமைந்துள்ள நீளமானதோர் தனிப்பந்தல். அதற்கும் கிழக்கே, வரிசை வரிசையாக, புத்தகக் கடைகள், பழக் கடைகள், டீ, காபி முதலிய சிற்றுண்டிக் கடைகள், உணவுக் கடைகள் முதலியன, அணி அணியாக அமைந்திருந்தன. பிரதிநிதிகளின் கொட்டகைகளுக்கு அருகே தபால் தந்தி அலுவலகம் அமைந்திருந்தது.

பிற நாடுகளின் உதவி!

பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், செக்கோஸ்லாவாகியா ஆகிய நாடுகளின் சார்பில், அந்தந்த நாடுகளின் தூதராலயங்கள், தத்தம் நாட்டின் தனிச்சிறப்புகளையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் விளக்கிக்காட்டும் பல நிறப் படங்கள், புள்ளி விவரங்கள், புத்தகங்கள், முதலியவற்றைத் தனித்தனியே அவர்கட்கென்று அமைக்கப்பட்டிருந்த கொட்டகைகளில், நாம் பார்க்கவென, மகிழ்ச்சியுடன் வைத்திருந்தனர்.

கொடிமரம்

பந்தலுக்கு முன்னே, ஏறத்தாழ எண்பது அடி உயரமுள்ள கம்பத்தின்மீது, வியட்நாம் பகுதியிலிருக்கும் நம் கழகத் தோழர்கள் அனுப்பிவைத்த கொடி, கம்பீரமாகப் பறந்தபடி, வாரீர் வாரீர் என்று திராவிடத் தீரர்களையெல்லாம் மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்தபடி இருந்தது.

கிளைக் கழகங்களின் சின்னங்கள்!

தமிழ்நாடெங்கும் தழைத்திருக்கும் கழகக் கிளைகள் எழுநூறும் தத்தம் பெயர் பொறித்த கொடிகளை மாநாட்டுக்கு அனுப்பிவைக்க, அவை, பந்தலின் நாலாபுறமும் பொருத்தப்பட்டு, காற்றிலே அசைந்து அசைந்து பறந்துகொண்டிருந்த காட்சி கண்ணுக்கு மட்டுமல்ல கருத்துக்கும் விருந்தூட்டும் இன்ப நிகழ்ச்சியாகும்.

இதயப் பெட்டியில் இடம் பெற
வேண்டிய நூல்கள்
மு. கருணாநிதியின்
உணர்ச்சி மாலை 0 8 0
கருணாநிதியின்
வர்ணனைகள் 0 10 0
எஸ். பி. நாதன் எழுதிய
வேதனைக் குரல் 0 4 0
சுப்பு ஆறுமுகம் எழுதிய
144 0 8 0
தயாராகிறது
மு. கருணாநிதியின்
சுழல் விளக்கு
கமிஷன் 25% V. P. செலவு இனாம்.
கருணாநிதி பதிப்பகம்
சென்னை 2.



இரவு பகல் எனப் பாராது ஓய்வு என்பதை அறியாது, மாநாட்டு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சென்னை மாவட்ட தி. மு. க. வின் விளம்பரச் செயலாளர் தோழர் சி. வி. ராஜன்

கருத்தைக் கவர்ந்த நிகழ்ச்சிகள்

முதல் நாள் 13—12—51

முற்பகல்

சென்னை இராயபுரத்தில் உள்ள தலைமைக் கழகக் கட்டிடத்துக்கு எதிரிலிருந்து காலை 9-மணிக்குப் புறப்பட்ட மாநாட்டு ஊர்வலம், இரண்டு மைல் நீளமும், ஒரு இலட்சம் மக்களும், அளவற்ற ஆர்வமும், திராவிடத் தனியரசு இலட்சியங்களும் கொண்டதாக, சுமார் ஐந்து மைல்தூரம் வெற்றிப்பவனி வந்த பிறகு, நண்பகல் ஒரு மணிக்கு மாநாட்டு மைதானத்தை வந்தடைந்தது.

ஊர்வலம் வந்து முடிந்ததும், மாநாட்டுத் தலைவர்—தென்னாட்டின் முடிசூடா மன்னர்-சிந்தனைக் கருவூலம்-அறிஞர் அண்ணாதுரை அவர்கள், எண்பதடி உயரமுள்ள கம்பத்தின்மீது, கழகக் கொடியை, பல்லாயிரக் கணக்கானவரின் வாழ்த் தொலிகளுக்கிடையே ஏற்றிவைத்தார் அவர் கொடியேற்றுவிழாவை நடத்திமுடித்ததும், கம்பத்தைச்சுற்றி, சதுரமாக நின்றுகொண்டு, கழகத் தொண்டர்கள், கொடி வணக்கம் புரிந்தனர்.

கொடி வணக்க நிகழ்ச்சி முடிந்தவுடன், தோழர் சி. பி. சிற்றரசு, அவருக்கே உரியதான அந்த அற்புதமான நகைச்சுவைச் சொற்களையும் கிண்டல் குத்தீட்டிகளையும் கொண்ட அருமையான சொற்பொழிவை அழகான முறையில் நடத்திவைத்து, ஓவியக் கண்காட்சியைத் திறந்துவைத்தார்.

அந்த அளவில், காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல்

பிற்பகல் நான்கு மணி அளவில், மாநாடு மீண்டும் தொடக்கமாயிற்று. பந்தல் முழுவதும், மக்கள் வெள்ளம்! எங்கு நோக்கினும் ஆர்வ அலைகள்! அந்த ஆர்வ அலைகள்மீது மிதந்தபடி இசைத் தென்றல் இன்பப்பவனி வரலாயிற்று. நான்கு மணிக்கு தோழியர் கஸ்தூரிபாய், நாகூர் அனிபா, திருவாரூர் நமசிவாயம், சிதம்பரம் ஜெயராமன் ஆகியோர் ஒருவர்பின் ஒருவராக, கூடியிருந்த அந்த ஒரு இலட்சம் இளைஞர்களின் உள்ளத்தை யெல்லாம் தமிழிசை வெள்ளத்தால் நிரப்பலாயினர். இன்பத் தமிழ்! இனிய

சேர்ந்தால், இன்பம், செந்தமிழர் உள்ளத்தைத் தன் சொந்த சொத்தாக்கி கொள்ளும் என்பதற்கு வாதமாதேவை?

மாநாட்டுப் பந்தலையும், அந்தப் பந்தலில் அமர்ந்திருந்த மக்களையும், அந்த மக்களின் திராவிட உள்ளத்தையும், அந்த உள்ளத்தில் உலவும் உணர்ச்சிகளையும், தமிழிசை, தன் வயமாக மாற்றிக்கொண்டிருந்த அதே நேரத்தில், எஸ். ஐ. ஏ. ஏ. கிளப் மாடிமீது, மாநாட்டுப் பிரதிநிதிகள் தனியாகக்கூடி, என்னென்ன தீர்மானங்களை மாநாட்டில் கொண்டுவரவேண்டும் என்பதுபற்றித் தமக்குள்ளாக விவாதித்துக் கொண்டிருந்தனர்

திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகச் செயலாளரும், பெண்களே நடிக்கும் "பெண்கள் போராட்டம்" என்னும் நாடகத்தை மாநில மாநாட்டில் வெற்றிகரமாக நடத்திக் காட்டியவரும், அந்த நாடகத்தில் ஆலைமுதலாளி வேடம் பூண்டு அருமையாக நடித்தவருமாகிய

தோழியர் அலமேலு அப்பாதுரை

விவாதம், மிக மேலானதாகவும் சிறந்தமுறையினதாகவும் அமைந்திருந்தது. ஒவ்வொரு கிளைக் கழகத்திலிருந்தும் இரண்டிரண்டு தோழர்கள், மாவட்டக் கழகங்களின் எல்லா உறுப்பினர்கள், பொதுக்குழுவின் எல்லா உறுப்பினர்கள் ஆகிய இவர்கள் அனைவரும் கொண்டதே அந்தப் பிரதிநிதிகளின் கூட்டம். பிற்பகல் 4-மணிக்குத் தொடக்கமாகிய அந்த மந்திராலோசனைக் கூட்டம் இரவு 7-மணிவரை நடந்து, அப்போதும் முடியாமல் இரண்டாம் நாள் இரவு 2-மணிக்கு மீண்டும் தொடக்கமாகிக் காலை 4-மணி அளவில் முடிவுற்றது.

இரவு

7-மணி அளவில், இன்னிசை முழக்கமும், பிரதிநிதிகளின் தனிக்கூட்டமும் ஒருசேர முடிவுற்றவுடன், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் "நான் கண்ட ரஷ்யா," என்பதுபற்றிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. நகைச்சுவை அரசர் தம்முடைய சொற்சுவை மூலம் ரஷ்யச்சுவையை திராவிடச் சுவையுடன் கூட்டிக் கலந்து எல்லோரும் நுகர்ந்து இன்புற்றிருக்கவென ஒரு மணி நேரத்திற்குமேல் அளித்தபடி இருந்தார். 8-மணிக்கு வில்லுப்பாட்டு நிகழ்ச்சி முடிந்ததும், இரவு உணவுக்காக மாநாடு கலைந்தது.

இரவு 10-மணிக்கு மாநாடு மீண்டும் கூடியபோது சொல்லின் செல்வர் மு கருணாநிதி தீட்டி, அவரே முக்கிய பங்கேற்று நடிக்கும் "இளைஞன் குரல்" நாடகம் சிறந்த முறையில் நடத்தப்பட்டது.

இரண்டாம் நாள் 14—12—51

முற்பகல்

காலை 11-மணிக்கு மாநாடு தொடங்கப்பட்டது. முதல்நாள் போலவே இன்றும் ஒரு இலட்சத்திற்குக் குறையாத எண்ணிக்கையுடைய மக்கட்கூட்டம் பந்தலில் நிரம்பியிருந்தது. முதலில் தோழர் கே. கே. நீலமேகம், திராவிட நாட்டுப் பிரிவினையின் இன்றியமையாமையை வலியுறுத்திப்பேசி, மாநாட்டைத் திறந்துவைத்தார்.

திறப்புவிழாச் சொற்பொழிவு முடிவுற்றதும், இயக்க முன்னணி வீரர்களாகிய தோழர்கள் ஏ. கே. வேலன், அருப்புக்கோட்டை இராமசாமி, இரா நெடுஞ்செழியன் ஆகியோர் முறையே, உலகத்தில் நாம், நாட்டுப் பிரிவினை, விஞ்ஞான வளர்ச்சி என்னும் பொருள்கள் குறித்து விரிவுரையாற்றினர்.

பிற்பகல்

இடைவேளை உணவுக்குப் பிறகு பிற்பகல் 4-மணிக்கு மாநாடு மீண்டும் துவங்கப்பட்டபோது, தோழர்கள் ஈரோடு அப்பாவு, கோபி ராஜு, இரெ இளம் வழுதி, தோழியர் சத்தியவாணி முத்து, ஈ வெ. கி. சம்பத், கே.ஏ. மதியழகன், க. அன்பழகன், ஆகியோர் முறையே, சமுதாய மறுமலர்ச்சி, கடல் கடந்த தமிழர்கள், சட்டமும் சர்க்காரும், பெண்கள் நிலை, வல்லரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும், உரிமைப் போராட்டம், மாஜி கடவுள்கள் என்னும் பொருள்கள்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்.

இரவு

இரவு உணக்காக ஏழுமணிக்குக் கலைந்த மாநாடு இரவு 10-மணிக்குக் கூடியபோது, திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகத்தால் நடத்தப்பட்ட "போராட்டம்" என்னும் நாடகமும், கழகத் தோழர்களால் நடிக்கப்பட்ட "கல்சுமந்த கசடர்" என்னும் நாடகமும் சிறப்புற நிகழ்ந்தன. போராட்

தொண்டர் படைத் துணைத் தலைவராக இருந்து, மாநாட்டின் வெற்றிக்காக முழு மூச்சுடன் பாடுபட்ட காஞ்சிபுரம் தோழர் மார்க்.

டம் என்ற நாடகம், பெண்களே எழுதி பெண்களே நடித்த சிறந்த கலைவிருந்தாகும். தோழியர்கள் அலமேலு அப்பாதுரை, அருள்மொழி பி. ஓ. எல். மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், டாக்டர் தருமாம்பாள், பூங்கோதை முதலானவர்கள் அருமையாக நடித்து அனைவருடைய கைதட்டுதலையும் மிக எளிதில் பெற்றுவிட்டனர். "கல் சுமந்த கசடர்" நாடகத்தில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், சி. வி. ராஜன், கே. எம். கண்ணபிரான் ஆகியோர் நம் தோழர்களுடன் நடித்து நற்புகழ் பெற்றிருக்கின்றனர்.

மூன்றாம் நாள் 15–12–51

முற்பகல்

காலை 11-மணிக்கு மாநாடு கூடியதும், முதலில், "திராவிடன்" ஆசிரியர் தோழர் என். வி. நடராசன், அனைவரையும் வரவேற்று, தன் விரிவுரையை நிகழ்த்தி, இறுதியில், அறிஞர் அண்ணாவை மாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். தோழர்கள் என். எஸ். இளங்கோ, முல்லை வடிவேலு, சத்யவாணி முத்து, சி.பி. சிற்றரசு, பெத்தாம் பாளையம் பழனிச்சாமி, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் அண்ணா அவர்களின் சிறப்பு இயல்புகளைச் செவ்விதின் விளக்கிக்காட்டி, மாநாட்டுக்கு மட்டுமல்ல, திராவிடத் திருநாட்டுக்குத் தலைமைவகிக்கும் தகுதியே அம்மாவீரர் ஒருவருக்குத்தான் உண்டு என்பதை எழில்பட விளக்கினர்.

பிற்பகல்

பிற்பகல் 4-மணிக்கு மாநாடு தொடங்கியதும், தோழர்கள் தூத்துக்குடி சிவசாமி, சென்னை கோவிந்தசாமி, கே.ஏ. மதியழகன், மு.கருணாநிதி, நாஞ்சில் மனோகரன், ஈ.வெ.கி. சம்பத், மூவாலூர் இராமாமிர்தத் தம்மையார் ஆகியோர், அண்ணாவின் தலைமை நம் நாட்டுக்குத் தேவை என்பதைப் பர்பல ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டி அண்ணா அவர்களை மாநாட்டுத் தலைவராக இருக்கவேண்டும் என்பதை மேலும் வலியுறுத்தினர்.

இறுதியில், அண்ணா அவர்கள் கம்பீரமாக எழுந்துவந்து, சேனைத்தளபதி, கோட்டை முகப்பருகே நின்றுகொண்டு, கீழே உள்ள போர்வீரர்களுக்குக் கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்துவதுண்டே முன்னாளில், அது போன்ற தோரணையில், அன்புள்ள தோழர்களே என்று தொடங்கி, தன் வெண்கலநாத சங்கீதக் குரலாலே, தலைமையுரை நிகழ்த்தலானார். அவருடைய விரிவுரையிலே இன்பத் திராவிடத்தின் எதிர்காலம் மட்டுமல்ல, நிகழ்காலமும், கடந்தகாலமும் கூட நிழலாடின. ஏறத்தாழ இரண்டுமணி நேரம், அந்த மாவீரர், எதிரே அதுபோது திரண்டிருந்த ஒன்றரை இலட்சம் மக்களையும், தன் சொற்களெனும் காலக் கண்ணாடி மூலம், நாட்டை எதிர் நோக்கி நிற்கும் நாலாவகைப் பிரச்சினைகளையும் தெளிவாகக் காணும்படி செய்யலானார்.

இரவு

இரவு 10-மணிக்குத் தொடக்கமாகி, அறிவு விருந்தை அனைவருக்கும் அன்புடன் அளித்தது, தோழர் செழியன் எம். ஏ. அவர்களால் தீட்டப்பட்ட "ஜமீன் மாளிகை" என்ற நாடகம். நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களும் அவருடைய குழுவினரும், நாடகத்தில் தோன்றி அற்புதமாக நடித்து, அனைவருடைய உள்ளத்தையும் அள்ளிக் கொண்டனர் என்றால், அதிலே வியப்படைவதற்குரிய சேதி என்ன இருக்

மாநில மாநாட்டு ஓவியக் கண்காட்சியில் கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய அற்புதமான ஓவியங்கள் பலவற்றை உயர்தரமான முறையில் தீட்டிக் காட்டிய உன்னமான "பானு பிரதர்ஸ்" கம்பெனியின் உரிமையாளர்கள்:

பானு—சீனு சகோதரர்கள்.

கிறது? தேன் தித்திக்கும்—வியப்படைவதற்குரிய சேதியா அது? கரும்பு இனிப்பாக இருக்கும்—ஆச்சரியப்படக்கூடிய சம்பவமாக அது? அதுபோலத்தான் கே. ஆர். ஆர். நடிப்பு, நடிப்புக் கலைக்கே ஒரு புது மெருகைக் கூட்டும் என்பதும் வியப்படையக் கூடிய சேதி ஆகாதே!

நான்காம் நாள் 16–12–51

பகல்

முற்பகல் 11-மணி முதல் 1-மணி வரையிலும், பிற்பகல் 4-மணி முதல் 7-மணி வரையிலும், நாட்டையும் உலகத்தையும் எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் எத்தகு கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதைத் திட்டவட்டமாக எடுத்துக் காட்டும் 29-தீர்மானங்கள், இயக்கத் தோழர்கள் பலரால் நன்கு விளக்கிப் பேசப்பட்டு, ஏகமனதாக நிறைவேறின. தீர்மானங்கள் முடிவுற்றதும், தலைவர் அண்ணாதுரை, பொதுத் தேர்தல்—சமுதாய மறுமலர்ச்சி—கலையும் வாழ்வும்—எதிர்காலத்தில் நாம்—திராவிடத் தனியரசு முதலிய பல்வேறு பிரச்சினைகள் பற்றி சுமார் ஒரு மணி நேரம் சொற்பொழிவாற்றி, கழக ஆதரவுபெற்றுள்ள அபேட்சகர்களின் பட்டியலை வெளியிட்டு, தன் தலைமையுரையை நிகழ்த்தி முடித்தார்.

இரவு

அறிஞர் அண்ணா அவர்களால் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் தீட்டப்பட்ட அவரின முதல நாடகமாகிய 'சந்திரோதயம்', தோழர் கே. ஆர். ஆர் குழுவினரால் சிறப்புற நடத்தப்பட்டது.

நான்காம் நாள், பகல் மாநாட்டின்போதும், இரவு நாடகத்தின்போதும், கூட்டம், இரண்டு இலட்சம் என்கிற எண்ணிக்கையை அடைந்து, சமாளிக்க முடியாத அளவு பெருகிவிட்டது. திராவிடத்தனியரசு அமைய வேண்டும் என்பதிலே, மக்கள் மன்றத்திற்குள்ள ஆர்வம் எவ்வளவு அதிகம் என்பதையே கடலெனத் திரண்டிருந்த அம் மக்களின் கூட்டம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

நான்கு நாட்கள்

மாநில மாநாடு நடைபெற்ற நான்கு நாட்களும் திராவிடத்தோழர்கள் ஆயிரமாயிரவரின் உள்ளத்தில் மகத்தான எழுச்சியையும் ஆர்வத்தையும் ஊட்டியிருக்கிறது. அந்த எழுச்சியும் ஆர்வமும், இன்றையதினம் வேதனைக் காடாகக் காட்சிதரும் இந்த நாட்டை, இன்பத் திராவிடத் தனியரசாக மாற்றி அமைக்கும் மகத்தான பணிக்கு நிச்சயம் பயன்படும் என்பதை யார் மறுக்க முடியும்?



மாநாட்டில், அண்ணா, பேசத் தொடங்கி விட்டார்! செந்தமிழ் புன்னகை பூத்த முகத்துடனே மாநாட்டில், வீர உலா வரத் தொடங்கிவிட்டது.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிடநாடு, ஒருநாட்டிற்குத் தேவையான எல்லைகள் பெற்றிருக்கிறது. பாகிஸ்தானே, தொடர்பான எல்லைகளைக்கூடப் பெற வில்லை. அந்த பாகிஸ்தானே வாங்கமுடிந்து விட்டதென்றால், நாம் ஏன் வாங்க முடியாது? திராவிடநாடு பெற்றுவிட்டால் வடநாட்டு மார்வாடிகளை விரட்டிவிடுவீர்களா என்கிறார்கள். விரட்டமாட்டோம். அரசாங்க அனுமதியை அவர்கள் பெறவேண்டும். பெற்றால் தான் இங்கு தங்க முடியும். அவர்கள் அரசாங்க அனுமதி பெற்ற அயலார்கள், பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர்போல இங்கே இருக்கலாம்.

திராவிடநாடு பிரிவினையை, மக்கள் முன் வைத்து 1954-ல் பொதுமக்கள் வாக்கெடுப்பு (Referendum) நடத்துவோம். அதன்பிறகு, மக்கள் தீர்ப்பை, மத்திய சர்க்காரிடம் காட்டிக் கேட்போம். அவர்கள் பிடிவாதம் செய்தால், ஐ. நா. சபைக்குப் போவோம். மத்திய சர்க்கார் மறுப்பார்கள். எதிர்த்தால் சிறையில் தள்ளக்கூடும். அப்பொழுது நடைபெறும் தேர்தலில் நாம் கலந்துகொள்வோம். சட்டசபையில் அதனையே தீர்மானமாக்கிடுவோம். சட்டசபைகளிலும் அப்பொழுது போராடுவோம். வடநாட்டு சர்க்கார் நமது மந்திரி சபையைக் கலைப்பார்கள். அதே பிரச்சினையை வைத்து மீண்டும் தேர்தலில் போட்டியிடுவோம். மீண்டும் மீண்டும் நாம் ஜெயிப்போம். இத்தகைய முறையில் போராட்டம் நடைபெறும். மந்திரி சபையில்லாமல், மக்கள் என்ன செய்வார்கள் என்ற சந்தேகம் வேண்டாம். பிரிட்டிஷார் ஏற்படுத்தி வைத்துள்ள நிர்வாக இயந்திரம் மந்திரி இல்லாமலும் பணியாற்றும்.

1960-ல், நிச்சயமாக ஒரு அரசியல் கொந்தளிப்பு இருக்கும். அப்பொழுது ஒரு போராட்டத்தில் நாம் குதிக்கவேண்டிவரும். வடநாட்டு சர்க்காருக்கு வரி கொடுக்க மாட்டோம். வடநாட்டு சர்க்கார் நடத்தும் ரயிலில் டிக்கட்டில்லாமல்தான் ஏறுவோம் என்றெல்லாம் போராட்டத்தின் திட்டங்கள் அமையலாம். ஆகவே, தோழர்களே அதற்கான முறையில் பணியாற்றுங்கள்!

தோழர்களே, இரண்டு லட்சம் உறுப்பினராவது இந்த ஆண்டு சேர்ந்தாகவேண்டும். நீங்கள் எனக்குப் போட்ட மாலைகள் பெரிதல்ல—அமைத்திருக்கும் பெரிய பந்தல் அல்ல முக்கியம்—உறுப்பினர் எண்ணிக்கை பெருகவேண்டும். அந்த எண்ணிக்கைதான் என்னை உயர்த்தும்—உங்கள் பொதுச் செயலாளரை உயர்த்தும்—அதுவே உங்களை உயர்த்தும்.

தோழர்களே, ஆர்வத்தோடு உங்களைப் பார்க்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அச்சத்தோடும் பார்க்கிறேன். வளர்ந்திருக்கும் ஆர்வத்தை வகைப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால், நம்மையே அது கொன்றுவிடும். ஆர்வத்தை அளவில்லாமல் வளர்த்திருக்கிறோம். அதற்கேற்ற பணியாற்றும் வழி அமைக்கவேண்டும். சர்க்கார் தடையுத்தரவுகள், உங்கள் வீட்டு ஓடுகளாகக் கருதுங்கள். அடக்கு முறைகள் எல்லாம், விளையாட்டுக் கருவிகள்! வீட்டுக்கும் சிறைக்கும் வித்தியாசம் தெரியக்கூடாது! ஆம் அப்பொழுதுதான் இழந்த திராவிடத்தைப் பெற முடியும்! அத்தகைய வீரத்தியாகம் செய்யத் தயாராகுங்கள்! கண்ணீர்த்துளிகளே, நாட்டின் கண்மணிகளே!, அந்தக் காணிக்கையை எனக்குத் தாருங்கள். வணக்கம்.

புதிய வெளியீடுகள்!

சிதைந்த வாழ்வு!

சமூகக் கொடுமையை விளக்கும் துன்பச் சுவைமிகுந்த சீர்திருத்த நாடகம்.

விலை ரூ. 1—4—0

தன்மதிப்புப் பாடல்

(இரண்டாம் புத்தகம்)

இதில் வேலைக்காரி, ஓர் இரவு, மந்திரிகுமாரி, பொன்முடி முதலிய பல படங்களிலுள்ள இனிய மெட்டுகளில் எழுதப்பட்ட சீர்திருத்தப் பாடல்கள் நிறைந்துள்ளன.

விலை அணா 8

தபால் செலவு தனி.

விற்பனையாளருக்கு, 25% விதம் கழிவு தரப்படும்.

நிர்வாகி,

ஞாயிறு நூற்பதிப்பகம்

பாண்டிச்சேரி.

சொற்ப பிரதிகளே எஞ்சி உள்ளன! வேண்டுவோர் உடனே தெரிவிக்க

திராவிடர் டைரி—1952

திராவிடர் அனைவரும் பெற்றிருக்கவேண்டிய மிகச்சிறந்த நாட்குறிப்பு

ஒவ்வொரு தி. மு. க. தோழருக்கும் பூரிப்பளிக்கத்தக்க புதுவகை வெளியீடு.

இளைஞர் உலகத்தின் இதயகீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லா விவரங்களும் அடங்கிய எழிலமிகு ஏடு.

உங்கள் பிரதிக்கு உடனே முந்திக் கொள்ளுங்கள்!

சென்ற ஆண்டுபோல கிடைக்கவில்லையே என்று பிறகு வருந்தாதீர்கள்!

இந்த ஆண்டின் நாட்குறிப்பில்

* அறிஞர் அண்ணாதுரையின் சென்ற 15 ஆண்டு காலப் பேச்சு, எழுத்து ஆகியவற்றிலிருந்து அரிதின் முயன்று திரட்டப்பட்ட அரிய பொன்மொழிகள் ஒரு நாளைக்கு ஒன்று வீதம் 365—இவை, சென்ற இரண்டு ஆண்டு டைரிகளிலும் வெளிவராதவை, புதியவை, சிறந்தவை.
* தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாவின் புதிய புகைப்படம்.
* தி. மு. க. மாநிலமாநாட்டின் திறப்பாளர் நீலமேகம், கண்காட்சித் திறப்பாளர் சிற்றரசு, விளம்பரச் செயலாளர் கருணாநிதி, செயலாளர்கள் மணிமொழியார்—மனோகரன், வரவேற்புத் தலைவர் என். வி. நடராசன் ஆகியோரின் படங்கள்.
* தி. மு. க. கொடி. இரு நிறத்தில்
* மதுரைப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட கழகச் சட்டதிட்டத்தின் சுருக்கம்.
* கழகமாளிகையின் புகைப்படம்.
* தலைமைக் கழகப் பொதுக்குழு, துணைக் குழுக்களின் விவரங்கள், உறுப்பினர் பெயர்கள்
* தி.மு.க, கிளைகள் 670ன் விவரங்கள், அவற்றின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் விளம்பர உறுப்பினர் பெயர்கள்—மாவட்ட வாரியாக
* மாவட்டக் கழகங்களின் விவரம்
* தி.மு. மாணவர் கழகவிவரங்கள், செயல் உறுப்பினர் பெயர்கள்.
* திராவிடர் கொண்டாடுதற்குரிய திருநாட்கள்
* அரசினர் விடுமுறை நாட்கள்
* தபால் தந்தி கட்டண விவரங்கள், விற்பனை வருமான வரி விவரங்கள், ஆவணப் பதிவு (ரிஜிஸ்ட்ரேஷன்) கட்டணங்கள் மற்றும்பல இன்றியமையாக் குறிப்புகள்.

அழகான அமைப்பு 570 பக்கங்கள் விலை ரூ. 1-0-0

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ. 1—2—0-ம், பவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—6—0-ம் அனுப்பவேண்டும்,

விற்பனையாளர் கழிவு 20% அனுப்பும் செலவு வேறு.

முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது,

போர்வாள் அலுவலகம் பவழக்காரத் தெரு சென்னை 1.

சென்னை சட்டசபைத் தேர்தல்

சென்னை ஆர்பர் தொகுதி —16—1—52

தி. மு. கழக ஆதரவு பெற்ற

K. மகமத் இப்ராஹிம்

B. A, B. L அவர்களை ஆதரித்து



ஒட்டகம் சின்னமுள்ள பெட்டியில் உங்கள் ஓட்டுகளைப் போடுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

திமுக தேர்தல் குழு

திராவிட அரசு—நம் போர் முரசு!

[மாநில மாநாட்டைத் திறந்துவைத்த தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் ஆற்றிய திறப்புவிழாச் சொற்பொழிவின் விவரம்—நம் இலட்சிய கீதத்தின் விளக்கம்—கீழே தரப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர்களின் ஆணவப் போக்குக்கு ஒரு சாட்டையடி, பழமைச் சக்திகளுக்கு ஒரு கசையடி, நம் திராவிட அரசு அமைவதற்கான ஒரு போர் முரசு, இந்தச் சொற்பொழிவு.]

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டுத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களே! மாநாட்டுப்பிரதிநிதிகளே! மற்றும் இங்குக் குழுமியுள்ள தோழர்களே! தோழியர்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம் மாநாட்டைத் துவக்கி வைக்கும் பணியை எனக்களித்துப் பெருமைப்படுத்திய வரவேற்புக்குழுவினருக்கு என் நன்றிகலந்த வணக்கம் உரித்தாகுக. எனக்களித்த இந்தப் பெருமையைத் தஞ்சை மாவட்டத்துக்கு அளித்த பெருமையாகவே கருதுகிறேன்.

நாம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளுக்குள் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட மாநாடு நடத்தி, இன்று மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்த இவ்விடம் கூடியிருக்கிறோம். இம் மாநாடு நான்கு நாட்கள் நடந்து திராவிடநாடு தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டியதற்கான நல்லதொரு திட்டத்தை வகுத்துக் கொடுக்குமென்று எதிர்பார்க்கிறேன். மாநாட்டில் நிறைவேறும் திட்டங்களைச் செயல்முறையில் நடத்திக்காட்டி நம் நாட்டு விடுதலைக்குப் பாடுபடும்படி இங்குக் குழுமியுள்ள உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நம் கழகத்தின் முக்கியமான திட்டம் நாட்டுப் பிரிவினைதான் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும் கழகம் துவங்கி இரண்டு ஆண்டுகளில் 600-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் அமைத்து 2000-க்கு மேற் பொதுக் கூட்டங்கள் நடத்தி, நாட்டுப் பிரிவினைத் திட்டங்களையும், சமூகச் சீர்திருத்தத் திட்டங்களையும் பொதுமக்களுக்கு விளக்கிடும் நல்லதோர் பணிபுரிந்து வந்திருக்கிறோம்.

'திராவிட-நாடு' என்ற சென்னை மாகாணம் வடநாட்டு ஆட்சிப் பிடிப்பிலிருந்து பிரிக்கப்பட்டு தனி சமதர்மக் குடியரசு நாடாகத் திகழ வேண்டுமென்ற நம் கழகத்தின் அடிப்படைத் திட்டத்தை தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று பகுதிகளிலும் எல்லா ஊர்களிலும் நம் கிளைக்கழகங்களை நிறுவி அதன் மூலம் பொதுமக்களுக்கு விளக்கி பிரச்சாரம் செய்து இந்த மூன்று மொழியாளர்களும் நம் கழகத்தில் இணைக்கப்பட வேண்டும். நம் திட்டங்களை விளக்குவதற்காக தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் நான்கு தினசரி பத்திரிகை அவசியம் தேவை. அதற்கான முயற்சிகளை ஆங்காங்கு உள்ள தோழர்களைக் கலந்து செய்யும்படி பொதுச் செயலாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தினசரி பத்திரிகை இல்லாமல் நாட்டுப் பிரிவினைப் போராட்டம் நடத்துவது, ஆயுதங்களுடன் இருப்பவனுடன் ஆயுதமில்லாதவன் நடத்தும் போராட்டத்துக்கு ஒப்பாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த மாநில மாநாட்டுக்குள் திராவிட நாட்டு எல்லைக் குட்பட்ட இடங்கள் பூராவும் சிற்றூர்கள் உட்பட எல்லா ஊர்களிலும் நம் கிளைக் கழகங்கள் பல்லாயிரக்கணக்கில் நிறுவி அவைகள் மூலம் நாட்டுப் பிரிவினைத் திட்டங்களையும் சமூக சீர்திருத்தத் திட்டங்களையும் பட்டி தொட்டிகளிலுள்ள பொதுமக்கள் நன்கு அறியும்படி தீவிரப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பது எனது கோரிக்கை.

நம்முடைய கழகத் திட்டத்தில் திராவிட நாட்டைப் பிரித்து நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், தொழிலாளிகளுக்குத் தொழில் இந்த நான்கு காரியங்களும் பூர்த்தி செய்தல் அவசியமாகும். இந்தக் காரியங்களைப் பூர்த்தி செய்து கொள்ள முதலில் நாம் வடநாட்டு

மத்திய ஆட்சிப் பிடியிலிருந்து விடுபட வேண்டும். தனி நாடாகப் பிரியாமல் ஆட்சிமட்டும் நம் கைக்கு வந்தாலும் நாம் நம்முடைய திட்டங்களை நிறைவேற்றிப் பொதுமக்களுக்கு நன்மை செய்ய முடியாது என்பது நான்கு வருட காங்கிரஸ் ஆட்சியின் மூலமும் நம் மந்திரிகள் வடநாட்டுக்குக் காவடி எடுப்பதன் மூலமும் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறோம்.

நம் நாட்டில் வறுமையும் பசிப் பிணியும் தாண்டவமாடுகின்றன. எங்குப் பார்த்தாலும் பட்டினிச் சாவுகள். மக்கள் உயிர்வாழ வகையின்றி உணவுக்காக தெருக்களிலே அலைந்து வெளியில் போடும் எச்சில் இலைகளில் ஒட்டிக்கொண்டிருப்பதைத் தின்பதற்காக நாய்களுடன் போராடித் தின்றுவிட்டு ரோட்டின் ஓரங்களில் மழையிலும் வெய்யிலிலும் படுத்துறங்குவதை நாம் கண்ணாரக் கண்டு வருகிறோம். காங்கிரஸ் மந்திரிகள் இதற்கெல்லாம் பரிகாரம் செய்ய எவ்வித திட்டமும் தீட்டாமல் ஊர் சுற்றுவதும் நடனக் கச்சேரிகளுக்குத் தலைமை வகிப்பதிலுமே அவர்களுக்கு நேரம் சரியாகப் போகிறது.

நம்நாட்டில் கைத்தறித் தொழிலாளர்களுக்குத்தேவையான அளவு நூல் கிடைப்பதில்லை. ஆனால் நம் நாட்டில் நூல் நூற்கும் ஆலைகள் தான் அதிகம். நெசவாலைகள் அதிகம் கிடையாது இங்கு உற்பத்தியாகும் நூலிற் பெரும்பகுதி வடநாட்டுக்கு அனுப்பப்பட்டு விடுகிறது. இங்கு உற்பத்தியாகும் நூலை இம் மாகாணத்துக்குத் தேவையான அளவு எடுத்துக்கொள்ள இந்த மாகாண சர்க்காருக்கு அதிகாரமில்லை. வடநாட்டு சர்க்கார் ஏதோ ஒரு பகுதி ஒதுக்குவதைத்தான் இம் மாகாணத் தேவைக்கு எடுத்துக்கொள்ள முடியும். அதைக் கைத்தறியாளர்களுக்கு கொடுத்தால் அவர்களுக்கு மாதத்தில் நான்கு நாட்களுக்குக்கூட வேலைக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே நம் நாட்டுக் கைத்தறி நெசவு நசித்துப்போக வேண்டுமென்பதற்காகவே வட நாட்டுமில் முதலாளிகளின் சர்க்காரான நேரு சர்க்கார் சதி செய்கிறதென்றே நினைக்கிறேன். கைத்தறி நெசவாளர்கள் நூல் கிடைக்காத காரணத்தால் வேலையின்றி குடும்பம் குடும்பமாக பல ஊர்களிலும் பிச்சை எடுத்துக்கொண்டு அலைவதையும் பிச்சை வதையும் நாம் நேரிலும் பத்திரிகை வாயிலாகவும் பார்த்து வருகிறோம்.

நம் நாட்டில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களையும் நம் இஷ்டம்போல தேவையான அளவு உபயோகித்துக்கொள்ள நமக்கு உரிமை கிடையாது. நமக்குத் தேவையான அளவு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு மத்திய சர்க்கார் அனுமதிக்காததாலும் நமக்குத்தேவையான அளவு மத்திய சர்க்காரால் கொடுக்க முடியாததாலும், அடிக்கடி நமக்கு முக்கிய உணவுப் பொருளான அரிசியின் அளவைக் குறைத்து உத்திரவு பிறப்பிப்பதுடன் அரிசி சாப்பிடுவதை மாற்றிக்கொள்ளுங்கள்என்று நமக்கு உபதேசம் புரிகிறார்கள் மாகாண சர்க்கார். ஒரு அவுன்ஸ் அரிசி அதிகம் கொடுக்கவேண்டுமானாலும் ஒரு கெஜம் துணி அதிகம் கொடுக்கவேண்டுமானாலும் வடநாட்டு மத்திய சர்க்காரிடம் மண்டியிட்டுப் பிச்சை கேட்கும் நிலையிலிருப்பதைப் போக்க வேண்டுமென்பதுதான் நம்பிரிவினைத்திட்டம்.

இன்று ஆட்சியிலிருக்கும் தோழர்கள் நம் கழகத்தைக்கண்டு பயப்படுகிறார்கள். காரணம் ஆட்சியை நாம் கைப்பற்றி விடுவோம் என்ற பயம். இது அவர்கள் நம்மைச் சரியாகப் புரிந்துகொள்ளாததன் விளைவு. அவர்கள் நம் திட்டங்களையும் கொள்கைகளையும் சரியாகத் தெரிந்து கொள்ளவுமில்லை. தெரிந்து கொள்வதற்கு முயற்சிக்கவுமில்லை. எந்தக் கட்சியாளர் இந்த நாட்டு ஆட்சியை நடத்துவதானாலும் நமக்குக் கவலையில்லை. ஆனால் திராவிட நாடு தனி நாடாகப் பிரிந்து சுதந்திர சமதர்மக் குடியரசாக இயங்கவேண்டும் என்பதுதான் நம் முடிவு. இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்பவர் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுக்கு ஆதரவு தர முன் வருகிறோம். நம் கவலை எல்லாம் திராவிடநாடு பிரிந்தே தீரவேண்டும் என்பது தான்.

வடநாட்டு ஆதிக்கத்தின் கீழ் நாம் இருக்கும்வரை நம் மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஏஜண்டாக இருந்து வரி வசூலித்தனுப்புவது தவிர வேறு எந்த நன்மையையும் பொதுமக்களுக்குச் செய்யமுடியாது. நம் நாட்டுக்குகந்த திட்டம் எதைத் தீட்டினாலும் வடநாட்டாதிக்கம் சட்டத்தின் மூலம்

யில் நன்மை செய்ய முடியாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது.

வெள்ளையர் ஆண்ட காலத்தில் எப்படி பார்ப்பானர்களுக்கே எல்லாப் பெரிய உத்தியோகங்களும் கொடுத்து பெருவாரியான நம் இனமக்களை அடக்கி ஆண்டார்களோ, அதேபோலதான் இன்றைய சுதந்திர ஆட்சியிலும் சகல உத்தியோகங்களும் பார்ப்பனர்களுக்களித்து அவர்களைக்கொண்டு நம்மை அடக்கியாளுகிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து வாங்கப்பட்ட சுதந்திரம், இன்று, பனியா, பார்ப்பனக் கூட்டு ஏகாதிபத்தியதுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதுடன் அவர்களின் இன உயர்வுக்குத்தான் ஆக்கம் தருகிறதென்பது இங்குக் குழுமியுள்ள அனைவருக்கும் தெரியுமென்றே கருதுகிறேன். பார்ப்பனர்களுக்கு என்றே சட்டங்களைத் திருத்தும் அளவுக்கும் இந்தியக் குடியரசுத் தலைவர் தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் தனி அதிகாரத்தைப் பிரயோகிக்கும் அளவுக்கும் மத்திய ஆட்சியை ஆட்டிப்படைக்கின்றனர் பார்ப்பனர்.

திராவிட மக்கள் ஓர் அளவுக்கு முன்னேற வசதியளித்து வந்த கம்யூனல் ஜீ ஓ உத்தரவை ரத்து செய்துவிட்டு, பதிலாக வேறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதன் மூலம் நமக்கும் தாழ்த்தப் பட்டோருக்குமாக 100-க்கு 40 இடம் ஒதுக்கி இருப்பது போக பாக்கி 60 இடங்களும் தகுதி, திறமைக்காக ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த 60 இடங்களும் பார்ப்பனர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களாகவே நடைமுறையில் பயன்படும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

100-க்கு 3-பேர்களாக உள்ள இனத்தார் இன்றும் 100-க்கு 97-பேர்களாக உள்ள நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார்கள் மத்திய சர்க்கார் மூலம் என்பதை எண்ணிப் பார்க்கும் எந்தத் திராவிடரும் வெட்கப்படாமலிருக்க முடியுமா? ஏதோ மாதா மாதம் சம்பளம் வருகிறது, பர்மிட்டுகள் மூலமும் இதர பல வழிகளிலும் வரும்படி கிடைக்கிறதென்பதற்காக நம் சட்டசபை உறுப்பினர்களும் மந்திரிகளும் அவர்களுக்கு வால் பிடிப்பவர்களும் வேண்டுமானால் இந்தப் பார்ப்பன ஏகாதிபத்தியத்தைப் பற்றிக் கவலையோ வெட்கமோ படாமலிருக்கலாம், ஆனால் நாம் இதற்கு இடங்கொடுக்க முடியாது. இந்தப் பார்ப்பன பனியா ஏகாதிபத்தியத்திலிருந்து நம் திராவிடநாடு விடுபட்டே ஆகவேண்டும்.

வகுப்புகள் இருக்கும்வரை வகுப்புவாரி உரிமைகள் இருந்தே தீரவேண்டும். வகுப்பு உரிமைகள் ரத்து செய்துவிட்டதின் காரணமாக இந்த நாட்டின் பெரும்பான்மையோரின் உண்மையான பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க முடியாமல் செய்துவிட்டார்கள். இது கொடுமையினும் கொடுமையாகும்.

பார்ப்பனர்கள் உத்தியோகங்களைக் கைப்பற்றிக் கொண்டு உத்தியோகத் துறையில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். ஆனால் பனியாக்கள் மார்வாடிகள் வியாபாரத் துறையைக் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வியாபாரத் துறையைக் கைப்பற்றிக் கொண்டு அயல் நாட்டுப் பொருள்களுக்கு இந்தியாவை நல்ல மார்க்கெட்டாகப் பயன்படுத்திக் கொண்டு சுரண்டிக் கொண்டிருந்தனர். இன்று சுதந்திரம் பெற்ற பிறகு பிரிட்டிஷாருக்குப் பதிலாக வடநாட்டாருக்கு மார்க்கட்டாக இருந்துகொண்டு அவர்களுடைய சுரண்டலுக்கு ஆளாகி அவதிப்படுகிறோம், ஆகவே சுரண்டுகிறவன் மாறினானே தவிர சுதந்திரம் வந்த பிறகும் நாம் சுரண்டுவதிலிருந்து மீளவில்லை. உத்தியோகத் துறையில பார்ப்பனர் சுரண்டுவதற்கும் வியாபாரத் துறையில் பனியாக்கள் மார்வாடிகள் சுரண்டுவதற்கும் ஒப்பந்தம் செய்துகொண்டு ஆட்சி நடத்துகிறார்கள் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

மத்திய சர்க்கார் பலவழிகளிலும் நம் நாட்டுப் பணத்தைச் சுரண்டிச் செல்கிறது. ரெயில்வே கட்டணங்களை 100-க்கு 25 வீதம் உயர்த்தியும் பிரயாணிகளுக்கு எவ்வித வசதியும் செய்து தரப்படவில்லை.

பல பொருள்களின் பேரிலும் வரியை உயர்த்தி யிருக்கிறார்களென்பதை நான் சொல்லத் தேவையில்லை. உதாரணத்துக்குச் சொல்லுகிறேன், புகையிலையின் பேரில் 50 ரூபாய் கிரயமுள்ள புகையிலைக்கு 200-க்கு மேல் வரி விதித்திருக்கிறார்கள். இதுபோல் பல துறைகளிலும் வரியை உயர்த்தி மத்திய சர்க்கார் பல கோடி ரூபாய்களை எடுத்துக் கொள்கிறது.

காங்கிரஸ்காரர்கள் இராம ராஜ்பத்தைக் கொண்டுவருகிறோம் என்று சொன்னார்கள்,

நாம் அப்போதே அதை மறுத்தோம். ராமாயணக் கதையில் ராமனும் சீதையும் 14 வருட வனவாசம் என்ற காலத்தில் உண்ண உணவு இன்றி, உடுக்க உடையின்றி இருக்க இல்லமின்றி படுக்கப் பாயின்றி கனிகளையும் கிழங்குகளையும் தின்றும் மரப் பட்டைகளை உடுத்தியும் மணல் மேடுகளில் மரத்தடியில் படுத்துறங்கினதாக ராமாயணக் கதை சொல்கிறது. ராமராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற காங்கிரஸ் சர்க்காரும் ராமனும் சீதையும் காட்டில் வாழ்ந்த கஷ்ட நிலையைப் போல் இந்த 4 வருட ஆட்சியில், நாட்டில் வாழும் மக்களுக்குக் கஷ்ட நிலையைக் கொண்டுவந்து விட்டுவிட்டார்களென்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

நம்மைப் பார்த்து நாத்தீகர்கள் என்று பிரச்சாரம் செய்கிறார்கள். நாம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையுடையவர்கள். சிலை வணக்கத்தை மறுப்பவர்கள் என்பதை அறிந்தும் அறியாதது போல் தப்புப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆஸ்திக தோழர்களைக் கேட்கிறேன் நீங்கள் வணங்கும் ஆண் பெண் சிலைகளுக்கு உயிர் உள்ளதாக நினைத்திருக்கும் நீங்கள் பெண் சிலைக்கு ஆண் பூசாரிகளைக் கொண்டு குளிப்பாட்டி சேலை பாவாடை ரவிக்கை போட்டுக் கட்டும்படி செய்கிறீர்களே, இது தர்மமா? நீதியா? ஒழுக்கமா என்பதைப் பகுத்தறிவைக் கொண்டு சிந்தித்துப் பார்க்கும்படி ஆஸ்திகர் என்பவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இனியாவது ஆஸ்திகர்களும் தர்மகர்த்தாகளும் ஆட்சியாளரும் கவனித்து பெண் சிலைக்கு ஆண் பூசாரியைவிட்டு குளிப்பாட்டச் செய்வதை நிறுத்துவார்களா என்று கேட்கிறேன்.

நிற்க, திராவிடநாடு பிரிவினைத் திட்டம் வேலூரில் கூடிய தமிழர் மாநாட்டில் மறைந்த மாவீரர் சர். ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்களால் தரப்பட்டு, பெரியார் அவர்களால் வளர்க்கப்பட்டு, நம் அண்ணா அவர்களின் அறப்போர்த் திட்டங்களால் அடையப் போகும் திட்டமாகும். நம் திராவிட நாட்டை அடைந்து வாழ்வது இல்லையேல் பிரிவினை அறப்போரில் மாள்வது என்ற முடிவில் நம் எதிர்காலம் இருக்கிறது என்பதை எண்ணித் தொண்டுபுரிய இயக்கத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மறுமுறையும் எல்லோருக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு இம்மாநாட்டை துவக்கிவைக்கிறேன்.

வாழ்க திராவிடம்! வளர்க திராவிட முன்னேற்றக் கழகம்!

நம் மாநில மாநாட்டின்

வரவேற்புத் தலைவர

என். வி. நடராசன்

கண்காட்சித் திறப்பாளர்

சி. பி. சிற்றரசு

புரட்சிப் பாசறையின் பொன்னான முடிவுகள்

[பிரிட்டிஷ் காமன் வெல்த்தில் நாம் இருக்கலாமா—கூடாதா? உலக வல்லரசுகளின் இன்றைய போக்கு சரியானதா—அல்லவா? புதுச்சேரி, காரைக்கால், கோவா, டையூ, டாமன் போன்ற இடங்களில் உள்ள வெளிநாட்டு ஆட்சி இன்னமும் இருக்கலாமா—கூடாதா? உணவுப் பிரச்சினை, ஆரம்ப ஆசிரியர் பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை, தமிழாசிரியர் பிரச்சினை, இரயில்வே பிரச்சினை—இவைகளைப்பற்றி நம் கருத்தென்ன? இத்தகு கேள்விகள் எல்லாவற்றிற்கும் திட்டவட்டமான விடைகளைத் தந்துள்ளன மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள். அகில உலகப் பிரச்சினைகளிலிருந்து சென்னை நகரம் யாருடையது என்கிற பிரச்சினை வரையில், வல்லரசுகளின் விளையாட்டிலிருந்து இந்து சட்டத்திருத்த மசோதா வரையில், திராவிடநாட்டுக் கூட்டாட்சியிலிருந்து தொழில்களைத் தேசிய மயமாக்குவது வரையில் எல்லாப் பிரச்சினைகளையும் ஜனநாயகக் கண்ணோட்டத்தோடு பார்த்து சரியான முடிவுகளைச் செய்திருக்கிறது மாநில மாநாடு. இதோ அந்த முடிவுகள்: நம் சிந்தையை மகிழச் செய்யும் அத் தேன் துளிகள்!]

அனுதாபம்

1. திராவிட இயக்கத்தின் சிறந்த உழைப்பாளியும் அரும் பெரும் தளபதியுமான தோழர் கே. வி. அழகிரிசாமி, தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி, தமிழுக்கும், தமிழுலகுக்கும் பணியாற்றி வந்த பேராசிரியர் மறைமலை அடிகள், தஞ்சை ஐ. குமாரசாமி, நாகர் கோவில் பி. சிதம்பரம், சேலம் கல்லூரித் தலைவர் ஏ. இராமசாமி ஆகியவர்கள் மறைந்த செய்தி கேட்டு இம் மாநாடு வருத்தத்தில் ஆழ்வதோடு தன் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

2. பாகிஸ்தான் பிரதமரான தோழர் லியாகத் அலிகான் அண்மையில் கொடியன் ஒருவனால் படுகொலைக்கு உள்ளான செய்தி கேட்டு வருந்துவதோடு இம் மாநாடு தன் ஆழ்ந்த அனுதாபத்தை பாகிஸ்தான் மக்களுக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் தெரிவித்துக்கொள்கிறது.

வகுப்புவாரி உரிமைச் சட்டம்

3. திராவிடப் பெருங்குடி மக்கள், பல் வேறு வகுப்புகளின் பேரால் வழி வழி முறையாகப் பிற்போக்கிலே தள்ளப்பட்டும் தனியே ஒதுக்கப்பட்டும், நிலையில் தாழ்த்தப்பட்டும் இருக்கும் அவல நிலையை—அநீதி முறையைப் போக்கி, மக்களனைவரையும் சம நிலையிலும், சமவாய்ப்பிலும் கொண்டுவர முன்பு நடைமுறையில் இருந்த வகுப்புவாரி உரிமைச்சட்டம் பெரிதும் உதவியாக இருந்தாலும், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் நீங்கி சமநிலை ஏற்படும்வரையில் அந்தச் சட்டம் இன்றியமையாதது என்று கருதுவதாலும், முன்னைய சட்டத்தைத் திருத்தி இப்பொழுது அமுலில் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டம் திராவிடப் பெருங்குடி மக்களின் கண்துடைப்பு வேலையாக இருப்பதல்லாமல் வேறு உருவான பலன் எதனையும் தர இயலாததாக இருப்பதாலும், முன்னைய வகுப்புவாரி உரிமைச் சட்டத்தை பிற்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் நீதி வழங்கும் முறையில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அரசியலாரை வற்புறுத்துவதோடு, வகுப்புவாரி உரிமைச் சட்டத்தை அழித்தொழிக்க சூழ்ச்சிவேலைகள் செய்து வரும் சுயநல சாதிவெறிக் கும்பலின் போக்கை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

நாஞ்சில் பிரச்னை

4. ஏ. திருவிதாங்கூர், கொச்சி ஐக்ய சமஸ்தானங்களிலுள்ள தமிழ் மொழி பேசும் மக்களைக் கொண்ட பகுதிகளைத் தாய்த் தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டும் என்று அங்குள்ள மக்கள் செய்கின்ற நியாயமான கிளர்ச்சியை இம்மாநாடு முழு மனதோடு ஆதரிக்கிறது.

(பி) திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானங்களில் தென் பகுதியிலுள்ள தமிழ்ப் பகுதி

களை நாஞ்சில் மாவட்டமாகக் கருதி மத்திய தி. மு. கழகத்தோடு அதிகாரபூர்வமாக இணைத்துக்கொள்வது என்றும் இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

சென்னை சித்தூர் பிரச்னை:

5. மொழிவழி அரசு அமைக்கப்படும் முறைப்படி சென்னை நகரம் தமிழகத்துக்கு உரிமையானது என்பது மறுப்புக்கு இடமற்ற உண்மையானதாக இருந்தும், மொழிவழி அரசு அமைப்பு முறைப்படி சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி பெருவாரியானவர்களால் தாய்மொழியாகக்கொள்ளப்பட்டுள்ள வட்டாரங்கள் தமிழகத்துடன் இணைக்கப்படவேண்டியது நியாயமானதாக இருந்தும் சிலர் தமிழர் தெலுங்கர் மனபேதமும் கசப்பும் வளரும் விதமாகவும், மொழிவழி அமைப்புக்கு முரண்படும் விதமாகவும் செய்யும் கிளர்ச்சியை இம்மாநாடு கண்டிப்பதுடன், இந்தக் கிளர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு இந்திய சர்க்கார் சென்னையை மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் தனி நகரமாக்கும் முயற்சியில் ஈடுபடுவதையும் இம்மாநாடு கண்டிப்பதுடன், மொழிவழி அமைப்புகளை உடனடியாக ஏற்படுத்தும் கிளர்ச்சிக்கு இம் மாநாடு ஆதரவளித்து, அதன் மூலமாகவே, திராவிட கூட்டாட்சிக்கு வழிகோலுவது என்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

தடையுத்திரவு கண்டனப் பிரச்னை

6. பலாத்காரத்தில் நம்பிக்கை யற்று, அமைதியான வழியைப் பின் பற்றிச் செயலாற்றி வந்துகொண்டிருக்கும் தி. மு. க. பொது கூட்டங்கள், மாநாடுகள் நாடகங்கள் ஆகியவற்றைத்தடுக்கவேண்டி தடையுத்திரவுச் சட்டங்களை நியாயமற்ற முறையில் அரசியலார் ஆங்காங்கு வீசி வந்ததை எதிர்த்து பேச்சுரிமையை நிலை நாட்டும் பொருட்டு, அமைதியாகத் தடையுத்திரவுகளை மீறியும் மத்திய ஆட்சி மந்திரிகளுக்கு கருப்புக்கொடி காட்டியும் சிறை சென்ற தோழர்களை இம்மாநாடு மனமாரப் பாராட்டுகிறது.

பி. இதுவரை தி. மு. கழகத் தோழர்கள் செய்து வந்த உரிமைப் போர்க் கிளர்ச்சிகளை மதிக்கும் வகையிலும் ஜனநாயக உரிமைகளை நிலை நாட்டும் வகையிலும் தடையுத்திரவுகளையெல்லாம் வாபஸ் பெறுமாறு இம் மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

சி. எதிர் காலத்தில் பேச்சுரிமையையும் எழுத்துரிமையையும் பறிக்கும் வகையில் தடையுத்திரவுகள் விதிக்கப்பட்டால் உரிமையை நிலை நாட்டும் வகையில் எத்தகைய தியாகங்களையும் புரிய திராவிட முன்னேற்ற கழகத்தார் தயாராக இருக்க வேண்டும் என்று இம் மாநாடு வேண்டிக் கொள்கிறது.

தடை கண்டனம்

7. (ஏ) இலங்கை தி. மு. கழகத்தின் அழைப்புக் கிணங்கி அங்கு செல்ல அனுமதி கோரிய தி. மு; க. தோழர்களான என். வி. என்., கே. ஏ. மதியழகன் ஆகியோருக்கு அனுமதி வழங்க மறுத்த சென்னை சர்க்காரின் எதேச்சதிகாரப் போக்கை இம் மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

தேனிக் கண்டனம்

8. (ஏ) 4—7—51-ல் தேனியில் நடைபெற இருந்த தி. மு. கழக பொதுக் கூட்டத்தை அப்பகுதிக் காங்கிரஸ்காரர்கள் பலாத்கார முறையில் கலைக்க முயன்று கழகத் தோழர்களையும் பொதுமக்களையும் தாக்கி இழிசெயல் புரிந்த அக்கலகக்காரர்கள் யார் என்று கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்க இதுவரை முயலாத சென்னை அரசியலாரை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(பி) கலகக்காரர்களை அடக்க முயன்ற அதிகாரிகளை அரசியலார் சஸ்பெண்டுசெய்து வைத்திருப்பது, இனிமேல் அப்படிப் பட்ட கலகங்கள வேறு எங்கேனும் ஏற்பட்டால் நேர்மையான வழியைப் பின்பற்ற மற்ற அதிகாரிகள் பின்வாங்குவார்களோ என்ற அச்சம் ஏற்படுவதால் உத்யோக சார்பற்ற நீதிக்குழு ஒன்றை நியமித்துத்நடந்ததைப்பற்றி பகிரங்க விசாரணை செய்து நீதி வழங்குமாறு இம் மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

கைத்தறி பிரச்னை

9. (ஏ) இம்மாகாணத்தில் விவசாயத்திற்கு அடுத்த மிகப்பெரிய குடிசைத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைத்தறி நெசவாளிகள் சர்க்காரின் கட்டுப்பாட்டு முறைகளால் தொழில் முறையில் மிகவும் பாதிக்கப்பட்டு இன்னலுக்கு ஆளானதைக் கண்டு இம் மாநாடு தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு சர்க்காரின் தறி, நூல் கட்டுப்பாடு முறைகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(பி) தங்களின் குறைகளைத் தீர்த்துக் கொள்ள நேரடி நடவடிக்கைகளில் இறங்கி சர்க்காரோடு போராடியும் அடக்குமுறைகளுக்கு ஆளாகியும், இன்னல்களுக்கும் தொல்லைகளுக்கும் உட்பட்டும், தங்களுடைய கட்டுப் பாட்டுணர்ச்சியை, சர்க்காருக்கும், பொது மக்களுக்கும் காட்டிக் கொண்டு கிளர்ச்சியில் ஈடுபட்ட எல்லா கைத்தறி நெசவாளர் ஸ்தாபனங்களையும் இம்மாநாடு பாராட்டுகிறது.

(சி) பெருத்த போராட்டம் நடத்தியதற்குப் பிறகு, நிலைமையைச் சீர்படுத்தித் தருவதாக மத்திய, மாகாண சர்க்கார்களால் அளிக்கப்பட்ட உறுதிக்குக் கட்டுப்பட்டு நெசவாளர் போராட்டம் நிறுத்தப்பட்டது என்றாலும் சர்க்கார் தரப்பில் கூறப்பட்ட வாக்குறுதிகள், நிறைவேற்றப்படாததின் விளைவாக இன்னும் நெசவாளர்கள் நிலைமை மிகவும், மோசமான நிலைமையில் இருப்பதைக் கண்டு சர்க்காரின் பொறுப்பற்ற தன்மையை இம்மாநாடு மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் நிலைமையைச் சீர் கெட விடாமல் போதுமான தேவையான நூல், அந்தப் பகுதிகளுக்கு விநியோகம், செய்யவும், தயாரித்த துணிகளுக்கு உறுதியான விற்பனை இடங்களைத் தேடிப்பிடித்துத் தரவும், நெசவுத் தொழிலாளர்களை கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்த்துக் கொள்ளவும் ஆன காரியங்களை உடனடியாக எடுத்துக் கொள்ளும்படி இம்மாகாண சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

விவசாயப் பிரச்சினை

10 (ஏ) நாட்டில் துண்டுதுண்டாக விளங்கும் சிறு விளை நிலங்களை சாத்யமான அளவுக்கு இணைத்துக் கூட்டுப் பண்ணைகளின் கீழ் கொண்டுவந்து அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு, விவசாய உற்பத்தியை விஞ்ஞான அடிப்படையில் இயந்திர சாதனங்களின் உதவியால் பெருக்குவதற்கு முயலவேண்டும் என்றும், விளைவிக்கக்கூடியனவான அமைப்புள்ள கரம்பு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கு முழு முயற்சியும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் இம் மாநாடு சர்க்காருக்கு அறிவுறுத்துகிறது.

(பி) பருவ மழை தவறினாலும், வெள்ளத்தால் பயிர்கள் சேதமடைந்தாலும், பயிர் வைப்பதற்கான நிகர செலவுத் தொகையை ஐந்து ஏகர் நிலத்திற்கு மேற்படாத சிறு நிலச் சொந்தக்காரருக்கு நஷ்ட ஈடாக சர்க்கார் கொடுத்து உதவவேண்டும் என்று இம் மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்ட நில சீர்திருத்தக் கமிட்டியாரால் நில சீர்திருத்தத்தைப் பற்றியும் நிலமற்ற விவசாயி கூலிகளைப் பற்றியும் தீர்மானித்து சென்னை சர்க்காருக்கு சிபார்சுசெய்து இருந்தும், சென்னை சர்க்கார் நிலச் சீர்திருத்தக் கமிட்டியின் தீர்மானங்களை இன்றளவும் நடைமுறையில் கொண்டுவராததை இம் மாநாடு கண்டிக்கிறது. அத்துடன் குறைந்த பட்சமாகவாவது மேற்படி கமிட்டியாரின் தீர்மானங்களை ஆதரிக்கிறது.

மாணவர் பிரச்னை

11. தி. மு. கழக கொள்கைகளை ஏற்று, அதனால் அதனுடைய நேரடி வேலைத் திட்டங்களிலே தங்கள் பள்ளிப் பயிற்சிக்கு ஊறு ஏற்படும் அளவுக்குப் பங்கு கொள்ளாமல், கொள்கைகளையும், திட்டங்களையும் அறிந்துகொள்ளும் அளவுக்கும், எதிர்கால அரசியல் வாழ்வில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதற்கு ஏற்ற வகையில் உணர்ச்சியும் ஊக்கமும் பெறும் அளவுக்கும் திராவிட மாணவ முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் இருக்கும் அமைப்பை இம் மாநாடு ஆதரிக்கிறது.

குடியேற்ற நாடுகள் பிரச்னை

12. ஏ. ஆதிக்க வல்லரசுகள் குடியேற்ற நாடுகளாகப் பல நாடுகளை ஆக்ரமித்துக் கொண்டு அங்கெல்லாம் அரும்பும் விடுதலை வேட்கையுணர்ச்சியை அடக்கிக் கொடுமைகள் இழைத்துவருவதை வன்மையாகக் கண்டிப்பதோடு ஆக்ரமிப்பு வல்லரசுகள் வெளியேற வேண்டும் என்றும் இம் மாநாடு வற்புறுத்துகிறது.

(பி) குறிப்பாக இந்தியத் துணை கண்டத்தைப் பொறுத்தவரையில் குடியேற்ற நாடுகளை வைத்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்தும் வல்லரசுகளான, போர்த்துகேசிய, பிரெஞ்சு ஆட்சிகள் அந்தப் பகுதிகளைவிட்டு அகல வேண்டும் என்றும் இம்மாநாடு வற்புறுத்துவதோடு, அந்தந்தப் பகுதிகள் தங்கள் தங்கள் எதிர் காலத்தைத் தாங்களே

நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையோடு வைக்கப்படவேண்டும் என்றும் இம்மாநாடு கருதுகிறது.

தொழில் தேசிய மயமாக்கும் பிரச்சினை :—

13. (ஏ) நாட்டின் பொது நலனுக்குத் தேவையானதென்றும், பொருளாதாரவிதிக்கு உகந்தது என்றும் உலக அறிவுடை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் தொழில்களைத் தேசிய மயமாக்கும் திட்டத்தை சர்க்கார் உள்ளன்புடனும் உறுதியுடனும் அமுல் நடத்தாமலிருக்கும் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(பி) உடனடியாக சாக்குபோக்குச் சொல்லாமல் நாட்டின் பொது நலனுக்கும் பாதுகாப்புக்கும் தேவையான தொழில்களை சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

(சி) தேசிய மயமாக்கப்பட்ட சில தொழில்களில் சர்க்காருடைய நிர்வாகத் திறமைக் குறைவால் ஏற்பட்ட நிலைமையை மறைக்க தேசிய மயமாக்கும் திட்டத்தையே குறை கூறும் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசாங்க ஊழியர் பிரச்சினை

14. இந்திய யூனியன் சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வேலை செய்யும் கெஜட் பதிவற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் கீழ்தர சிப்பந்திகளுக்கும் கொடுத்துவரும் சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடகை முதலியவற்றைப் போல சென்னை சர்க்காரின்கீழ் வேலை செய்யும் கெஜட் பதிவில்லாத உத்யோகங்களுக்கும், கீழ்த்தர உத்யோகங்களுக்கும் சம்பளம் பஞ்சப்படி வீட்டுவாடகை முதலியவைகளை சென்னை சர்க்கார் உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

ஆசிரியர் பிரச்சனை:—

(15) பொதுவாகப் பல்வேறு கல்வி நிலையங்களிலும் உள்ள ஆசிரியர்களின் நிலையும், குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்களின் நிலையும் தமிழாசிரியர்கள் நிலையும் பரிதாபத்திற்குரிய அவல நிலையினவாக இருப்பதாலும், அவர்கள் வேறு நல்ல ஊதியம் தரும் பணியினை எதிர்பார்த்து தங்களுடைய பணியை நிலையற்றதாகக் கொள்ளும் மனப்பான்மையில் இருக்கவேண்டியிருப்பதாலும், அவற்றின் காரணமாக நாட்டின் கல்வித்துறை பெரிதும் பாதிக்கப்படுவதால், ஆசிரியர்களின் வாழ்க்கை நிலை உயர்த்தப்படவேண்டும் என்பதிலே அக்கரை கொள்வதோடு, ஊதியம் பெறும் விதத்திலே ஆசிரியர்கள் சங்கங்கள் நிறைவேற்றியுள்ள வேண்டுகோள்களை ஏற்று, அவர்களின் வாழ்க்கைத்தரச் செலவுகளுக்ுப் பொருந்தும் வகையில் பல்வேறுவகை ஆசிரியர்களின் ஊதியங்களைத் திருத்தி அமைக்குமாறு இம்மாநாடு, அரசியலாரையும் பல்கலைக் கழகங்களையும் வற்புறுத்துகிறது.

தொழிலாளர் பஞ்சப்படி:—

(16) நம் நாட்டின் எதிர்கால நல்வாழ்க்கைக்கான தொழில் வளர்ச்சிக்கு ஜீவநாடியாக இருக்கும் இந்நாட்டுத் தொழிலாளர்களுக்கு இப்போதிருக்கும் பஞ்சப்படி தற்போதைய விலைவாசிகள் உயர்வுக்கு ஏற்றாற்போல இல்லாமல் மிகக் குறைந்த அளவில் இருப்பதால் ரயில்வே மில்கள் போன்ற தொழில் ஸ்தாபனங்களில் இருக்கும் தொழிலாளருக்குச் சர்க்காரும், தனிப்பட்ட முதலாளிகளும் பஞ்சப்படியை அவர்கள் வாழ்வு நடத்தும் அளவுக்குத் தேவையானபடி உயர்த்துமாறு இம்மாநாடு சர்க்காரையும், ஆலை நிர்வாகிகளையும்கேட்டுக்கொள்ளுகிறது. இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ளுமாறு இம் மாநாடு சர்க்காரை வற்புறுத்துகிறது.

இரயில்வே பிரச்சனை:—

(17) தென் இந்தியா ரயில்வே, மதராஸ் தென் மராட்டா ரயில்வே, மைசூர் ஆகிய மூன்று ரயில்வேக்களையும் இணைத்து "தென் ரயில்வே" என ஒன்றுக்கிய திட்டத்தினால் ரயில்வே அமைச்சர் உறவினர்கள் மட்டும் லாபம் அடைவதற்கும் ஒரு தனிப்பட்ட வகுப்பினர் நலன் உயர்வதற்கும் அதிக சம்பளம் பெறும் இதர அதிகாரிகள் பலனடைவதற்கும் தவிர, பெரும்பாலான தொழிலாளர்க்கும் குறைவான ஊதியம் பெறும் பணியாளர்களுக்கும், வேலைமாற்றம் இடம் மாற்றம் என்பதுபோன்ற தொல்லைகளைத் தவிர வேறு எதுவும்பயனில்லை. பிணைப்புத் திட்டத்தால், ரயில்வே தொழிலாளர்களுக்கு வசதி செய்து தரப்படுகிறது என்ற பெயரால் பொது மக்களின் வரிப்பணம் ஏராளமாக விரயமாக்கப்படுகிறது. தகுதிநிர்வாகச்செலவு குறைப்பு காரணம் காட்டி ரயில்வேக்களை

இணைத்ததற்கு நேர்மாறாக தகுதிக் குறைவும், நிர்வாகத்தின் ஊழலும், அதிகசெலவும் தான் நடை முறையில் காணப்படுகிறது. இன்னும் பிறவற்றால் எதிர் பாராத லாபம் இல்லாது இத்திட்டம் தோல்வி அடைந்துவருகிறது என்பதைச் சுட்டிக்காட்டி அத்திட்டத்தை நீதியோடு; நேர்மையோடு நல்வழியில் நிறைவேற்றிடவேண்டும் என்று இம் மாநாடு அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

உணவுப் பிரச்சனை:—

(18) நாட்டில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தைப் போக்க, அரிசியை அனுப்பச்சொல்லி சென்னை சர்க்கார் எவ்வளவுதான் கெஞ்சிக் கேட்டாலும், டில்லி மத்ய சர்க்கார், சென்னையைப் புறக்கணிப்பதோ டல்லாமல், அலட்சியப்படுத்தி, சுய தேவைப் பூர்த்தி என்ற வீணான உதவாக்கரைக் கொள்கையைக் கடைப்பிடித்து வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருளைத் தருவிக்காமல் நாட்டில், குறிப்பாக திராவிடநாட்டில் பஞ்சத்தையும் பட்டினியையும் வரவழைத்த இந்திய சர்க்காரின் பொறுப்பற்ற போக்கை மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்து சட்டத்திருத்தம் :—

(19) இந்து மதச் சட்ட சம்பிரதாயத்தின் பேரால் இருந்து வரும் அநீதிகளையும் கொடுமைகளையும் ஓரளவுக்குப் போக்க வல்லதும், குறிப்பாகப் பெண்களுக்குச் சம உரிமையும், முன்னேற்றமும் வழங்கக் கூடியதுமான இந்துச் சட்டத்திருத்த மசோதாவை, நாட்டினுடைய எல்லா முற்போக்கு சக்திகளும் ஆதரித்திருந்தும், வகுப்புவாரிப் பிற்போக்குக் கும்பலின் எதிர்ப்பைக் காரணங்காட்டி உடனடியாகச் சட்டமாக்காமல் தள்ளி வைத்ததை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

பாசீச போக்குக்குக் கண்டனம்;—

(20) பாசீச முறையில், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் பலரை, விசாரணையின்றிக் காவல் கைதிகளாக இன்னும் வைத்திருக்கும் போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன் உடனடியாக அவர்களை விடுதலை செய்து, ஜனநாயகப் பண்பை வளர்க்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

உலக சமாதானம்:—

(21) உலக சமாதானத்திற்கும், நல்வாழ்வுக்கும் ஊறுசெய்யும் வகையில் உலக வல்லரசுகள் தங்களுக்குள் ஏற்படும் ஆதிக்கப் போட்டியின் காரணத்தினால், மூன்றாவது உலகப்போர் ஏற்படும்வகையில்ஏதேச்சாதிகாரப் போக்கில் செல்வதை இம்மாநாடு கண்டிப்பதுடன் உலக சமாதானத்திற்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு திரட்டுவதென்று இம்மாநாடு முடிவு செய்கிறது.

காமன் வெல்த்:—

(22) பொது நலனைக் குறித்துப் பல நாடுகள் ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்வது தேவையானதாக யிருந்த போதிலும் காமன் வெல்த்தில் அங்கம் வகிக்கும் இந்தியாவுக்கு சம அந்தஸ்து தரமறுக்கும் போக்கில் வெள்ளை நிற வெறி திட்டத்தைக் கடை பிடிக்கும் காமன் வெல்த் கழகம் அந்தப் போக்கை மாற்ற ஆவன செய்யாதிருப்பதால், இந்த இழி நிலையை ஏற்றுக் கொண்டு இந்தியா மேற்படி 'அமைப்புடன் இணைந்திருப்பது தன்மானக் குறைவு என்று இம் மாநாடு கருதுவதால் மேற்படி போக்கைக் கண்டிக்கும் அறிகுறியாக காமன் வெல்தைவிட்டு இந்தியா வெளியேறிவிட வேண்டுமென இம் மாநாடு வலியுறுத்துகிறது.

இலங்கைப் பிரச்சனை:—

(23) (a) இலங்கை வாழ் திராவிட மக்களுக்கு உரியதும் நியாயமானதுமான குடியுரிமையை வழங்க மறுக்கும் இலங்கை சர்க்காரின் போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், மேற்படி உரிமைகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை சர்க்காரை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

(b) மேற்படி உரிமைகள் பெற்றுதரும் முயற்சிகளில் சென்னை அரசாங்கம் கேட்டிருந்தும்கூட போதிய சிரத்தை காட்டாமலிருக்கும் இந்திய சர்க்காரின் போக்கைக் கண்டு இம் மாநாடு வருந்துவதுடன் அதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென இம் மாநாடு இந்திய சர்க்காரை வலியுறுத்துகிறது.

(c) இந்நாட்டிலிருந்து ஏற்கனவே இலங்கைக்குச் சென்றுள்ள இந்தியத் தொழிலாளர்களைத் தொல்லைக்குள்ளாக்கி வரும் இலங்கை சர்க்கார் தனது நாட்டில் முத்து குளிப்பதற்காகவும் கள்ளிறக்குவதற்காகவும் மேலும், இந்நாட்டுத் தொழிலாளர் தேவையென்று விளம்பரப் படுத்தியிருப்பதை இந்திய சர்க்கார் அனுமதித்திருப்பதை இம் மாநாடு கண்டிப்பதோடு, இங்கிருந்து தொழிலாளர்கள் எவரையும் இலங்கைக்கு அனுப்பக்கூடாது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

தென் ஆப்ரிக்கா பிரச்சனை

(24 A) தென் ஆப்ரிக்க மலான் சர்க்காரின் அநீதி நிரம்பிய நிறவெறிப் போக்கைக் கண்டிப்பதோடு நிறத்திமிரை எதிர்த்து அறப்போர் புரிந்துவரும் மணிலால் காந்தியையும் அவரது குழுவினரையும் இம் மாநாடு பாராட்டுகிறது.

(B) மேற்படி போராட்டத்திற்குத் தென் ஆப்ரிக்காவில் வதியும் திராவிட மக்களை தங்களது ஆதரவைத் தரவேண்டுமென்றும் இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

மலேயா பிரச்சனை

(25 A) மலேயா அரசாங்கம் கம்யூனிஸ்டு ஒழிப்பு என்ற பெயரால் அங்கு குடியேறியிருக்கும் நிரபராதிகளான திராவிடர்கள் பலரைத் தூக்குமேடைக்கு அனுப்பியும் சிறையில் அடைத்தும், தண்டனைக்குள்ளாக்கியும் இன்னபிற அடக்குமுறை வெறிச் செயல்களால் கொடுமைகள் இழைத்து வருவதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு அவர்கள் மீது விதித்திருக்கும் அத்துமீறிய அடக்கு முறை உத்திரவுகளை வாபஸ் வாங்கி, அவர்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்றும் இம் மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

(B) மேற்குறிப்பிட்ட அடக்குமுறைச் சட்டத்திற்குப் பலியாக்கப்பட்டு, தூக்குமேடையில் நிறுத்தப்பட்டிருக்கும் நாஞ்சில் மாவட்டத்தைச் சார்ந்த கண்ணையா என்ற தோழரை உடனே விடுதலை செய்யவேண்டும் என்று மலேயா அரசாங்கத்தை கேட்டுக் கொள்வதோடு அதற்கான முயற்சியையும் எடுத்துக்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(C) மலேயா வாழ் திராவிடர்களின் உரிமைக்காகவும் அங்கு நடைபெறும் அடக்குமுறையைக் கண்டித்து எழுதும் காரணத்திற்காகவும திராவிடநாடு, போர்வாள், திராவிடன், பொன்னி முதலிய நம் பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையுத்தரவைக் கண்டிப்பதுடன் அதனை உடன் நீக்குமாறு மலேயா அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

வெளிநாட்டு விவகார போர்டு

(26) வெளிநாடுகளில் வதியும் திராவிடப் பெருங்குடிமக்களின் பிரச்சனைகளைக் கவனிப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழக மத்திய நிலையத்தில் ஒரு தனி போர்டு நியமிக்கும்படி பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

திராவிட நாட்டுப் பிரிவினை

(27) தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய திராவிடக் குழுமொழிகள் வழங்கும் பகுதிகள் மொழிவழித் தனித்தனி மாகாணங்களாகப் பிரிந்து சுய நிர்ணய அடிப்படையில், சுதந்தர சமதர்ம திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியாக உருவாகவேண்டும் என்றும், பல்வேறு மாநாடுகளிலும், கழகச் சட்டதிட்டத்திலும் அடிப்படை இலட்சியமாகக் கொண்டு வலியுறுத்தியிருக்கிற இத்திட்டத்தை இங்கும் வலியுறுத்திக்கொள்வதோடு அந்தக் குறிக்கோளை அடைய, ஏற்ற வகையில் எல்லாவித நடவடிக்கைகளையும் அவ்வப்போது எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

வெளிநாட்டுக் கொள்கை:—

(28) அகில உலக அரசியல் விவகாரங்களைப் பொருத்து, நடுநிலைக் கொள்கையையே வெளிநாட்டுக் கொள்கையாகக் கொண்டிருக்கும் இந்திய அரசாங்கம் அந்தக் கொள்கையின் பேரில், இதுவரை அணுகிய பல விவகாரங்களைக் கவனிக்கும்போது, உலகில் இன்று நின்று நிலவிவரும் இரு பெரும் ஆதிக்க வரிசைகளில், அமெரிக்க ஆதிக்க வரிசையின் பக்கம் சாய்ந்து நிற்பதற்கான அறிகுறிகளைக் கொண்டிருப்பது வெளிப்படை

யாகவே தெரிவதால் அப்படி நடுநிலைக் கொள்கையினின்றும் நழுவும் போக்கு இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஆபத்தையும், அனாவசிய தொல்லைகளையும், அவமான நிலைமையையும் உண்டாக்கும் என்பதையும் இம் மாநாடு சுட்டிக்காட்டுவதோடு உறுதியான, நிலையான நேர்மையான நடுநிலைக் கொள்கையை, இந்தியத் துணைக்கண்ட ஆட்சி ஏற்று நடக்கவேண்டும் என்றும் அதற்கு அறிவுறுத்திக்கொள்கிறது.

எண்ணெய் பிரச்சனை:—

(29) பொது மக்களின் நம்பிக்கையை இழந்திருக்கும் நேரு சர்க்கார், தன்னுடைய அந்திய காலத்தில் பொதுத்தேர்தல்கள் நடந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில், மக்களுடைய விருப்பு வெறுப்பை அறியாமல் நாட்டின் பொருளாதாரத்தை சீர்கேடாக்கும் முறையிலும், வெளிநாட்டு முதலாளித்துவ சக்திகள் கொள்ளையடிக்கும் வகையிலும் பம்பாயிலும் மற்றும் இரண்டு இடங்களிலும் எண்ணெய் சுத்தம் செய்யும் சாலைகள் ஆரம்பித்து நடத்துவதற்கு வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு அனுமதி தந்திருப்பதையும் அப்படி நடத்தப்போகும் கம்பெனிகளுக்கு வழக்கத்திற்கு விரோதமான வரி சலுகைகளை கொடுத்திருப்பதோடு நீண்ட நாட்களுக்கு குறிப்பாக 25 ஆண்டுகளுக்கு, எல்லாவிதமான பாதுகாப்புகளையும் கொடுத்திருப்பதையும் இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.



எஸ். என். இராஜேந்திரன்

டி. வி. நாராயணசாமி

என். எம். கிருஷ்ணன்

மாநில மாநாட்டில்,

சந்திரோதயம், ஜமீன் மாளிகை,

ஆகிய நாடகங்களில்

அருமையாக நடித்து

மகாலிங்கம்

நம் உள்ளங்களை யெல்லாம்

கொள்ளை கொண்ட

நாடக மணிகள்

இதய கீதம் அமையும் விதம்

[இலட்சக் கணக்கான இளைஞர்களின் இதய கீதம், திராவிட முன்னேற்றக் கழகம். அந்தக் கழகத்தின் அமைப்பு முறைகளை வரையறுத்துக் கூறித் தெளிவு படுத்திக் காட்டும் திட்பமும் நுட்பமும் செறிந்தது, கீழே தரப்பட்டுள்ள சட்டதிட்டம். தலைமைக் கழகம்—மாவட்டக் கழகம்—வட்டக் கழகம்—நகரக் கழகம்—கிராமக் கழகம்—பொதுக் குழு—செயற்குழு—பொதுச் செயலாளர் ஆகிய இந்தச் சங்கிலித் தொடரிலே உள்ள பல்வேறு வளையங்கள், ஒன்றுடன் ஒன்று கொள்ள வேண்டிய உறவு முறை யாது என்பதையும், ஒவ்வொரு வளையத்தின் தனிப்பட்ட பண்பும் பணியும் எத்தகையது என்பதையும், மாநில மாநாட்டில் நிறைவேற்றப் பட்டுள்ள இந்தச் சட்டதிட்டம் அழகுற விளக்குகிறது. இனி, கழகம், இந்தப் பொன்னான திட்டத்தின் தெளிவான பாதை வழிதான் நடந்தாக வேண்டும். கழகக் கிளைகள் ஒவ்வொன்றும், கழக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், இந்தச் சட்டதிட்டம் கிழித்துள்ள எல்லைக்கோடுகட்கு உட்பட்டுத்தான் இனிப் பணியாற்ற வேண்டும். எனவே இச் சட்டதிட்டத்தை ஒரு முறைக்குப் பன்முறை படித்துப் பார்த்து தம் இதயப் பெட்டியில் இதற்கென்று தனியானதோர் இடத்தை ஒதுக்கி வைக்க வேண்டியது இயக்கத் தோழர்களின் சிறந்ததோர் கடமை அல்லவா?]

பெயர்

1. இந்த அமைப்பின் பெயர் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது. 'கழகம்' என்ற சொல், இந்தச் சட்ட திட்ட அமைப்பில், இனி மேல் வரும் இடங்களிலெல்லாம், வேறு பொருளில் குறிப்பிட்டாலன்றி, திராவிட முன்னேற்றக் கழகம் என்பதையே குறிக்கும்.

கொள்கைகளும் நோக்கங்களும்

2. கழகத்தின் நோக்கம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி பேசும் மக்களடங்கிய தொடர்பான பிரதேசங்களைக் கொண்ட திராவிட நாடு அமைத்து அதில் சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சி நிறுவுவது.

3. கழகத்தின் நோக்கங்கள்:— சாதிமத, ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவது. மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழிப்பது. அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சாரத்துறைகளில் சம சந்தர்ப்பம், முழுப்பாதுகாப்பு. சுதந்திரம் இவை ஆடவர் பெண்டிர் அனைவருக்கும் கிடைக்கப் போராடுவது.

கொடி

4. நீள, அகலத்தில் 3-2 ஆக அளவில், மேற் பாதி கருப்பு கீழ்ப் பாதி சிவப்புமாக, இரு நிறம் கொண்டதாக இருக்கும்.

உறுப்பினர்

5. கழகக் கொள்கைகளையும் நோக்கங்களையும் ஏற்று, கழகத்தின் குறிக்கோள்களுக்குக் கட்டுப்படுவதாக உறுதி தரும் பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய எவரும் உறுப்பினராகும் தகுதியுண்டு.

6. வேறெந்த அரசியல் கட்சியிலும் உறுப்பினராகவுள்ளோர் கழகத்தின் உறுப்பினராகும் தகுதியுடையவர் அல்லர்.

உறுப்பினர் கட்டணம் :

7. ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டுக் கட்டணமாக எட்டணா செலுத்த வேண்டும்.

8. உறுப்பினரைப் பதிவு செய்து அதற்குரிய கட்டணத்தை உள்ளூர்க் கிளைக்கழகங்கள் வசூலிக்கும்.

9. உறுப்பினர் கட்டணம் எட்டணாவில், மூன்றணா உள்ளூர்க் கிளைக் கழகத்துக்குப்போக மீதியில் ஓரணா வட்டக் கழகத்திற்கும் (Taluk Committee) இரண்டணா மாவட்டக் குழுவிற்கும், இரண்டணா பொதுக்குழுவிற்கும் (General Council) சேரும்.

10. வட்டக் கழகம் அமைக்கப்படாவிடில் நான்கணா உள்ளூர்க் கிளைக்குப் போக மீதம் மாவட்டக் கழகத்திற்கு இரண்டணாவும், பொதுக் குழுவுக்கு இரண்டணாவுமாகச் சேரும்.

உள்ளூர்க் கிளை :

11. ஒவ்வொரு கிராமத்திலும், 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட உள்ளூர்க் கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

12. பொதுச் செயலாளர் குறிப்பிடும் நாளில், ஆண்டுதோறும், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப்பிரதிநிதி, செயற்குழுவினர் ஆகியோரை உள்ளூர்க் கிளைகள் ஒவ்வொன்றும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

13. செயலாளர் துணைச்செயலாளர் பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகியோர் உட்பட்ட கிராமக்கிளையின் செயற்குழு (Executive Com-

mittee) 11 பேருக்கு குறையாமலும் 21 பேருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். செயற்குழுவின் எண்ணிக்கையை அந்தந்த உள்ளூர்க் கிளையே தீர்மானிக்கும்.

14. உள்ளூர்க் கிளையின் எல்லா நடவடிக்கைகளுக்கும் அதன் செயலாளரே பொறுப்பாளியாவார்.

15. உள்ளூர்க் கிளைக்கழக அலுவலக நிர்வாகமும், குறிப்பேடுகளை (Records)ப் பாதுகாக்கும் பொறுப்பும், செயலாளரைச் சார்ந்ததாகும்.

16. கிளைக்கழக உறுப்பினர்கள் கூட்டங்களுக்கும் செயற்குழு கூட்டங்களுக்கும் அவரே சாதாரணமாகத் தலைமை வகிப்பார்.

17. அவர், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கிராமக் கிளை, செயற்குழு ஆகியவற்றின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை மாவட்டக் குழுவிற்கு அனுப்பவேண்டும்.

18. குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது அவர், உள்ளூர்க் கிளையின் செயற்குழுவைக் கூட்டவேண்டும்.

19. உள்ளூர்க் கிளை செயற்குழு கூட்டத்திற்கு 'கோரம்' குழுவினரின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பாகமாகும்.

20. உள்ளூர்க் கிளை உறுப்பினர்களின் கூட்டம் குறைந்தது ஆறு மாதத்துக்கு ஒரு முறையாவது கூட்டப்படவேண்டும்.

21. செயலாளர், தன் அபிப்பிராயப்படி தனது சார்பில் கிளைக்கழக வேலைகளை நிறைவேற்ற துணைச் செயலாளரிடமோ, அல்லது அவரில்லாத பொழுது, குழு உறுப்பினரில் ஒருவரிடமோ, ஒப்படைக்கலாம்.

22. செயலாளரால் குறிப்பிடப்பட்ட பணிகளை, துணைச் செயலாளர் செய்வார்.

23. பொருளாளர், குழுவின் நிதிகளுக்கு பொறுப்பாளி ஆவார். நிதி சம்பந்தமான வரவு செலவுக் கணக்குகளைச் சரியாகவைப்பது, அவரது பொறுப்பாகும். அவர் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வரவு செலவுக் கணக்குப் பட்டியலைச் செயலாளரின் கையெழுத்தோடு மாவட்டக் குழுவிற்கு அனுப்பவேண்டும். உள்ளூர்க் கிளைச் செயலாளர் விரும்பும்போது வரவு செலவு பற்றிய விவரங்களைத் தரவேண்டும்.

நகரக்குழு:

24. நகராண்மைக் கழகம் உள்ள ஒவ்வொரு நகரத்துக்கும் (Municipal Town) நகரக்குழு அமைக்க உரிமையுண்டு.

25. இருபத்தைந்திற்குக் குறையாத உறுப்பினர்களுள்ள ஒவ்வொரு நகர வட்டாரமும் (Municipal Ward) வட்டாரக் குழு அமைத்துக் கொள்ளலாம்.

26. ஒவ்வொரு நகரக் குழுவும் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுச் செயலாளர் குறிப்பிடும் நாளில் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், செயற்குழுவினர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

27. செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்பட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும் 21 பேருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

28. நகரக்குழு, நகரக்கிளை உறுப்பினர்களிலிருந்து மாவட்டக் குழுவுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும். நகர மக்கள் தொகையில் இருபதினாயிரம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வட்டக் குழு:

29. வட்டத்தின் (Taluk) எல்லைக்குட்பட்ட எல்லா உள்ளூர்க் கிளைச் செயலாளர்களை, நகரக் குழுக்களின் செயலாளர்கள் ஆகியோரைக் கொண்டதே வட்டக்குழு (Taluk Committee) ஆகும்.

30. நகரக் குழுக்களன்றி, குறைந்தது ஐந்து உள்ளூர்க் கிளைகள் இருந்தால்மட்டுமே வட்டக் குழு நிறுவப்பட வேண்டும்.

31. வட்டக்குழு, தனது பணிகளைக் கவனித்து வர ஆண்டுக்கு ஒருமுறை ஒரு செயலாளரைத் தேர்ந்தெடுக்கும்.

32. மாவட்டக் குழுவுக்கு தனது சார்பில் ஒரு பிரதிநிதியை வட்டக்குழு தேர்ந்தெடுக்கும்.

மாவட்டக் குழு:

33. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு மாவட்டக் குழு இருக்கும்.

34. உள்ளூர், நகர, வட்டக் குழுக்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பே மாவட்டக் குழுவாகும்.

35. மாவட்டக் குழு தீர்மானிக்கும் இடத்தில் மாவட்டத் தலைமை நிலையம் இயங்கும்.

36. ஒவ்வொரு மாவட்டக் குழுவும் ஒவ்வோராண்டும் பொதுச் செயலாளர் குறிப்பிடும் நாளில் மாவட்டத்தில் அவர் நிர்ணயிக்கிற இடத்தில், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

37. மாவட்டக் குழுவின் அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், உள்ளூர் நகர குழுக்களில் ஏதாவது அலுவலராக இருந்தால் இரண்டில் ஏதேனும் ஒன்றை ராஜினாமா செய்யவேண்டும்.

38. மாவட்டக் குழு உள்ளூர், நகர, வட்டக் குழுக்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும்; அவை அனுப்பும் அறிக்கைகளையும், வரவு செலவுக் கணக்குகளையும் பரிசீலனை செய்யும். பொதுச் செயலாளரோ அல்லது பொதுக் குழுவோ அவ்வப்பொழுது அனுப்பும் சுற்றறிக்கைகளையும் மற்ற செய்திகளையும் தெரிவிக்கும்.

39. மாவட்டக் குழுவின் செயலாளர், மூன்று மாதங்களுக்கொருமுறை மாவட்டக் குழுவின்

நடவடிக்கைபற்றி தலைமை நிலையத்திற்கு அறிக்கையனுப்பவேண்டும்.

40. குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் மாவட்டக் குழு கூடவேண்டும்.

41. மாவட்டக் குழுவின் மொத்த உறுப்பினர்களின் ஐந்தில் ஒரு பாகமே கூட்டத்துக்கான கோரம் ஆகும்.

42. மாவட்டத்திலுள்ள உறுப்பினர்களிலிருந்து பத்துப் பிரதிநிதிகளை மாவட்டக் குழு பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

சென்னை நகரம்

43: சென்னை நகரம் தனி மாவட்டமாகக் கருதப்படும். நகராண்மைக் கழக வட்டாரங்களைப் போல (Municipal Wards) பல பிரிவுகளாக (Divisions) அது பிரிக்கப்படும்.

44. பிரிக்கப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்துக்கும் உள்ளூர்க் கிளையைப்போல செயற் குழுவும் மற்ற அமைப்புகளும் இருக்கவேண்டும்.

45. ஒவ்வொரு வட்டாரக் குழுவும் சென்னை மாவட்டக் குழுவுக்கு இரண்டு பிரதிநிதிகளை அனுப்பும்.

46. சென்னை மாவட்டக் குழு பொதுக் குழுவிற்கு சாதாரண உறுப்பினர்களிலிருந்து 12 பிரதிநிதிகளை அனுப்பவேண்டும்.

பொதுக் குழு

47. பொதுக் குழு, கழகத்தின் தலைமை உறுப்பாகும்:

48. கழக சம்பந்தமான திட்டங்கள் தீட்டவும் கொள்கைகளை வகுக்கவும் அமைப்பு வேலைகளை நடத்தச் செல்லவும், கழகத்தைப் பொறுத்த எல்லாக் காரியங்களுக்கும் முடிவு சொல்லவும் அதிகாரம் பெற்றது பொதுக் குழுவாகும்.

49. பொதுக் குழுவில் மாவட்டக் குழுக்களும் சென்னை நகரமும் அனுப்பும் பிரதிநிதிகளோடு பொதுச் செயலாளரால் நியமிக்கப்படும் பத்துக்கு மேற்படாத பிரதிநிதிகளும் இடம் பெறுவர்.

(நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய உறுப்பினர்களைப் போலவே ஒத்த தகுதி, பொறுப்புகள் ஆகியவைகளை உடையவராவர்.)

50. பொதுக் குழு கூட்டங்கள் சாதாரணமாக பொதுச் செயலாளர் தலைமையிலும் அல்லது அவரது அதிகாரம் பெற்ற செயற்குழு (Working Committee) உறுப்பினர் தலைமையிலும் நடைபெறும்.

51. பொதுக் குழு, கழகப் பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும்.

52. பொதுக் குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதிக்குக் குறையாத உறுப்பினர்கள் விண்ணப்பித்துக் கொண்டால் பொதுக் குழுவின் சிறப்புக் கூட்டம் (Special Meetings) கூட்டப்படவேண்டும்.

53. பொதுக் குழு கூட்டத்துக்குள்ள 'கோரம் மொத்தத்தில் நான்கில் ஒரு பகுதி உறுப்பினர்களாகும்.

54. இரண்டாண்டு தொடர்ந்து கழகத்தில் இருப்பவரும், குறைந்தது உள்ளூர்க் குழுவில் அங்கம் வகிப்பவருக்குமே பொதுக் குழு உறுப்பினராகும் தகுதியுண்டு.

பொதுச் செயலாளர்

55. கழகத்தின் நிர்வாகத் தலைவர் பொதுச் செயலாளரேயாவார்.

56. இரண்டாண்டு தொடர்ந்து கழகத்தின் உறுப்பினராயிருப்பவரும் குறைந்தது உள்ளூர் குழுவில் அங்கம் வகிப்பவருமாகிய உறுப்பினருக்கு மட்டுமே பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் தகுதியுண்டு.

57. பொதுக் குழு குறிப்பிடும் இடத்தில், நிர்ணயிக்கிற நாளில், பொதுக் குழுவால் பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

58. மாநில மாநாடு நடைபெறும் நாளிலிருந்து சாதாரணமாக இரண்டாண்டு காலம் அவர் பதவி வகிப்பார்.

59. கழகத் தலைமை நிலையத்தின் நிர்வாகப் பொறுப்புகள் அனைத்துக்கும் பொதுச் செயலாளரே பொறுப்பாளியாவார்.

60. அவருக்கு தலைமை நிலையத்தின் பணியாளர்களை நியமிக்கவும், தள்ளிவைக்கவும் நீக்கவும் அதிகாரம் உண்டு. அவை அடுத்த செயற் குழு கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

61. அவர், பொதுக் குழு உறுப்பினர்களிலிருந்து இரண்டு துணைச் செயலாளர்கள், ஒரு பொருளாளர் ஆகியோர் உள்ளடங்கிய, பதினைந்து பேருக்குக் குறையாமலும் இருபது பேருக்கு மேற்படாமலுமுள்ள செயற் குழுவை (Working Committee) நியமிப்பார்.

62. பொதுச் செயலாளர், அப்போதைக்கப் போது பொதுக் குழு முடிவு செய்யும் திட்டங்களையும் தீர்மானங்களையும், செயற் குழுவின் ஆலோசனையோடு நடை முறைக்குக் கொண்டு வருவார்; கழகத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் வளர்க்கும் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்; வரவு செலவு கணக்குகளை பரிசீலித்து, முறையாகத் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்கு அறிக்கையைப் பொதுக் குழு முன் ஒப்படைப்பார். முதல் பொதுக் குழு கூட்டத்துக்கும் அடுத்த பொதுக் குழு கூட்டத்துக்கும் இடையில் செய்துள்ள காரியங்களைப் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பார்.

63. கழகத்தையும் நாட்டையும் பொறுத்த எந்தப் பிரச்னைபற்றியும் முடிவுகள் சொல்வதற்கும், அறிக்கைகள் விடுவதற்கும் அவருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அவை அடுத்த பொதுக் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

64. அவர், மாநில மாநாட்டிற்குத் தலைமை தாங்குவார்.

65. கழகத்தின் விதி முறைகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் விரோதமாக நடக்கும் கழகத்தின் மீதோ உறுப்பினர்கள் மீதோ தன் உசிதப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு, அவை அடுத்த பொதுக் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படவேண்டும்.

66. எது சரியெனக் கருதுகிறாரோ அந்த வகையில் கழகத்துக்கான நிதிதிரட்டும் அதிகாரம் அவருக்கு உண்டு. அவை அடுத்த பொதுக் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படவேண்டும்.

செயற் குழு:

67. செயற் குழு, சாதாரணமாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடும்.

68: செயற் குழுக்கூட்டம் பொதுச்செயலாளரால் கூட்டப்படும். அக்கூட்டங்கள் பொதுச் செயலாளர் தலைமையில் நடைபெறும்.

69. சாதாரணக் கூட்டங்கள், செயற் குழு உறுப்பினர்களுக்குப் பத்து நாட்களுக்கு முன்னதாகவும்; அவசரக் கூட்டங்கள் 5 நாட்களுக்கு முன்னதாகவும், தெரிவிக்கப்படவேண்டும்.

70. செயற் குழுவினரின் அபிப்பிராயங்களை தந்தி, தபால் மூலம் பொதுச் செயலாளர் பெறலாம்.

சொத்து, நிதி முதலியவை:

71. கழகத்தின் சொத்துக்கள் பொதுக் குழுவால் நியமிக்கப்படும் டிரஸ்ட்—போர்டாரால் நிர்வகிக்கப்படும். டிரஸ்ட்போர்டு உறுப்பினர்களில் யாரையாவது நீக்கவோ அல்லது முழுவதும் புதிய போர்டாக மாற்றி அமைக்கவோ பொதுச் செயலாளருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், அப்படி மாற்றி அமைத்ததும் பொதுக் குழு கூட்டி அங்கீகரிக்கப்படவேண்டும்.

72. உள்ளூர், நகர, வட்ட மாவட்டக் குழுக்கள் வாங்கும் அசையாச் சொத்துக்கள் (Immovable Properties) அனைத்தும், பொதுக் குழுவால் நியமிக்கப்படும் டிரஸ்ட் போர்டார் பெயரால் வாங்கப்பட வேண்டும். அதுபற்றிய பத்திரங்கள், உடனடியாக, பொதுச் செயலாளருக்கு அனுப்பப்படவேண்டும்.

73. உள்ளூர், நகர வட்ட மாவட்டக் குழுக்களின் நிதிகள் அந்தந்த ஊர் பாங்கிகளில் குழுக்களின் பெயரில் கணக்குவைத்து செயலாளர் பொருளாளர் இணைந்தே வாங்கும்படி வைக்கப்படவேண்டும்.

74. பொதுச் செயலாளர் அல்லது பொதுக் குழுவின் அனுமதியின் பேரில் உள்ளூர் நகர வட்ட மாவட்டக் குழுக்கள் கட்சி வேலைகளைச் செய்ய நன்கொடை அல்லது வேறு வகைகளில் நிதி திரட்டிக் கொள்ளலாம்.

கணக்குத் தணிக்கை

75. உள்ளூர் நகர வட்ட மாவட்டக் குழுக்களின் வரவு செலவுக் கணக்குகள் பொதுச் செயலாளரால அனுப்பப்படும் கணக்குத் தணிக்கையாளர் (Auditor) மூலம் ஆண்டு தோறும் தணிக்கை செய்யப்படும்.

76. பொதுக் குழுவின் வரவு செலவுக் கணக்குகள் பொதுக் குழுவால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற (Qualified Auditor) தணிக்கையாளரால் பரிசீலனை செய்யப்படும்.

77. உள்ளூர் நகர, வட்ட, மாவட்டக் குழுக்கள், ஜனவரியில் தொடங்கி டிசம்பரோடு முடியும் ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்குகளை, பொதுச் செயலாளரால் குறிப்பிடப்படும் தேதிக்கு முன்னதாகவே ஆண்டுதோறும் அனுப்பி வைக்கவேண்டும்.

மாநாடுகளும் மாநில மாநாடும:

78. ஆண்டுக்கொருமுறை மாவட்டக் கழகம் மாவட்ட மாநாடு நடத்தும்.

79. மாவட்டக் குழு மாவட்ட மாநாடு நடத்த குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பே பொதுச் செயலாளரின் அனுமதிபெற தெரிவிக்கவேண்டும்

80. மாவட்ட குழு மாவட்ட மாநாட்டிற்கான இடம், தேதி முதலியவைகளை நிர்ணயித்து வரவேற்புக் குழுவையும் அமைக்கும்.

81. ஒவ்வொரு உள்ளூர்க் கிளையும் தனது செயலாளரையும், மாநாட்டிற்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து அனுப்பும்.

82. நகரக் குழு ஒவ்வொன்றும் மேற்படி மாநாட்டிற்கு நகரக் குழுச் செயலாளர், மேலும் இரண்டு பிரதிநிதிகள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து அனுப்பும்.

83 சென்னை நகரம் சம்பந்தப்பட்டவரையில் வட்டாரக் குழு ஒவ்வொன்றும் செயலாளர் மற்றும் இருவர் ஆகிய மூவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பும்.

84. மாநாட்டு வரவேற்புக் குழு நிர்ணயிக்கும் கட்டணத் தொகையை செலுத்தியோர் மட்டுமே பிரதிநிதிகளாக அங்கீகாரம் பெறுவர்.

85 மாநாட்டின் வரவு செலவு கணக்குகள், பொதுச்செயலாளரால் இதற்கென அனுப்பபடும்தணிக்கையாளரால், மாநாடு முடிந்த ஒரு மாதத்துக்குள் பரிசீலிக்கப்படவேண்டும். மீதி தொகை இருந்தால் பொதுக்குழு மாவட்டக்குழு இரண்டும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும்

86. சாதாரணமாக இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை மாநில மாநாடு நடைபெறும்.

87. கழகம் நாடு ஆகியவைகளை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னைகளைப் பற்றி யோசிக்க தனி மாநில மாநாட்டை பொதுச்செயலாளர் கூட்டலாம் அல்லது பொதுக்குழுவின் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்களோ அதற்கு மேற்பட்டவர்களோ அறிவித்தால், அறிவித்த நாளிலிருந்து 45 நாட்களுக்குள் தனி மாநில மாநாடு கூட்டவேண்டும்.

88. மாநில மாநாட்டிற்கான இடம் தேதி முதலியவைகளை பொதுக்குழு முடிவு செய்யும். மாநிலமாநாட்டுக்கான வரவேற்புக் குழுவையும் பொதுக்குழு தேர்ந்தெடுக்கும்.

89. பின் வருமாறு மாநில மாநாட்டுக்கான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்:—

(அ) ஒவ்வொரு கிராம— நகர—வட்டாரக் குழுக்களிலிருந்து இரண்டு பிரதிநிதிகள்.

(ஆ) மாவட்டக்குழுக்களின் எல்லா உறுப்பினர்கள்.

(இ) பொதுக்குழுவின் எல்லா உறுப்பினர் இடம் பெறுவர்.

90. மாநிலமாநாட்டு வரவு செலவுக் கணக்குகள பொதுச்செயலாளரால் பிரத்தியேகமாகநியமிக்கப்படும், அதிகாரம் பெற்ற தணிக்கையாளரால் மாநாடு முடிந்த ஒரு மாதத்துக்குள் பரிசீலிக்கப்படவேண்டும்.

91. உள்ளூர் வட்டார நகர, குழுக்களின்கூட்டங்களுக்குமூன்று தினங்களுக்கு முன்பும் வட்ட, மாவட்டககுழு கூட்டங் களுககு 7 தினங்களுக்கு முனபும் உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

92. மூன்று கூட்டங்களுக்கு தொடர்ந்து வராத உறுப்பினர், அப்பதவியை இழந்துவிட்டதாகக் கருதப்படுவார். எனினும், உறுப்பினர் தபால் மூலம் தம்கருத்துக்களைத் தரலாம். அத்தகைய தபால் மூலம் கருத்துக்களை அனுப்பிய உறுப்பினர் அக் கூட்டத்துக்கு வந்ததாகவே கருதப்படுவார். குழுவின் நடைமுறைக் காலத்தில் இரண்டு தடவைகளே இம்முறை ஏற்றுக் கொள்ளப்படும்.

93. உள்ளூர், வட்டார, வட்ட, மாவட்டக் குழு உறுப்பினர்கள் தீர்மானம் அனுப்பவேண்டுமானால் கூட்டத்திற்குக் குறைந்தது 2 தினங்களுக்கு முன் அறிவிக்கவேண்டும்.

94. பொதுக் குழுவின் சாதாரண கூட்டங்களுக்கு கூட்ட அறிக்கை 10 தினங்களுக்கு முன்பும், அவசரக் கூட்டங்களுக்கு 7 தினங்களுக்கு முன்பும் அறிவிக்க வேண்டும்.

95. பொதுக்குழு உறுப்பினர் தீர்மானம் அனுப்ப வேண்டுமானால் கூட்டத்திற்கு 4 தினங்களுக்கு முன்பு பொதுச் செயலாளரிடம் தீர்மானம் வந்து சேரவேண்டும்.

96. ஏதாவதொரு தீர்மானத்தில் வாக்களிப்பு சமமாக நின்று விட்டால் தலைமை வகிப்பவர் தமக்குரிய சுயேச்சை வாக்குரிமையைப் பயன்படுத்தி பிரச்னைக்கு முடிவு காணலாம்.

தேர்தல்:

97 உள்ளூர், வட்டார, வட்ட மாவட்டபொதுக் குழுக்களின் தேர்தல்கள் பொதுச் செயலாளர் குறிப்பிக்கிற இடத்திலும் நிர்ணயிக்கிற நாளிலும் நடைபெற வேண்டும்.

98. பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல அதிகாரி மாவட்டக் குழுக்களின் தேர்தலை மேற்பார்வை செய்வார்.

99. சாதாரணமாக அந்தந்த குழுக்களின் தேர்தல்கள் அந்தந்த செயலாளர்களாலேயே நடத்தப்படும்.

100. செயலாளரே போட்டியிடுபவராக இருந்தால் அந்தக் குழு வேறொருவரை தேர்தலை நடத்துவிப்பவராக நியமிக்கும்.

101. தேர்தல் மூலம் ஏற்படும் சச்சரவுகளை பஞ்சாயத்தார் (Tribunal) விசாரிப்பார்.

102. குழுவில் ஒரு இடம் காலியானால், தேர்தல் மூலம, காலியான ஒரு மாதத்திற்குள் அந்த இடம் பூர்த்தி செய்யப்பட்ட வேண்டும்.

பஞ்சாயத்தார்:

103. பஞ்சாயத்தினராக இரண்டாண்டு காலத்திற்கு பொதுக்குழு மூவரைத் தேர்ந்தெடுக்கும்.

104. பொதுச் செயலாளரின் விருப்பப்படி தேர்தல் சச்சரவுகள், ஒழுங்கு நடவடிக்கை ஆகியவை பற்றி, பஞ்சாயத்தார் விசாரிப்பர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம்:

105. ஏதாவது ஒரு அலுவலர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமானால் அவர் எந்தக் குழுவில் உறுப்பினராயிருக்கிறாரோ அந்தக் குழுவின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கையொப்பமிட்டாலே, அந்தத் தீர்மானம் அனுமதிக்கப்படும். மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் வாக்களித்தால்தான் அது நிறைவேறியதாகும்.

ஒழுங்கு நடவடிக்கை:

106. உறுப்பினரைக் கண்டிப்பதும் தள்ளிவைப்பதும் விலக்குவதும் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாகும்.

107. கழகத்தின் சட்டதிட்டங்களுக்கு முரணாகவும் எதிர்த்தும் நடக்கிற உறுப்பினர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம்.

108. குழுவின் உறுப்பினர் எவரும் ஒழுங்கு நடவடிக்கைப் பிரச்சினையை குழுவின் முன் கொண்டு வரலாம். மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினர்கள் வாக்களித்தால்தான் அது நிறைவேறியதாகக் கருதப்படும்.

109. ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளான உறுப்பினர், நடவடிக்கை எடுக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள், நடவடிக்கை எடுத்த குழுவிற்கு அடுத்த உயர்ந்த குழுவிற்கு விண்ணப்பித்துக் கொள்ள உரிமையுண்டு. இறுதியாக பொதுச்செயலாளரின் தீர்ப்பே, இவ்விஷயத்தில் முடிவானதாகும்.

திருத்தங்கள்:

110. மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு கோரம் உள்ள பொதுக்குழு, கழகத்தின் சட்டதிட்ட விதிகளை இயற்றவோ அல்லது, திருத்தவோ விலக்கவோ அதிகாரம் படைத்ததாகும்.

111. அடுத்து வருகிற மாநில மாநாட்டில மேற்படி திருத்தங்கள் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

"இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்"?

[மாநில மாநாட்டில், நான்காம் நாள் மாலை, அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய தலைவர்முடிவுரை என்னும் புத்தறிவுப் பூங்காவின் எழில்குலுங்கும் தமிழ் மலர்கள் யாவும், இதோ, கீழே, கொட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. அள்ளி எடுத்துக் கொள்ளுங்கள். அறிவு மணத்தை நுகருங்கள். ஒவ்வொரு மலரிலேயும், சிந்தனைத் தேன் இருக்கிறது, தெவிட்டாத இன்பம் இருக்கிறது அள்ள அள்ளக் குறையாத பகுத்தறிவுப் பொக்கிஷம் இருக்கிறது. வீரமும் இன்பமும் துள்ளி விளையாடும் செந்தமிழ், சிரித்து மகிழ்ந்தபடி சிந்து பாடிக்கொண்டிருக்கிறது—பாருங்கள்—படியுங்கள்—புத்துலகப் பாதையில் தமிழகத்தை அழைத்துச் செல்லும் புனிதப் பணியில் பெரும் பங்கு கொள்ளுங்கள்.]

அன்பும் ஆர்வமும் மிக்க அருமைத் தோழர்களே,

வணக்கம். இந்த மாநில மாநாட்டில் சென்ற நான்கு நாட்களாக நடைபெற்றுவந்த நிகழ்ச்சிகள் இன்றோடு முடிவடைகின்றன. சென்ற நான்கு நாட்களாக உங்களிடையே காணப்பட்ட உற்சாகத்தையும் உணர்ச்சியையும் கண்டு நான் பூரிப்பும் பெருமையும் அடைகிறேன். நீங்கள் இந்த மாநாட்டின்போது காட்டிய ஆர்வமும், அளித்த ஒத்துழைப்பும் விரைவில் நாம் திராவிட நாட்டைப் பெற்றே தீருவோம் என்கிற உறுதியை என் உள்ளத்தில் உண்டாக்குகின்றன. அந்த உறுதியை ஊட்டிய உத்தமர்களாகிய உங்களுக்கு என் உவ்வன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநில மாநாட்டுக்குத் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் பிரதிநிதிகளாகவும் பார்வையாளர்களாகவும் ஆயிரமாயிரமாக நீங்கள் வந்து கூடியிருக்கிறீர்கள். தமிழகத்தின் மூலை முடுக்குகளில் இருந்து மட்டுமல்ல, தொலைவில் உள்ள பர்மாவிலிருந்தும், தெற்கே உள்ள இலங்கையில இருந்தும், வடக்கே இருக்கும் பம்பாய், கல்கத்தா முதலிய பகுதிகளிலிருந்தும், மைசூர்—கொச்சி—திருவாங்கூர் போன்ற வட்டாரங்களிலிருந்தும், ஏராளமாக வந்து கூடியிருக்கிறீர்கள். குடும்பம் குடும்பமாக, கூட்டம் கூட்டமாக, ஆயிரம் ஆயிரமாக வந்து திரண்டு இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்த உங்கள் அனைவருக்கும் என் வணக்கமும் நன்றியும் உரியனவாக.

நான் வெளிப்படையாகவே கூற விரும்புகிறேன்—மறைத்துப் பேச ஆசைப்படவில்லை—இந்த நான்கு நாட்களாக நீங்களெல்லாம் எண்ணற்ற தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறீர்கள். இட நெருக்கடி, உணவு நெருக்கடி, நாளாகஆக பண நெருக்கடி, இத்தனை சங்கடங்களுக்கும் சஞ்சலங்களுக்குமிடையே நீங்கள் இந்த நான்கு நாட்களைக் கடத்தியிருக்கிறீர்கள். எனக்கு நன்றாகத் தெரியும், உங்களில் பலருக்குப் படுக்க வசதி கிடைக்கவில்லை. உட்கார இடம் கிடைக்கவில்லை. நேரத்தில் உணவு கிடைக்கவில்லை. திறந்த வெளியிலே, கொட்டும் பனியிலே, கடுமையான குளிரிலே, நீங்கள் சென்ற நான்கு இரவுகளைக் கழித்திருக்கிறீர்கள். இவ்வளவு தொல்லைகள் உங்களைத் துளைத்தபோதிலும், உங்கள் அகத்திலே ஆநந்தமும் முகத்திலே பூரிப்பும்தான் நடனமாடினவே தவிர துக்கமோ திகைப்போ உங்களை எட்டியும் பார்க்கவில்லை. நம்முடைய இலட்சியம் வெற்றிபெறவேண்டும் என்பதிலே உங்களுக்கிருக்கும் அளவற்ற ஆர்வத்தால்தான் இவ்வளவு தொல்லைகளையும் உங்களால் தாங்கிக்கொள்ள முடிகிறது.

இந்த மாநில மாநாடு, மிகச் சிறந்த முறையில், நம்முடைய செல்வாக்கை மாற்றுக் கட்சித் தோழர்களும் மறக்கமுடியாத முறையில், திராவிட நாடு திராவிடருக்கே என்கிற இலட்சியம் விரைவில் வெற்றிபெறும் முறையில், ஆட்சியாளர்களும் நம் கழகத்தின் ஆற்றலைத் தெளிவாக உணரும் முறையில் நடந்து முடிந்திருக்கிறது. இவ்வளவு சிறந்த மாநாட்டைச் சென்னை தினசரிகள் பலவும் இருட்டடிப்புச் செய்துவிட்டன என்றபோதிலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகை பல்லாயிரக் கணக்கானவர்கள் மாநாட்டில்

கூடினார்கள் என்று தெரிவித்திருக்கிறது. "தினசரி" ஏடு, மாநாட்டில் கூடியவர்கள் தொகை 1½-லட்சம் இருக்குமென்று மதிப்பிடுகிறது. "மெயில்," ஒரு மைல் நீள ஊர்வலம் என்று எழுதியிருக்கிறது. ஊர்வலம் பிரம்மாண்டமானது என்று கூறுகிறது "சோஷலிஸ்ட்" என்னும் ஏடு. மாற்றுக் கட்சி ஏடுகள்கூட இப்படியெல்லாம் வியந்து கூறித் திகைத்து நிற்கவேண்டிய அளவு, திராவிடத் தோழர்களின் உள்ளம் களிப்புக் கடலாக மாறும் அளவு, நாம் வளர்ந்திருக்கிறோம். வளர்ந்திருக்கிறோம் என்பது மட்டுமல்ல, நாளுக்கு நாள் மேலும் மேலும் வளர்ந்தபடி இருக்கிறோம். இந்த வளர்ச்சியைக்கண்டு வயிற்றெரிச்சல் கொள்ளும் தன்மை படைத்தவர்கள் பலர் நம்மை ஓயாமல் தூற்றுகிறார்கள். துவேஷ பாணங்களை நம்மீது பொழிகிறார்கள். ஏசல் அந்தாதியைத் துருவி துருவி வார்த்தைகளை எடுத்து நம்மீது வீசுகிறார்கள். கிண்டலையும் கேலியையும் நம்மீது அள்ளித் தெளித்தபடி இருக்கிறார்கள்; ஆனால் நான் தெளிவாகவே கூறிவிட ஆசைபபடுகிறேன். பிறர் நம்மைத் தாக்குகிறபோது, பதிலுக்குப் பதில் தாக்குவதோ தூற்றுவதோ நம் இயக்கத் தோழர்களின் செயலாக இருக்கக் கூடாது. ஏசலுக்குப் பதில் ஏசல், தூற்றலுக்கு விடை தூற்றல் என்பது தமிழ் மரபுக்கு உகந்த செய்கை ஆகாது. நாம் மேற்போட்டுக் கொண்டிருக்கும் பணி, மகத்தானது; மகத்தான ஒரு நாட்டுக்குப் புத்துயிர் ஊட்டுவது; இழந்த ஒரு அரசை மீண்டும் நிலை நாட்டுவது; இன்பத் திராவிடத்தை மறுபடியும் மலரச் செய்வது. இத்தகைய பெரும் பணியைப் புரிவதற்காக அரியதோர் இயக்கத்தைக் கண்ணின் மணியெனக் கட்டிக்காத்து வருபவர்கள் நாம், ஒரு பெரிய நாட்டை வட இந்தியச் சிறையிலிருந்து மீட்கவேண்டிய பொறுப்புமிக்க பணி நம்முடையது. இவ்வளவு பொறுப்புள்ள பணியை ஏற்றுக்கொண்டுள்ள நாம், ஏசலுக்குவிடை ஏசல் என்கிற சிறுசெயல் புரிபவராக ஒரு நாளும் இருத்தல் ஆகாது. நம்முடைய எண்ணம், சொல், செயல், அனைத்திலும் கண்ணியமும் பெருந் தன்மையும் இருத்தல்வேண்டும். சிறுமதியும் சுடுசொல்லும இருத்தல் கூடாது. கட்டுப்பாடும் கண்ணியமுமே நம் இயக்கத்தின் இரு கண்களாகும். இதனை நம் இயக்கத் தோழர்கள் ஒருபோதும் மறத்தல் ஆகாது. இந்த மாநாட்டில் சொற்பொழிவாற்றிய இயக்கத் தோழர்கள் எவருடைய பேச்சிலாவது கண்ணியக் குறைவு துளியளவு இருந்தாலும், அதற்காக அவர்கள் சார்பில் நான் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று இரவு, நாடகம் முடிந்து சிறிது நேரம் கடந்தபிறகு, நான் மாநாட்டுப் பந்தலின் உள்ளும் புறமும் சிறிதுநேரம் சுற்றிப் பார்த்தேன். அப்பாது, இயக்கத் தோழர்கள் ஆயிரமாயிரவர் வெட்டவெளியிலும் கட்டாந்தரையிலும், கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது, கையையே தலையணையாகவும் புழுதித் தரையையே மென்மலர்ப் படுக்கையாகவும் கொண்டு படுத்திருக்கும் காட்சியைக் கண்டேன். கண்டபோது மகிழ்ச்சியும் துக்கமும் ஒரே சமயத்தில் என் உள்ளத்தில் தோன்றிடலாயின. பாயோ தலையணையோ கூரையுள்ள விடுதியோ வசதியுள்ள இடமோ இல்லாமல் இவர்கள் படுத்துறங்குகிறார்களே—இவாகளெல்லாம் மாநாடு முடிந்து வீடு திரும்பினால், இவர்களில் குறைந்தது ஒரு நூறு பேருக்காவது கடுமையான காய்ச்சல் வரக்கூடுமே என்பதை எண்ணிப் பார்த்தபோது என் நெஞ்சத்தில் துக்கம் தோன்றலாயிற்று. ஆனால் அடுத்த கணமே துக்கம் மறைந்து மகிழ்ச்சி பிறந்தது. ஒரு காலம் வரலாம். அந்தக் காலத்தில், நம்முடைய இளைஞர்கள், இப்போதுபோல, வெள்ளை உடையுடன் அல்ல, காக்கி உடையுடன், தொண்டர்களாக அல்ல, இராணுவ வீரர்களாக, பந்தலிலே அல்ல—பாசறையிலேயோ வெட்ட வெளிகளிலேயோ படுக்கவேண்டி நேரிடலாம். அப்போது அவர்கள் கைகள்கூட இப்போது இருப்பதைப்போல மிருதுவாக இருக்காது. கரடுமுரடாகத்தான் இருக்கும். நம்முடைய போர்த்திறமையைக் காட்டவேண்டிய நேரம்வரலாம். அந்தத் திறமை பெறுவதற்கான ஒத்திகையே இன்று நம் தோழர்கள் குளிரிலும் பனியிலும் வெட்ட வெளியிலும் உறங்குவது என்று நான் எண்ணினேன். மகிழ்ச்சி பிறந்தது.

இந்த மாநாட்டிலே இரண்டாம் நாள் இரவு, தாய்மார்கள் மட்டுமே தனியாக இருந்து சிறந்ததோர் நாடகம் நடத்தியதைக்

கண்டு நீங்களெல்லாம் மகிழ்ச்சி அடைந்திருக்கிறீர்கள். நாடகத்திலே நடித்த தோழியர்களையும் தாய்மார்களையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். நாடகத்தைத் தீட்டியவர் ஒரு பெண்மணி. நாடகத்தில் நடித்தவர்கள் அத்தனை பேரும் பெண்கள். பெண்களே எழுதி, பெண்களே பயிற்சி பெற்று, பெண்களே நடித்த இந்தப் பெண்களின் நாடகம் உண்மையில் நம் இயக்கத்திற்குப் பெருமையைத் தருகிற ஓர் எழில்மிகு நிகழ்ச்சியாகும். படித்த பெண்கள், பேராசிரியர்களின் துணைவிமார்கள், பி. ஓ. எல். பட்டம் பெற்ற தோகையர்கள் போன்றவர்கள் இந்த நாடகத்திலே நடித்திருக்கிறார்கள். வயது முதிர்ந்த அம்மையார் முதல் முந்திரிக் கொட்டை அளவுள்ள சின்னஞ் சிறு பாப்பா வரை உள்ள வெவ்வேறு வயதுடைய பெண்கள் இந்த நாடகத்தை நடத்திக் காட்டியிருக்கிறார்கள். 'நாடகம் ஆடுவது தவறு. அதிலும் குடும்பப் பெண்கள் நாடகம் ஆடுவது பெரும்தவறு'' என்ற எண்ணம் பரவியுள்ள இந்த நாட்டில் துணிச்சலாகவும் தைரியமாகவும் முன்வந்து நாடகமாடிக்காட்டிய தோகையர் குலத்தவரை நான் மீண்டும் பாராட்டுகிறேன். பெண்களே எழுதி பெண்களே நடிக்கும் பெண்கள் நாடகம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே இதுதான் முதல் முறை என்று நான் கருதுகிறேன்.

நாடகம் ஆடுவதன் மூலம் மக்கள் சமுதாயத்தை எளிதில் சீர்திருத்தமுடியும். அதிலும் பெண்களே நாடகமாடுவது என்று தொடங்கினால் சீர்திருத்தம் மிக எளிதில் பரவ வழியேற்பட்டுவிடும் என்பது என் திடமான நம்பிக்கை.

நாடகக் கலை மூலம் சீர்திருத்த வேகத்தை நாட்டில் விரைவாக எழுப்பமுடியும் என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் முதல் முதல் ஊன்றியவர் பெரியார் இராமசாமி அவர்களே ஆகும். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் அவர் அளித்த அந்த அறவுரையை வழிகாட்டியாகக் கொண்டுதான் நான் சந்திரோதயம் என்கிற நாடகத்தை முதன் முதலாக எழுதினேன். நானே நடிக்க ஆரம்பித்ததும், நாடெங்கும் நாடகங்கள் பலவற்றை நடத்தியதும் அவருடைய அறிவுரையின் விளைவுகள் தான். அவர் அன்று எனக்கு அளித்த பொன்னுரையை, கலையின் மூலம் சமுதாயத்தின் நிலையைத் திருத்தமுடியும் என்கிற எழில் உரையை இன்னமும் நான் திடமாக நம்புகிறேன். நாடக மேடை மூலம் நாட்டிலே மகத்தானதோர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தமுடியும் என்னும் உண்மையிலே எனக்குத் துளியளவும் ஐயம் கிடையாது.

பகவான் இந்த நாட்டிலே பத்து முறை அவதாரம் எடுத்ததாகப் புராணங்கள் புகல்கின்றன. மச்ச அவதாரம், வராக அவதாரம், கூர்ம அவதாரம், நரசிம்ம அவதாரம், என்று ஏதேதோ அவதாரங்களை எடுத்திருக்கிறார் எல்லாம் வல்லவர். ஆனால் நாட்டு மக்களுடைய நினைப்பிலே நர்த்தனமாடுவன இரண்டே இரண்டு அவதாரங்கள் தாம். ஒன்று இராமாவதாரம். மற்றொன்று, கிருஷ்ணாவதாரம். இந்த இரண்டு அவதாரங்களைத்தான் மக்கள் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்கிறார்கள். ஸ்ரீராம நவமி-கிருஷ்ண ஜெயந்தி என்று விழாக் கொண்டாடுகிறார்கள். ஏனைய அவதாரங்களை மக்கள் மறந்தே போய்விட்டார்கள். வராக அவதாரம்—உண்டா—கிடையாது. மச்சாவதார பஜனை—பார்த்திருக்கிறீர்களா-இருக்காது. நரசிம்ம ஜெயந்தி—கொண்டாடுவார் உண்டா-இல்லை. இராமன், கிருஷ்ணன், இந்த இரண்டு அவதாரங்களைக் கொண்டாடும் அளவு, வேறு எந்த அவதாரத்தையும் கொண்டாடுவதில்லை நம் சமுதாயம்.—இதற்குக் காரணம், இந்த இரண்டு அவதாரங்களுக்குத்தான் கலை மெருகு ஏற்றப்பட்டிருக்கிறது. ஆகவேதான் ஏனைய அவதாரங்களை மறந்துவிட்ட மக்கள் இவற்றை மட்டும் மறக்க வில்லை—மறக்க முடியவில்லை.

ஓவியம், காவியம், இசை, நாடகம், காலட்சேபம் என்று உள்ள கலைத் துறைகள் எல்லாவற்றிலும் இராமன் கிருஷ்ணன் ஆகிய இந்த இரண்டு அவதாரங்களுக்கும் அளவற்ற செல்வாக்கும் நிலையான இடமும் தேடித் தரப்பட்டுவிட்டது. ஆகவேதான் இந்த அவதாரங்கள் மட்டும் மக்கள் உள்ளத்தில் நிலைத்தன. ஏனைய அவதாரங்கள் மறைந்தன.

ஒரு நாட்டு மக்களுடைய உள்ளத்தை கலைத்துறை எவ்வளவு விரைவில் மாற்றி அமைக்க முடியும் என்பதைத்தான் இந்த இரண்டு அவதாரங்களுக்கு மட்டும் உள்ள செல்வாக்கு எடுத்துக் காட்டுகிறது.

கலையின் மூலமாகத்தான் மூட நம்பிக்கையும் கேடுதரும் எண்ணங்களும் மக்கள் உள்ளத்தில் வெள்ளம்போல் பாய்ந்துவிட்டன. இப்போது அந்த எண்ணங்கள் அங்குஇருந்து அகற்றப்படவேண்டுமானால், அந்தப் பணியும் கலையின் மூலமாகத்தான் செய்யப்படவேண்டும். எனவேதான் நான், சீர்திருத்த நாடகங்கள் நாடெங்கும் நடைபெறவேண்டும் என்பதிலே அளவற்ற அக்கறை காட்டுகிறேன்.

நாடகத்துறையிலே நாம் தொடங்கிவைத்த நல்ல தொண்டு வீண்போகவில்லை நல்ல விளைவையே அளித்திருக்கிறது. நாடகத்துறையே சீர்திருத்த உலகமாக மாறிவிட்டிருக்கிறது. முன்பெல்லாம்,

குங்குலியக்கலய நாயனார் புராணம்,
காரைக்கால் அம்மையார் சரித்திரம்,
திருநீலகண்டர் திருமகாத்மியம்;
அரிச்சந்திரன், நல்லதங்காள் கதைகள்,

இவைதான் நாடகமேடையில் நர்த்தனமாடி வந்தன. ஆனால் இப்போதோ?

மனிதன்,
முள்ளில் ரோஜா,
இமயத்தில் நாம்,
இன்ஸ்பெக்டர்,

போன்ற சீர்திருத்தக் கருத்துள்ள நாடகங்கள் நாடெங்கும் நடைபெறுகின்றன. நம்மைத் தூற்றுவதையே தொழிலாகக்கொண்ட மாற்றுக் கட்சித் தோழர்கள்கூட சமூக சீர்திருத்த நாடகங்களையே இன்று நடத்தி வருவதை நாம் காண்கிறோம். நாடக உலகிலே ஏற்பட்டுள்ள இந்த மறுமலர்ச்சி, நம் நாட்டிலே ஏற்பட்டுவரும் மறுமலர்ச்சியை அளந்துகாட்டும் அரிய கருவியாகும். இந்த மறுமலர்ச்சி, நம் இயக்கம் பெற்றுள்ள மகத்தான வெற்றி அல்லவா?

நாடகத் துறையைப்போலவே பழமையை வளர்த்து வரும் பலமுள்ள சக்தியாகப் பன்னெடுங்காலமாக விளங்கிவரும் மற்றொரு துறை, காலட்சேபமேடை. அந்த மேடையையும் இனி நாம் சீர்திருத்த மேடையாக மாற்றியாகவேண்டும். சீதா கல்யாணம், வள்ளி திருமணம், இவற்றிற்குப் பதிலாக, கல்லடிபட்ட கலிலியோ, கடுவிஷம் குடித்த சாக்ரடீஸ் என்று புதிய காலட்சேபங்களை நாம் நடத்திக் காட்டவேண்டும். பாஞ்சாலி சபதம், அர்ச்சனன் தபசு—இவை இருக்கும் இடத்திலே நியூட்டன் வரலாறு, ஈன்ஸ்டின் சரிதம், இவற்றையெல்லாம் கொண்டுவந்து நாம் நிறுத்தவேண்டும். ஓர் ஆறுமாத காலம் தைரியமாகவும் தொடர்ச்சியாகவும் நாடெங்கும் சீர்திருத்த முறையில் அமைந்த புது உலகக் காலட்சேபங்களை நாம் நடத்திக்காட்டினால், அதன் பிறகு, புராண காலட்சேபங்கள் வெளியே தலை காட்டவே அஞ்சி நடுங்கும். நிச்சயம் விரைவிலேயே, நான் கிராமம் கிராமமாக புது உலகக் காலட்சேபங்களை நடத்திக் காட்டுவதற்கான திட்டத்தைத் தீட்ட இருக்கிறேன்.

ஓவியத் துறையிலேயும் இதுபோலத்தான், விநாயகரையும் ஈராறு கையனையுமே கண்டு கண்டு பழக்கப்பட்டுவிட்ட நம் மக்கள் கண்முன்னால், விஞ்ஞான வித்தகர்களின் உருவங்களையும் உலகைத் திருத்திய உத்தமர்களின் வடிவங்களையும் தீட்டிக்காட்டவேண்டும் நாம். பாரதக் கதையையே ஓவியங்களில் கண்ட நம் மக்கள், மனித குல வளர்ச்சியை இனி ஓவியங்களிற் காணுமாறு நாம் செய்யவேண்டும். மாதொரு பாகன், திரிசூலம் ஏந்தியவன், சங்கு சக்கர தேவன்—இவர்களையே இன்னமும் எத்தனைக் காலத்திற்கு நாம், கண்டுகொண்டிருப்பது? அஞ்சா நெஞ்சன் வால்டேர், விடுதலை வீரன் கரிபால்டி, இமயத்தில் புலி பொறித்த செங்குட்டுவன், சீர்திருத்தச் செம்மல் இங்கர்சால்—இவர்களை நாம் எப்போதுதான் காண்பது? ஆகவேதான் நான் கூறுகிறேன். இனி நம் சுயமரியாதை ஒளி ஓவிய உலகிலேயும் புகுந்தாகவேண்டும். அதற்கான முதல் முயற்சியே, இந்த மாநாட்டில் காட்டப்பட்ட ஓவியக் கண்காட்சி இந்த முயற்சி மேலும் பலம்பெறவேண்டும். நாடெங்கும் இத்தகு காட்சிகள் இன்னமும் விரிவான அளவிலும் முறையிலும் நடத்தப்படவேண்டும்.

ஆமாம் நண்பர்களே, காலராக்கிருமியைக் காலராக் கிருமியின்மூலம்தான். கொல்லமுடியும். டைபாய்ட் ஜுரத்தை ஒழிக்க டைபாய்ட் கிருமிகளைக் கொண்ட ஊசிதான் போட்டுக் கொள்ளவேண்டும். கலை உலகத்தின் மூலம் நாட்டிலே நுழைக்கப்பட்டிருக்கும் நச்சுக் கருத்துக்களைக் கலை உலகத்தின் மூலமாகவே தான் ஒழித்தாகவேண்டும்,

நேபாளி பாபா என்னும் சிறுவன் ஒருவன் தருகிற மரப்பட்டை சகலரோக நிவாரணியாக விளங்குகிறது என்று நம்பிக் கொண்டு, படித்த மேதைகளும்கூட ஆயிரக்கணக்கில் அவனை நாடிச் சென்று காலராவில் செத்தார்களே ஒரிசாவில், இந்தச் செய்தியைப் படித்துப் பார்த்தால், வெளிநாட்டுக்காரர்கள் நம்மைப்பற்றி எவ்வளவு கேவலமாகக் கருதுவார்கள் என்று, சென்ற வாரம் சோகக்குரலில் சொற்களை வீசியிருக்கிறார் பண்டித நேரு—காங்கிரஸ்காரர்களின் அகராதிப்படி சொல்வதானால், இந்திய நாட்டின் முடிசூடாமன்னர். இது போன்ற மூடப் பழக்கவழக்கங்கள் நாட்டில் நெளிந்துகொண்டிருக்கும்வரை நாடு முன்னேற முடியாது என்றும், எனவே இத்தகைய மூடநம்பிக்கைகளை முறியடிக்கும் பணியை இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும்கூட அவர் பேசியிருக்கிறார். அவருக்குத் தெரியுமோ தெரியாதோ நான் அறியேன், அவர் எத்தகைய மூடநம்பிக்கைகளை ஒழிக்கவேண்டியது நம் கடமை என்று 1951-ல் பேச்சளவில் தயங்கித் தயங்கிக் கூற முன் வந்திருக்கிறாரோ அதே மூட நம்பிக்கைகளை நாம் 1925 முதலே பலமாகத் தாக்கித் தகர்த்தெறிந்து வந்திருக்கிறோம். மூடநம்பிக்கை ஒழிப்புப் பணியை இனித்தான் தொடங்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். ஆனால் நாமோ சென்ற 25-ஆண்டுக் காலமாக அந்த அரும் பணியைப் பகைவரும் கண்டு போற்றும் அளவு ஆற்றி வந்திருக்கிறோம். இந்த நேருவின் சகாக்களும் சிஷ்யர்களும் இடைவிடாமல் அளித்துவந்த எதிர்ப்பையும் ஏசலையும் சமாளித்துக் கொண்டுதான் ஆற்றிவந்திருக்கிறோம்.

நம்முடைய பகுத்தறிவுப் பிரசாரத்தின் விளைவாகப் பரம ஆஸ்திகர்கள்கூட இப்பொழுது முன்போல 10-தலை இராவணன் என்றால் பத்துதலைகளை உடையவன் என்று பொருள்கூறுவதில்லை. 10-தலைகள் என்றால் 10-கெட்ட குணங்கள் என்று பொருள் என்று தத்துவார்த்தம் பேசத் தொடங்கிவிட்டனர். அந்த அளவுக்கு நம்முடைய பிரசாரம் பழமைச் சக்திகளை ஆட்டங்கொடுக்கச் செய்துவிட்டது.

பழமைச் சக்திகளின் பயங்கரப் பிடியில் சிக்குண்டு தவிக்கும் இந்த நாட்டு மக்களை அந்தப் பிடியிலிருந்து விடுவிக்கும் புரட்சிகரமான பணியைத் திராவிட இயக்கம் ஒன்றைத்தவிர வேறு யார் செய்கிறார்கள் இந்த நாட்டிலே? சோஷியலிஸ்ட் கட்சியா? அவர்கள்தான் கூட்டுப்பண்ணை, ஆளுக்கு 5-ஏகர் நிலம், ஆலைகள் எல்லாம் தேசியமயமாக வேண்டும். என்கிற இந்தச் சொற்களைத் தாண்டி வெளியே வருவதில்லையே! கம்யூனிஸ்ட்களா-அவர்கள்தான் மதஒழிப்பு, சாதி ஒழிப்பு, பிராமணீய ஒழிப்புப் பற்றிப் பேசுவதும் கிடையாதே! காங்கிரஸ் தோழர்களா அவர்கள்தான் இராமராஜ்யம், கோட்டை பனைஓலை வரவேற்பு என்று பழைய கருத்துக்களுக்குப் புது மெருகு தீட்டிக்கொண்டிருக்கிறார்களே! உண்மையிலேயே இந்த நாட்டில் பழமைச் சக்திகளை எதிர்த்து முறியடித்து வரும் ஒரே ஒரு முற்போக்கு சக்தி திராவிட இயக்கம்தான்.

ஆந்திராவுக்குள் ஏன் நுழையவில்லை—கேரளத்துக்குள் ஏன் காலடி வைக்கவில்லை—கன்னட நாட்டில் ஏன் திராவிடத் தனி அரசுப் பிரசாரம் புரியவில்லை என்றெல்லாம் காங்கிரஸ்காரர்கள் அடிக்கடி நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் அன்புடன் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன், ஆந்திரம் முதலிய இடங்களுக்குச் செல்ல இதுவல்ல நேரம். எனக்குத் தெரியும் ஆந்திர நாட்டுக்குப் போகவேண்டிய நேரம் எது என்பது. அங்கே போக இதுவா நேரம்? இப்போது அங்கே சென்றால் அவர்கள் காதில் நம் பிரசாரம் விழவா செய்யும்? ஒரு காலம் வரும்—அப்போது நாம் அங்கே சென்றால் நம் காரியம் நிச்சயம் வெற்றிதரும். இன்னும் ஒரு படி அதிகமாகச் சென்று சற்று ஆணவத்தோடுகூட சொல்லுகிறேன்—ஒரு காலம் வரும்—அப்போது ஆந்திரர்களே நம்மைத்தேடிக்கொண்டு இங்கே வருவார்கள். ஆந்திர மாகாணம் தனியாக அமைந்த பிறகு ஓர் ஆறுமாத காலம் தனிக் குடித்தனம் செய்து பார்த்ததும், ஆந்திரர்கள், டில்லியை விட்டுப் பிரிந்தாகவேண்டும் என்ற உணர்ச்சியை நிச்சயம் பெறுவார்கள். அந்த உணர்ச்சி அவர்களுக்கு வந்ததும். அதே உணர்ச்சி கொண்டுள்ள தமிழகத்தோடு கூட்டாட்சி அமைத்துக் கொள்ளவேண்டும் என்கிற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் அரும்பியே தீரும். அந்த [illegible]

அங்கே சென்று பிரசாரம் புரிவதற்கு ஏற்ற பக்குவமான நேரம். அப்போதுதான் நாம் அங்கே செல்லவேண்டும்—இப்போதல்ல. இப்போது, அவர்கள் உள்ளமெல்லாம் ஆந்திர மாகாணத்தை அடைவதெப்படி என்கிற ஒரே பிரச்சினையில் ஆழ்ந்துகிடக்கிறது. இப்போது நாம் சென்று திராவிடத் தனியரசு தேவையா என்றால் தேவையில்லை என்றுதான் கூறுவார்கள். இப்போது நாம் அங்கே செல்லவேண்டும்.—அவர்கள் திராவிட நாடு தேவையில்லை என்று கூறவேண்டும்—அதை கொட்டை எழுத்துக்களில் தங்கள் ஏடுகளில் தீட்டிக்காட்டவேண்டும் என்கிற அற்ப ஆசை காரணமாகத்தான், காங்கிரஸ் தோழர்கள் அடிக்கடி நம்மைப்பார்த்து ஆந்திர நாட்டுக்குப் போகவில்லையா போகவில்லையா என்று கேட்டபடி இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் தெளிவாகச் சொல்லிவிட ஆசைப்படுகிறேன்—அண்ணாத்துரை ஏமாளியல்ல—அவன் அவ்வளவு எளிதில் உங்கள் சூழ்ச்சிக்கு ஆளாகிவிடமாட்டான்.

நாம் ஆந்திரம் முதலிய இடங்களுக்குச் செல்லவில்லையே தவிர அங்கெல்லாம் வடஇந்திய சுரண்டலை ஒழிக்கவேண்டுமென்கிற ஆர்வம் இல்லையென்றா கருதுகிறீர்கள்? எந்த ஆந்திரத் தலைவராவது இதுவரை திராவிடத் தனிநாடு வேண்டாம் என்று கூறியதுண்டா—கிடையாதே! கேரளாவில் உள்ள கேரள சோஷலிஸ்ட் கட்சி என்னும் இயக்கம், கேரளம், இந்தியாவை விட்டுப் பிரிந்து, சுதந்தர கேரளமாக (Independent Kerala) விளங்கவேண்டும் என்கிற இலட்சியத்தைத் தன் இருதய கீதமாகக்கொண்டிருக்கிறதே—அந்த எண்ணம் அவர்களுக்கு என்ன நாம் சொல்லிக் கொர்டுத்தாவந்தது? அண்மையில் நேரு கேரளப் பகுதிக்கு வந்திருந்தபோது, ஆலப்புழை என்கிற ஊரில், சுவர்களில் Gujarathis Quit Kerala—குஜராத்திகளே—கேரளத்தை விட்டு வெளியேறுங்கள் என்று எழுதியிருந்ததாமே! பண்டித நேரு அதைப் பார்த்துவிட்டு இப்படியும் எழுதலாமா என்று மனம் பதறிப் பேசியிருக்கிறாரே! கேரளத்திலும் திராவிட இயக்கம் கால் ஊன்றத் தொடங்கிவிட்டது என்பதுதானே இதற்குப் பொருள்? நாம் அங்கெல்லாம் செல்லாத நேரத்திலேயே, நமக்கென்று ஓர் ஆங்கில ஏடு இல்லாத நேரத்திலேயே, நம் எண்ணங்கள் அங்கெல்லாம். இந்த அளவு பரவியிருக்கின்றனவே! தகுந்த நேரத்தில் நாம் அங்கே சென்று பணியாற்றவும் தொடங்கிவிட்டால், திராவிட நாட்டுப் பிரிவினையை அவர்கள் வேண்டாம் என்றா கூறிவிடுவார்கள்?

ஆந்திரத்தார் ஆதரிக்கவில்லை—கன்னடத்தார் காது கொடுத்துக் கேட்கவில்லை—மலையாளத்தார் மனம் ஒப்பவில்லை—இந்நிலையில் தமிழகத்தில் மட்டும் திராவிடத் தனி அரசு பற்றிப் பேசிப் பயன் என்ன என்று சில காங்கிரஸ் நண்பர்கள் பேசுகிறார்கள். அவர்களுக்கு நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். பாகிஸ்தான் கேட்ட ஜின்னா, பம்பாய் வாசி. அதைச் சிறிதளவு மாறுபாடுமின்றி ஆதரித்து நின்ற லியாகத் அலிகான் ஐக்கிய மாகாணக் குடி. அதாவது பாகிஸ்தானத்தைக் கேட்ட இவர்கள் இருவரும் பாகிஸ்தான் பிரதேசத்தைச் சேராதவர்கள் ஆனால் அதே நேரத்தில், பாகிஸ்தானத்தை எதிர்த்து நின்ற அல்லாபக்ஷ் சிந்து மாகாணவாசி. அதேபோல பாகிஸ்தானத்தை எதிர்த்த பஸ்லுல் ஹக் வங்காள மாகாணத்தவர். அதாவது பாகிஸ்தான் கோரிக்கையை எதிர்த்து நின்ற இவர்கள் பாகிஸ்தான் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். பாகிஸ்தான் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்த்தனர். அதிற் சேராதவர்கள்தான் ஆதரித்தனர். என்றாலும் பாகிஸ்தான் கிடைத்திருக்கிறது. இதுபோலத்தான் ஆந்திராவிலோ கேரளாவிலோ இன்று சில பலர் திராவிடக் கூட்டாட்சியை எதிர்த்தபோதிலும், ஆந்திரத் தனி அரசை உள்ளடக்கிய திராவிடக் கூட்டாசி அமையப்போவது உறுதி.

நேற்றையதினம் முன்னுரையிலே தேர்தல் ஒரு மாயக்கள்ளன் என்று குறிப்பிட்டேன். நம்முடைய திராவிடத் தனி அரசு இலட்சியத்தை அந்த மாயக்கள்ளன் களவாடாமல் காக்கவேண்டிய பொறுப்பு உங்களைச் சேர்ந்தது. திராவிடநாடு இலட்சியத்தை ஒப்புக்கொண்டு, நம் உறுதிமொழித்தாளில் கையொப்பமிட்டுத் தந்துள்ள 150 அபேட்சகர்களில், நாம், நம்முடைய ஆதரவைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் என்று தேர்

தெடுத்திருக்கிற 65 தோழர்களின் பெயர்களை மட்டும் இப்போது வாசிக்கிறேன். திராவிடத் தனிநாடு கோரிக்கைக்காகப் பாடுபடுவதாக உறுதி கூறியுள்ள இந்த 65 தோழர்களையும் ஆதரிக்கவேண்டியது நம் தோழர்களின் கடமை. உங்களால் இயன்ற ஆதரவை யெல்லாம், இவர்களுக்குக் கொடுங்கள். ஆனால் அதே நேரத்தில், தேர்தல் அல்ல நம்முடைய முக்கியமான பிரச்சினை திராவிடத்தனி நாடுதான் நம்முடைய அடிப்படை இலட்சியம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

மழை பொழிகிறபோது குடைபிடித்துச் செல்வதுபோல, இந்தத் தேர்தல் பணியில் ஈடுபடுங்கள். அதே நேரத்தில் நம்முடைய அடிப்படை இலட்சியத்தை வெற்றிபுரிக்குக் கொண்டு சேர்க்கும் பொறுப்புடையவர்கள் நீங்கள் என்பதை மறந்துவிடுவது கூடாது.

மேடைமீது என்னைச் சுற்றி அமர்ந்திருக்கும் என் தம்பிமார்களைப் பாருங்கள்—ஒவ்வொருவரும் அறிவின் தூதுவர்கள். ஆற்றலின் சின்னங்கள். இலட்சியக் காளைகள். எதிரே கூடி இருக்கிறது கடல் போன்ற திராவிடக் கூட்டம். இந்தக் கூட்டத்திலே இருப்பவர்கள் அத்தனைபேரும் திராவிடத் தனி அரசு இலட்சியத்திலே அசைக்கமுடியாத நம்பிக்கையும் மாற்றமுடியாத பாசமும் வைத்திருப்பவர்கள் ஆப! சுதந்தர சமதர்ம திராவிடக் கூட்டாட்சி பெறுவதற்காக நாம் பெற்றிருக்கிற பட்டாளம் மகத்தானது. மகத்தான பல வெற்றிகளை நமக்குப் பெற்றுத்தரக்கூடியது "மனோன்மணீயம்" ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் சிறந்ததோர் வாசகத்தை நான் அடிக்கடி கூறுவது வழக்கம் இங்கே கூட்டியுள்ள இரண்டு இலட்சம் திராவிட வீரர்களையும் மேடைமீது அமர்ந்திருக்கும் தம்பிமார்களையும் பார்க்கிறபோது மீண்டும் எனக்கு அந்த வாசகம்தான் கவனத்திற்கு வருகிறது. "இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?"

"மாஜி கடவுளகள்" என்பது பற்றி மாநில மாநாட்டில் விரிவுரை யாற்றிய

இளஞ்சேரு க. அன்பழகன்

மாநாட்டு விளம்பரச் செயலாளரும் சொல்லின் செல்வருமாகிய

முன்னணி வீரர் மு. கருணாநிதி

மகத்தான
4-வது வாரம்!
நாடெங்கும்
நடைபெறுகிறது
அஸ்வினியின்
மாயக்காரி
தமிழ்
நேஷனல்
பிக்சர்ஸ்
சென்னை-1

பதிவு எண் M. 4912

Wrapper Printed at The Modern Printers, Madras 1.